பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 17 வெள்ளிக்கிழமை (02.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 349

MONEY TRANSFER உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :- 021 222 5392

# வடக்கின் பிரச்சினையை நான் தீர்க்கக் கூடாதா?

## எதிர்ப்பை வெளியிடுபவர்களிடம் ஜனாதிபதி காட்டம்



(கொழும்பு)

வடக்கில் அல்லல்படும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாட்டின் ஜனாதிபதியாகவுள்ள நான் முற்படும் போது, சிலர் வீதிக்கு இறங்கி எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பரிக்கின்றனர் எனத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இவ்வாறான எதிர்ப்புக்கள் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்திலும் தொடர்வதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ஓ.சி எரிபொருள் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருட்கள் சிலவற்றின் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக இலங்கையிலுள்ள இந்தியன் எரிபொருள் கூட்டுத்தாபனம் (IOC) அறிவித்துள்ளது.

இறக்குமதிவரிஅதிகமாக உள்ளதன் காரணமாக குறித்த முடிவை எடுத்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் நேற்று தொடக்கம்

24ஆம் பக்கம் பார்க்க...

## அரசியல் கைதி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

போதிய மருத்துவ வசதி கிடைக்காத காரணத்தால்கொழும்பு மகசின்சிறைச்சாலையில் இருந்த அரசியல் கைதி ஒருவர் நேற்றைய தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

அம்பாந்தோட்டை அக்கரைப்பற்றை சேர்ந்த குணரத்தின கஜவீர (வயது 70) என்பவரே மேற்படி உயி

24ஆம் பக்கம் பார்க்க...

## மதுசாரப் பாவனை வடக்கில் அதிகரிப்பு

(கொழும்பு)

வடக்கில் மதுசாரப்பாவனை 400 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரிவித்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க.

2015 ஆம் ஆண்டு தனி நபரின் மதுபான நுகர்வு 5.7 லீற்றர் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற சபை நடவடிக்கையின் நேற்றுக் காலை 9.30 மணிக்கு

24ஆம் பக்கம் பார்க்க...

## கடும் காற்றுடன் மழை நீடிக்கும்



வலுவிழந்தது 'நடா' புயல்

23ஆம் பக்கம் பார்க்க...

## தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் சம்பந்தனுடன் நேற்று சந்திப்பு



24ஆம் பக்கம் பார்க்க...

## 'நடா' புயல் காற்றினால் 57 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நேற்றைய தினம்ஏற்பட்ட கடும் மழையுடனான "நடா" சூறாவளி காற்றினால் 57 குடும்பங்களை சேர்ந்த 159 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும்.

அவசர நிலைமைகள் ஏற்படுமிடத்தில் அதனை கட்டுக்குள்கொண்டு வருவதற்கு படையினர் தயார் நிலையில் உள்ளார்கள் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில,

மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக சாவகச்சேரி பகுதியை சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க...

## நீரில் கழிவு எண்ணெய்க் கலப்பிற்குக் காரணமான நோதேன் பவர் நிறுவன செயற்பாடுகளை இடைநிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பிரதேசத்தில் குடிநீரில் கழிவு எண்ணெய் கலப்பிற்கு காரணமான நிறுவனம் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நோதேன் பவர் நிறுவனத்தின் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மத்திய நிலையம் சார்பாக பேராசிரியர் ரவீந்திர காரியவசம் தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல்மனுவை நேற்று முன தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்சநீதிமன்றம் இந்த இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்திருக்கிறது.

2010ஆம் ஆண்டு சுன்னாகம் பகுதியில்

23ஆம் பக்கம் பார்க்க...

## காற்றினால் மரம் முறிந்து வீழ்ந்ததில் மோ.சைக்கிளில் பயணித்த இளைஞன் பரிதாப மரணம்



24ஆம் பக்கம் பார்க்க...

## கடல்கொந்தளிப்பு

### ஐந்து இந்திய மீனவர்கள் கரையொதுங்கினர்

(கரணவாய்)

கடலில் மீன் பிடிக்க சென்ற ஐந்து இந்திய மீனவர்கள் கடல் கொந்தளிப்பு காரணமாக நேற்றையதினம் பருத்தித்துறைக் கடல் பரப்பில் கரையொதுங்கினர்.

நாகை மாவட்டத்தில் இருந்து மூன்று தினங்களுக்கு முன்னர் தொழிலுக்

23ஆம் பக்கம் பார்க்க...

## யாழில் வரலாறு காணாத கடும் குளிர் நிலவியது

### வெப்பநிலை 16.8 oC – 20 oC வரை பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழில் வரலாறு காணாத கடும குளிரான காறநிலை நிலவிய காரணத்தால் மக்களின் இயல்பு நிலை வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் கருத்து தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாக கடும் குளிரான கால நிலை நீடித்திருந்தது. இதில் நேற்று முன் தினம் அதிகுறைந்த வெப்ப நிலையாக

23ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## கேசவலிங்கம் கோபிநாத்

2016.11.30 அன்று
Nelum Pokuna
Mahinda Rajapaksa Theatre
இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
HND in Construction and the
Built envirement (Civil Engineering)
பட்டம் பெற்றதையிட்டு பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

111/4, நடராசா வீதி
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

வாழ்த்துவோர்
அப்பா, அக்கா, அத்தான்,
மாமி, அண்ணா (சுவிஸ்)

# மின்சாரம் தாக்கி இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

மின்சார தாக்குதலுக்கு உள்ளாகிய இளைஞர் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றைய தினம் வியாழக்கிழமை மட்டுவில் பகுதியில் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. மின்சார சபையால் ஒப்பந்த அடிப்படையில் மின்னிணைப்பு வேலை செய்யும் பணியாளரான மீசாலைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய செந்தூரன் எனும் இளைஞனே மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். பிரஸ்தாப நபர் வீடு ஒன்றில் புதிய மின்னிணைப்பு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மின்சாரத்தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ -31.89)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# பரிசளிப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது

யா/நீர்வேலி சி.சி.த.க பாடசாலை பரிசளிப்பு விழா 02.12.2016 இன்று நடைபெற இருந்தது. காலநிலை சீரின்மை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

**பாடசாலை சமூகம்** (சி-6545)

# English Language

Grade 6 to O/L Cantact :-
**P.N.Shutharson** 0773144527
(6714)

# பாடசாலை அதிபர்களுக்கு...

புதிய பாடத்திட்டம் 2017

சகல வகுப்புக்களுக்குமான
பாடப்பதிவுப் புத்தகங்களை
உடனே பெற்றுக்கொள்ளலாம்.

ஷாம்பவி பதிப்பகம் 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4143, 077 618 4425.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.உசன் இராமநாதன் மகா
வித்தியாலய மாணவனும்
சிவகுமார்-ஜெயதர்சினி
தம்பதிகளின் செல்வப் புதல்வருமாகிய
**சிவகுமார் மயூரிகன்**
2016ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்
பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளை
பெற்று சித்தியடைந்தமையினை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மகிழ்ந்து
வாழ்த்துவோர்:-
S.R.J.சுதன்
மாமா குடும்பம்

# தென்னை நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு

நாற்று உற்பத்திக்காக பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட 40 வருடத்திற்கு மேலான தாய்த் தென்னைகளிலிருந்து பெறப்பட்ட விதை நாற்றுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தரமான தென்னை நாற்றுக்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

நாற்றுக்களைப் பெற விரும்புபவர்கள் உடன் முற்பதிவுகளை மேற்கொண்டு எமது கிராஞ்சி தென்னந்தோட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை:300 நாற்றுக்கு மேல் பெற விரும்புவோருக்கு நாற்று ஒன்றிற்கு ரூபா 100/- உம் இதனை விட குறைவான நாற்றுக்களை பெற விரும்பின் 120/-க்கு விற்பனை செய்ய முடியும்.

**முகவரி:-**
**தி.இராசநாயகம் தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொலைபேசி இலக்கங்கள்:-**0214923118, 0770604950, 0717494370

(சி-6546)

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை ஈஸ்வரன்

### (ஈசன்-மாப்பிள்ளை)

இருபாலையை (ஆசிரியர் கலாசாலை முன்பாக) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஈஸ்வரன் 28.11.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-ராஜேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-மரிய திரேசா தம்பதியரின் மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், லிங்கேஸ்வரி (ஜெகதா-கொழும்பு), ஜெயந்தி (லண்டன்), ஜெகதீஸ்வரன் (பவி-லண்டன்), சத்தீஸ்வரன் (சத்தி-இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிந்துஜானி (சுவிஸ்), கார்த்திகாயினி (பிரான்ஸ்), பிருந்தாபன் (சுவிஸ்), சுஜிந்தன், தாட்சாயினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரன் (விக்கி-சுவிஸ்), சிவரூபன் (ரூபன்-பிரான்ஸ்), பவித்ரா (கொழும்பு), சஞ்சீவன் (கொழும்பு), வைஸ்னியா (லண்டன்) ஆகியோரின் மாண்புமிகு மாமனும், சுவேகா (இத்தாலி), சாருகா (இத்தாலி), சௌமியா (லண்டன்), ரிசிக்கா (லண்டன்), ஜஸ்வின் (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும், லக்ஷிகன் (சுவிஸ்), லோஸ்னிக்கா (சுவிஸ்), விதுஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.12.2016) இன்று வெள்ளிக்கிழமை இருபாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 11.00 மணியளவில் இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விவசாய ஒழுங்கை,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:-குடும்பத்தினர்
0771263693/
0774973183/
0771887325

(6783)

## அதிகாரங்களை அதிகரிப்பதில் கவனம் செலுத்தவும்

# மாகாண சபை நிதியைக் குறைத்து மக்களுடன் விளையாடாதீர்கள்

## மேல் மாகாண முதலமைச்சர் இசுறு எதிர்ப்பு

(கொழும்பு)

**“மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியைக் குறைத்து, மக்களுடன் விளையாட வேண்டாம். அதன் விளைவு, ஆபத்தாக இருக்கும்” என, மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எச்சரிக்கை விடுத்தார். மேலும், “மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை அதிகரிப்பது தொடர்பில், ஜனாதிபதியும் பிரதமரும் கவனம் செலுத்த வேண்டும்” எனவும் அவர் தெரிவித்தார்.**

மேல் மாகாண முதலமைச்சின் காரியாலயத்தில், நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளில் குறைகள் காணப்படுகின்றன”

“அண்மையில் ஒன்றுகூடிய அனைத்து மாகாண முதலமைச்சர்களில் எவரும், தங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வேண்டும் என கேட்கவில்லை. மாறாக, மக்களுக்கு சேவையாற்ற போதுமான நிதியை ஒதுக்கீடு செய்யுங்கள் என்றே கோரினோம்.

ஆனால் நிதி அமைச்சரோ, கூடுதலாக நிதி ஒதுக்கினால், மாகாண முதலமைச்சர்கள் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வார்கள் என சர்வசாதாரணமாக கருத்து வெளியிட்டுள்ளார்.

இக்கருத்து, எம்மில் எந்தளவுக்கு தாக்கம் செலுத்தியிருக்கும் என்பதை அவர் அறிந்திருக்கமாட்டார். இம்முறை மாகாண சபைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில், சுமார் 2,451 மில்லியன் ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டா?, நாங்கள் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ளப் போகிறோம்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

## கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட ஏழு பேரின் பயணத் தடை நீக்கம்

அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பான வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட சந்தேகநபர்கள் 7 பேருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த குறித்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதவான் இதனைத் தெரிவித்தார்.

இவ்வழக்கின் முக்கிய சந்தேகநபர்களாக கருதப்படும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அவன்கார்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஸங்க சேனாதிபதி மற்றும் 3 முன்னாள் கடற்படை தளபதிகள் உள்ளிட்டோருக்கே இவ்வாறு வெளிநாடு செல்வதற்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

அவன்கார்ட் நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தை நடத்திச் செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதி காரணமாக, அரசாங்கத்திற்கு சுமார் ரூபா 11.4 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தே குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-3-10)

## நேர்மையான முறையில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் வெற்றியளிக்கும்

### யாழ். அரச அதிபர் சுட்டிக்காட்டு



நேர்மையான முறையில முன்னெடுக்கும் திட்டங்கள் அனைத்தும் சிறப்பான வெற்றியளிக்கும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் முதன முறையாக “தூய்மையான கிராமம்” எனும் தொனிப் பொருளில் கோப்பாய் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட விசேட செயற்றிட்டத்தின் 7 ஆம் கட்ட நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.தேசிய கல்வியியற கல்லூரி மண்டபத்தில் இடம பெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதியினால் 4 விசேட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு நாடுமுழுவதும் செயறபடுத்தப்பட்டு வருகிறது. போதையற்ற நாடு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், டெங்கு ஒழித்தல், பசுமையான நாடு என பல்வேறு ரீதியல் திட்டங்கள் முன்மாதிரியாகையாக நடைபெறுகிறது.

அந்த வகையில் பல கிராம உத்தியோகத்தர்கள் சிறப்பாக செயற்பட்டு வருகிறார்கள் இருப்பினும் பலர் வெளிப் படைத்தன்மை இல்லாமல் உள்ளார்கள். அதனால் பல கிராமங்களில் பிரச்சினைகளை காணக்கூடியதாக உள்ளது.

எம்மிடம் பல வசதிகள் இருக்கின்றன. ஆனால் அதை சரிவர பயன்படுத்துவதல்லை பலரிடம் வெளிப்படைத்தன்மை இல்லை. அனேகமான உத்தியோகத்தர்கள் சேவை மனப்பாங்கு அற்றவர்களாக இருப்பதனை காணமுடிகிறது. அதனால் வெளிப்படைத்தன்மை இல்லாதவர்களாக உள்ளார்கள்.

நேர்மையான முறையில நாம் எடுக்கும் முயற்சி நிச்சயமாக வெற்றியளிக்கும். எங்கும் நேர்மையான செயற்பாடுகளை முன்னெடுத்தால் எமக்கு அப்பால் உள்ள சத்தி அதை கொண்டுநடத்துனையாக இருக்கும்.

திட்டங்களை சிறப்பாக செய்ய வெளிப்படைத்தன்மையுடன் இருக்கவேண்டும் மக்களை அன்பால்வழிநடத்தவேண்டும்.

சுகாதார கிராமம் என்ற திட்டத்தை அனைவருடன் சேர்ந்து முன்னெடுப்பது இலகுவான விடயம் அல்ல ஒற்றுமையுடன் அனைத்து தரப்பினரும் முன்னெடுத்தால் மட்டுமே இவ்வாறு வெற்றியடைய செய்ய முடியும். இத்திட்டத்தை மற்ற கிராம உத்தியோகத்தரகள் முன்மாதிரியாக செயற்படுத்த வேண்டும். எல்லோரும் ஒன்றிணைந்து செய்தால் சிறப்பான மாவட்டமாக எமது மாவட்டத்தை உருவாக்க முடியும்.

யாழ்.மாவட்டத்தில் 435 கிராம உத்தியோகத்தர் பிரிவு உள்ளன. அனைத்திலும் இவ்வாறான செயற்பாடுகளை செய்தால்ஏழைகளின்வாழ்க்கையில் ஒளியேற்ற முடியும்.

ஒவ்வொரு வருடமும் பெரும் எண்ணிக்கையான மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன எனவே நாம் ஒவ்வொரு வருடமும் மரங்களை நாட்ட வேண்டும்.

எமது மாவட்டத்தில் பொருமளவில் பனை மரங்கள் அழிக்கப்படுகின்றன. இந்த வருடம் 4 ஆயிரம் வீடுகளுக்காக 24 ஆயிரம் மரங்கள் சட்டபூர்வமாக தறிக்கப்பட்டுள்ளன.

ஆகவே எமது தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காகவும் மரங்களை நாட்ட வேண்டும். அதற்கு தொடர்ச்சியான பராமரிப்பு அவசியம்.

உணர்வு பூர்வமாக செய்யும் செயற்பாடுகள் வெற்றி பெறும். அரச அதிகாரிகள் தமது திட்டங்களை சரியான முறையில் ஒழுங்காக செய்தால் ஏழைகளின் அவர்கள் வாழ்வில் ஒளி பிறக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இலங்கையில் மெய்யான சமாதானம் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



இலங்கையில் மெய்யான சமாதானம் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள், படைவீரர்கள் அர்ப்பணிப்புடன் பௌதீக ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும் மெய்யான சமாதானம் கட்டியெழுப்பப்படவில்லை.

யுத்தம் காரணமாக பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர். இது நாட்டுக்கு பாரிய இழப்பாகும். நாட்டை பிளவடையச் செய்யும் எண்ணக்கரு என்று நாட்டை விட்டு முழுமையாக இல்லாதொழிக்கப்படுகின்றதோ அப்போதே யுத்தம் வெற்றியீட்டப்படும்.

புதிய அரசியல் சாசனம் நாட்டை பிளவடையச் செய்யும் வகையில் அமைந் துள்ளதாக பல்கலைக்கழக மாணவர்கள், பௌத்த பிக்குகள் மற்றும் வெளிநாட்டில் வாழ்ந்து வருவோரிடம் பிரசாரம் செய்யப்படுகிறது.

ஆனால் வழங்கப்படும் தீர்வு அனைத்து தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமைய வேண்டியது அவசியமானது என்வும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த காலத்தில் தேசியப் பிரச்சினை தொடர்பில் ஒரு விதமாகவும், ஆட்சி அதிகாரத்தில் இல்லாத போது வேறுவிதமாகவும் நிலைப்பாடுகளைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு மகிந்தவிற்கு அழைப்பு விடுப்பதாகத் தெரிவித்துள்ள அவர் வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உள்ள சிறந்த தலைவர் இரா. சம்பந்தன் ஆவார் எனவும் தெரிவித்தார். (இ-3-10)

## முக்கியஸ்தர்களின் வாகனங்களையும் சோதனையிடுமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

பிரதான விளக்கை எரிய விட்டு பயணிக்கும் முக்கியஸ்தர்களின் வாகனங்களை சோதனைக்கு உட்படுத்துமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வீதி பாதுகாப்பு வாரத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது தீவிரவாதப் பிரச்சினை நாட்டில் இல்லை என்பதால், ஏழு அல்லது எட்டு வாகனங்கள் சூழ பயணிக்க வேண்டிய தேவை இல்லை என, தான் கடந்த அமைச்சரவை கூட்டத்தில் சுட்டிக் காட்டியதாகவும், இதன்போது தமக்கு பின்னால் ஒரு பாதுகாப்பு வாகனம் மட்டுமே வந்தால் போதும் என அமைச்சர்கள் இணங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஏழு அல்லது எட்டு வாகனங்கள்புடைசூழ பயணிக்கும் முக்கியஸ்தர்களின் வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாடு, வலது, இடது பற்றி பிரச்சினையில்லை என கூறிய ஜனாதிபதி, அதனால் இது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவுரை வழங்கியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை, இதுபோன்று பயணிக்கும் வாகனங்களின் பின்னால் செல்வது வெலே சுதாவா, ஆமி சம்பத்தா என்பது யாருக்கும் தெரியாது எனவும் குற்றவாளிகளும் இதுபோன்ற பாதுகாப்புடன் பயணிக்க வாய்ப்புள்ளதாகவும் எனவே இது பற்றி ஆராய வேண்டும் எனவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (இ-3-10)

# மக்களிடம் பேசும் போது சுயநிர்ணயம், சமஷ்டி, இறைமை; அரசாங்கத்துடன் பேசும் போது ஒற்றை ஆட்சிக்கு தயார்!

## த.தே.கூட்டமைப்பின் நிலைப்பாட்டை சாடுகிறது த.தே.ம முன்னணி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தமிழ் மக்கள் இறைமையை கோரவில்லை என பாராளுமன்றத்தில் கூறியதன் மூலம் ஒற்றையாட்சியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளமை உறுதியாகின்றது என தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 50 வருட காலத்திற்கும் மேலான தமிழர்களின் கோரிக்கையை நிராகரிக்கும் கூட்டமைப்பு தொடர்பில் அவதானமாக மக்கள் இருக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) பாராளுமன்றத்தின் வெளிவிவகார அமைச்சின் வரவு செலவு திட்டத்தின் மீதான குழுக்களின் விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தின் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுமந்திரன் கட்சி சார்பாக அரசியல் தீர்வு சம்பந்தமாக பேசியிருந்தார். அது சம்பந்தமாக மக்களுக்கு தெளிவான விடயங்களை சுட்டிக் காட்ட வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடந்த தேர்தல்களின் போது ஒரு சமஷ்டி ஆட்சி முறையை தாம் கோருவதாகவும் அந்த ஆட்சி முறை பகிரப்பட்ட இறைமையின் அடிப்படையில் இருக்க வேண்டும் எனவும் கோரி வந்தனர். இது தவிர அண்மைக்காலமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் தீர்வு விடயமாக கருத்துக்கள் கூறும் போது, தமிழ் மக்களின் இறைமையின் அடிப்படையில் தீர்வு வர வேண்டும் என வலியுறுத்தி வந்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை பொறுத்த வரையில் பகிரப்பட்ட இறைமையின் அடிப்படையில் தான் எமக்கு தீர்வு வர வேண்டும் என்ற கருத்தில் நாம் உடன்படவில்லை. 1951 ஆம் ஆண்டு தமிழரசு கட்சி உருவாக்கப்பட்டதிலிருந்து தமிழ்த் தேசத்திற்கு என தனித்துவமான இறைமை உண்டு அது எங்களின் பிறப்புரிமை என வலியுறுத்தப்பட்டு வருகின்றது. தேசம் என அங்கீகாரத்தை கோரும் ஒரு இனம் இயல்பாகவே இறைமையை கொண்டிருக்கும்.

பறிக்கவே முடியாத எங்களின் இந்த உரிமை அங்கீகரிக்கப்பட்டு சிங்கள தேசத்தோடு சேர்ந்து இணைந்து அந்த இறைமையை கூட்டி ஒரு நாட்டிற்குள் இணைந்து நாங்கள் வாழ தயார் என்ற நிலையில் தான் தமிழ்த் தேசிய அரசியல் இந்தளவு காலமும் வளர்ந்து வந்தது. ஆனால் வெளிவிவகார அமைச்சின் நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்ட சுமந்திரன் தாம் இறைமையை கோரவில்லை என கூறியுள்ளார். அரசியல் அமைப்பு உருவாக்கம், நல்லிணக்கம், பொறுப்பு கூறல் ஆகிய மூன்று முக்கியமான விடயங்கள் இந்த அமைச்சுக்குள் தான் வருகின்றது.

இவ்வாறான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சின் விவாதத்தில் கலந்து கொண்டு தமிழர்கள் இறைமையை கோரவில்லை எனவும், இறைமையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரவில்லை எனவும் சுமந்திரன் கூறியுள்ளார். இதற்கு மேலாக சென்ற அவர் இறைமையை பகிர்ந்து கொள்ளலாம் அப்பிடி இருக்கவும் நாங்கள் அதனை கோரவில்லை என கூறியுள்ளார். இது மிக முக்கியம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களிடம் தொடர்ச்சியாக கூறி வரும் விடயம் என்னவென்றால், தாம் ஒற்றை ஆட்சியை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதுதான்.

ஆனால் சுமந்திரன், ஒற்றையாட்சிக்கு தாம ஆதரவு வழங்க தயார் என தனது பேச்சின் மூலம் சட்டரீதியாக நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். எமது மக்களின் உரிமையை கோரவேண்டிய பாராளுமன்றத்தில் மக்களின் ஆணைக்கு எதிராக சுமந்திரன் இவ்வாறு கூறியுள்ளார். 2010ஆம் ஆண்டு நாம் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற போது, தேர்தல் காலத்தில் மாத்திரம் தான் கூட்டமைப்பின் செயற்பாடு அமையும் என மக்களிடம் அவதானமாக இருக்குமாறு கூறியிருந்தோம்.

தமிழ் மக்கள் பேரவை தீர்வு யோசனை ஒன்றை முன்வைத்த வேளை அந்த தீர்வு யோசனை மக்களிடம் கொண்டு செல்லப்படும் நிலையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தீர்வு விடயத்தில் உறுதியாக இருக்கின்றார்கள் என மக்களை ஏமாற்றும் வகையில் தீர்வு யோசனை ஒன்றை முன்வைத்தார்கள். ஆனால் மக்களிடம் பேசும் போது தான் சுய நிர்ணயம், சமஷ்டி, இறைமை என்றெல்லாம் பேசுகின்றார்கள். ஆனால் நடைமுறையில் சட்டரீதியாக இந்த கொள்கைகளுக்கு எதிராக தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு செயற்படுகின்றது. இது தொடர்பில் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

மேலும் ஒற்றையாட்சிக்குள் அதிகார பரவலாக்கம் செய்யலாமே ஒழிய, ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி இருக்க முடியாது. பிரித்தானியாவில் பாராளுமன்றம் தான் இறைமையை கொண்டுள்ளது. ஆனால் அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கென்று இறைமை கிடையாது. பிரித்தானிய பாராளுமன்றம் தமக்குள் இறைமை உள்ளது போன்ற விட்டுக்கொடுப்பையே செய்கின்றது. இவ்வாறான விட்டுக் கொடுப்பை எந்தளவு காலம் இருக்கும் என நம்பமுடியாது என கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்தார். (செ-4)

# பிளவுபடுத்தப்பட முடியாத நாட்டிற்குள் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும்

## விட்டுக் கொடுப்பை பலவீனமாக கருதக் கூடாது-சுமந்திரன்

(கொழும்பு)

பிளவுபடுத்தப்பட முடியாத ஒரேநாடு என்ற ஏற்பாடு அரசியலமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதுடன், ஒரே நாட்டுக்குள் நிர்வாக அதிகாரங்களைப் பகிரப்படவேண்டும் என தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் விட்டுக்கொடுப்புகளை பலவீனமாக அர்த்தப் படுத்திக் கொள்ளக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற, வெளிவிவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கையும் இணை அனுசரணை வழங்கியுள்ளது. இன்று உலகில் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் ஏற்கெனவே வழங்கியுள்ள உறுதிமொழிகளில் இருந்து தப்பித்துவிடலாம் என்று கருதினால் அது தப்பாகிவிடும். ஏனெனில், மேற்படி தீர்மானமானது எம்மீது திணிக்கப்பட்டதல்ல. நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல்வேறு விடயங்களை நிறைவேற்றுவதாக உறுதியளித்து நாமே அதற்கு இணை அனுசரணை வழங்கியுள்ளோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற விடயங்களின் மீள்நிகழாமையை உறுதிபடுத்த கடந்தகால விடயங்கள் பற்றிய மீளாய்வு தேவையாக இருக்கிறது. அந்தவகையில், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளமையை வரவேற்கிறோம். எனினும், அடுத்த நகர்வில தாமதம் நிலவுகிறது. இவ்வாறான தாமதங்களை காலத்தை கடத்தி தப்பிப்பதற்கான வழியாக சிலர் கருதுகின்றனர்.

சகல மக்களும் சம உரிமை மற்றும் அந்தஸ்துடன் வாழ்வதற்கான நல்லிணக்கம் அவசியமாகும். எனினும், அனைத்தும் உடனடியாக நடந்துவிடும் என்று கூற முடியாது. தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. முதலாவதாக அதற்கு அரசியலமைப்பொன்றை இயற்றவேண்டும். அதன் பின்னர் யுத்தத்தின் விளைவாக உருவான பல விடயங்கள் தீர்க்கப்படவேண்டியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கான உறுதிமொழிகளை நிறைவேற்ற நாம் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்போம். அந்தவகையில், அரசியலமைப்பு இயற்றல் நடவடிக்கையை தற்போது மையஸ்தானத்தை அடைந்துள்ளது. இதுவரை 44 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. 6 உப குழுக்களின் அறிக்கைகள் அரசியலமைப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்தநாட்டில் யுத்தம் உருவானமைக்கான அடிப்படை காரணங்கள தீர்க்கப்படவேண்டும். புதிய அரசியலமைப்பு இயற்றப்பட்டதன் பின்னர் நிறைவேற்றப்பட வேண்டிய ஏனைய விடயங்களும் இருக்கின்றன. அரசியலமைப்பு நடவடிக்கையின் மூலம் ஏனைய விடயங்களை நிறைவேற்றாமல் ஏமாற்றிவிடலாம் என்று அர்த்தப்படுத்துவதற்கோ அல்லது தட்டிக்கழிப்பதற்கோ எமது ஆதரவை பயன்படுத்த முயற்சிக்கக்கூடாது.

13ஆவது அரசியலமைப்பு அமுலாக்கத்திலும் இவ்வாறான விடயங்கள் தான் இடம் பெற்றிருந்தன. ஒரு இலட்சத்துக்கும் அதிகமான எமது மக்கள் பலியானது 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டதன் பின்னரே தவிர அதற்கு முன்னரல்ல. 13ஆவது திருத்தத்தை முழுமையாகநடை முறைப்படுத்துவதற்காக இத்தகைய தியாகங்களைச்செய்யவில்லை.

பிரச்சினை என்பது விடுதலைப் புலிகள் கிடையாது. விடுதலைப் புலிகள் என்பது இந்த பிரச்சினையின் வெளிப்படாக இருந்தது. ஆகையால், அவர்கள் தற்போது இல்லாமையினால் இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாக அர்த்தம் கிடையாது. பிரச்சினையின் வெளிப்பாடுமட்டுமே அதன்மூலம் இல்லாமல் போயுள்ளது. பயங்கரவாதம் மட்டுமே பிரச்சினை கிடையாது. அதுமுடிந்துவிட்டது என்று அர்த்தப்படுத்தினால் அதுதவறாகும்.

நாம் விட்டுக்கொடுப்புகளைசெய்கிறோம். எனினும்.அடிப்படையில் மக்களின் அபிலாஷைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. இணக்கப்பாடொன்றுஅவசியம் என்பதனாலேயே நாம் இந்த விட்டுக்கொடுப்புகளை செய்கிறோம். இதை பலவீனமாக எடுத்துக் கொண்டால் அது தவறாகும் என்றார் சுமந்திரன். (செ-11)


## மரண அறிவித்தல்

## சந்திரகுமார் விமலா



புத்தூர் வடக்கு வேம்பாப்புலத்தை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி வீதி, தொண்டமனாறை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரகுமார் விமலா என்பவர் 01.12.2016 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தியாகராசா-செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், சந்திரகுமாரின் அன்பு மனைவியும், நர்மிகா, சபீனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், லதா, விஜயபவன், ஜெயபவன், கவி (வீடியோ அன் போட்டோ) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.12.2016 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தொண்டமனாறு காட்டுப்புலம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் வடக்கு,
வேம்பாப்புலம்.

தொடர்புகளுக்கு:-
0776341392, 0776623790

தகவல்:
குடும்பத்தினர்.

(6784)



## கண்ணீர் அஞ்சலி




எமது கல்லூரி ஆசிரியர்
திரு.இ.கிருஸ்ணானந்தன்
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
திருமதி இ.யோகரத்தினம்
அவர்களின் மறைவையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

(6782)

# மானிடர் போற்றும் கொடைவள்ளல்
# "சமூக ஜோதி"
## உயர் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின்
# 6வது அகவை
## 02.12.2016



# தீவகப்பகுதி மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு மாலை நேர வகுப்புக்கள்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா நடவடிக்கை





(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு பாடசாலை முடிவுற்றதும் மாலை நேர வகுப்புக்களை கோட்டக்கல்வி பணிமனைகள் ஊடாக ஆரம்பிக்கவுள்ளதாக சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மேற்குறித்த தீவுகளுக்கு சென்ற அமைச்சர் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கி வைத்தார். இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இப் பகுதி மாணவர்கள் கல்வியில் உயர்நிலைக்கு செல்ல பாடசாலை முடிவுற்றதும் மாலை நேர இலவச வகுப்புக்களை நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய தீவுகளில் நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

இதனை எமது கோட்டக் கல்வி அதிகாரிகள் ஊடாக முன்னெடுக்க உள்ளோம். எனது சொந்த நிதியில் தான் இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளேன். இந்த வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகும்.

மேலும் இந்தப் பகுதி மாணவர்களுக்கு தொழில்நுட்ப ஆசிரியர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியர்கள் இல்லை.

இந்த பாட ஆசிரியர்களை கட்டாயம் நியமிக்க வேண்டும். இதனை எங்களுடைய மாகாண சபை முன்னெடுக்கவேண்டும். இம்முறை ஒதுக்கப்பட்ட நிதியில் எமது மாகாண கல்விக்கு தான் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு பிரதேசம் முன்னேற வேண்டுமானால் தொழில்நுட்பத் துறையில் முன்னேற்றமடைவது அவசியமானதாகும். இங்கு காணப்படும் கணனிகள் 20 வருடங்களுக்கு மேலானதாகவே உள்ளன.

எனவே இவற்றை உபயோகப்படுத்தப்பட முடியாத நிலையில் அவர்களுக்கு புதிய கணனிகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய கடமை வடக்கு மாகாண சபைக்கும் எமக்கும் உள்ளது.

வடமாகாண சபை சுகாதாரம், கல்வி வசதியை வழங்க வேண்டும். இங்கு கடமையாற்ற முன்வரும் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே தீவக வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும். இவர்கள் கட்டாயம் கஷ்டப்பட்ட மாணவர்களை கல்வியில் உயர்த்த வேண்டும். இது தவிர இங்கு வரும் அரச அதிகாரிகளுக்கு விடுதிகள் அமைத்து கொடுக்க வேண்டும்.

இந்த அரசின் ஊடாக இவ்வாறான பிரதேசங்களை கட்டியெழுப்ப திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)




# 52 ஆவது ஆண்டில் திருமறைக்கலாமன்றம்

ஆயிரக்கணக்கான கலைஞர்களின் உருவாக்கற்களமாக, தமிழ்க் கலைகளின் காப்பரணாக, இன,மத,மொழி பேதங்களைக் கடந்த மானுடர்களின் ஒன்றுபட்ட இணைவின் விளைநிலமாக விளங்கும் திருமறைக் கலாமன்றம் என்ற கலை நிறுவனம் நாளை 03-12-2016 சனிக்கிழமை 52 ஆவது ஆண்டில் கால் பதிக்கின்றது.

இதனை முன்னிட்டு நாளை காலை 7.15 மணிக்கு புதுமை மாதா ஆலயத்தில் இடம்பெறும் சிறப்பு பிரார்த்தனை நிகழ்வைத் தொடர்ந்து யாழ். திருமறைக் கலாமன்ற பணிமனையில் அங்கத்தவர்களுக்கான ஒன்றுகூடல் இடம்பெறும்.

இந் நிகழ்வில் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, இன்று முதல் எதிர்வரும் ஆறாம் திகதி வரை கொழும்பிலும் கண்டியிலும் இடம்பெறும் சர்வதேச நாடுகள் பங்கு கொள்ளும் 'நட்டாண்டா' சர்வதேச நடன விழாவில் திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'பிரணவ' என்னும் நடன நிகழ்வு நாளை மாலை 6.30 மணிக்கு கொழும்பில் உள்ள தாமரைத்தடாக அரங்கில் இடம்பெறும். (இ-10)

# ஆவணக் காப்பகத்தின் 2வது கருத்தரங்கு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆவணக் காப்பகத்தின் சமகால கலை, கட்டக் கலை மற்றும் வடிவமைப்புக்கான 2 ஆவது கருத்தரங்கு நிகழ்வு நாளை மறுதினம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எதிர்வரும் 5 ஆம் 6ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பாகிஸ்தானியக் கலைஞர் இஃதிகார் டாடியுடன் (IFTIKHAR DADI) உரையாடல் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரைகைவினை பற்றி குமாரசுவாமி உரை நிகழ்த்துவார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நவீனத்துவமும் அதனைத் தொடர்ந்த கேள்விகளும் பற்றிய (கட்டண உரை -150 ரூபா) உரை இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கலைஞர் உரை இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுகள் யாவும் இல. 199 , கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் கலை ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயனடையுமாறு இலங்கை ஆவணக் காப்பக முகாமையாளர் விமலா வேல்தாஸ் அறிவித்துள்ளார். (இ-3)

# 'மனவானின் மழைத்துளிகள்' கவிதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் தாய்சக்தி கலைக் கூடத்தின் ஏற்பாட்டில் கவிஞர் வேலணையூர் சுரேஷின் மனவானின் மழைத் துளிகள் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவும் திருக்கேதீச்சரம் சிவனருள் இல்லம் உருவாக்கிய அம்மை அப்பன் அருட்பாமாலை இறுவெட்டு அறிமுகமும் நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் கம்சியா மண்டபத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கௌரவ விருந்தினர்களாக புளியங்கூடல் இராஜமகாமாரி அம்மன் ஆலய அறங்காவலர் சி.செந்தூரன், புதிய நதியா நகை மாட உரிமையாளர் ச.ஜெகதீஸ்வரன், நோபிள் பேப்பர்ஸ் இன்ரர்நஷனல் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் ச.சண்முகானந்தன், கு.சிறீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆசியுரையையும், தீவகம் வடக்கு கலாசார பேரவை உபதலைவர் க.ஜெயக்குமார் தலைமையுரையினையும் ஓய்வுநிலை விரிவுரையாளர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு வாழ்த்துரையினையும் வலம்புரி நாளிதழ் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் சிறப்புரையினையும் வழங்கவுள்ளனர்.

மேலும் கவிதை நூலின் மதிப்பீட்டுரையினை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் சோ.பத்மநாதன், அம்மை அப்பன் பாமாலையின் மதிப்பீட்டுரையினை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் உபஅதிபர் லலீசன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (இ-3)

# கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

பிரான்பற்று மார்க்கண்டு சுவாமிகள் சபையால் நடத்தப்படும் மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை, அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை விழா, பரிசளிப்பு விழா என்பன நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மார்க்கண்டு சுவாமிகள் மன்றபத்தில் ந.சண்முகராஜா தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு ஆயுர்வேத வைத்திய பொறுப்பதிகாரி திருமதி பவளராணி செல்வராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)



யாழ்.கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் புத்தூர் கிழக்கு ஜே/278 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கான டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த 25 ஆம் திகதி கிராம சேவையாளர் கோபாலதாஸ, சுகாதார பரிசோதகர் அனுஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் அச்சுவேலி பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொலிஸ் சிவில் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்கள், இன்னும் பல அமைப்புக்களை சேர்ந்த 30 பேர் கலந்து கொண்டனர். தொடர்ந்து அக் கிராமங்களையும் பார்வையிட்டு துண்டுப் பிரசுரங்களையும் வழங்கி மக்களுக்கு விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தினர். டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு கழிவுப்பொருட்கள் உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டு அகற்றப்பட்டு அழிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கமல்ஸ்ரோன், ஏரம்பு உயிரிழப்பு; சட்டவைத்திய அதிகாரி சாட்சியம்

பாரமான ஆயுதத்தின் தாக்குதலால் ஏற்பட்ட காயத்தினால் கமல்ஸ்ரோனும் அதிகளவு இரத்தப் போககு ஏற்பட்ட காரணத்தால் ஏரம்பு பேரம்பலமும் உயிரிழந்துள்ளார்கள் என யாழ்.போதனா வைத்தியசாலை சட்டவைத்திய நிபுணர் உருத்திர பசுபதி மயூரன் மன்றில் சாட்சியமளித்துள்ளார்.

ஊர்காவற்றுறை பகுதியில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மீது தாகுதல் மேற்கொண்டமை தொடர்பான வழக்கின் சாட்சியங்களுக்கான பதிவு விசாரணை 8 ஆம் நாளாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்றில் நடைபெற்றது.

அந்த வழக்கில் மேற்குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் காயப்பட்டவர்களின் சட்ட வைத்திய அறிக்கையை தயாரித்திருந்த சட்டவைத்திய அதிகாரி எஸ்.பி.ஸ்ரீசவராயேஸ்வர் உயிரிழந்துள்ள நிலையில் அவருக்கு பதிலாக உள்ள நிபுணத்துவ சாட்சியாக அவர் மன்றில் சமுகமளித்திருந்தார்.

மேற்குறித்த அறிக்கையை மன்றில் சமர்ப்பித்து சாட்சியம் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் சாட்சியமளிக்கையில்,

கடந்த 2011 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த யோகலிங்கம் கமல்ஸ்ரோனின் பிரேத பரிசோதனை அறிக்கை மூலப்பிரதியில் அவரின் தலையில் பாரமான ஆயுதத்தால் ஏற்படுத்தப்பட்ட காயத்தினால் மூளையின் உட்பகுதியில் இரத்தக்கசிவும் சிதைவும் என்பு முறிவும் ஏற்பட்டுள்ளதுடன் மூளையில் ஏற்பட்ட அதிர்ச்சியால் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏரம்பு பேரம்பலம் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை மூலப்பிரதியில் அவரது வலது முழங்கையின்முற்பகுதியில்கூரிய ஆயுதத்தால் பாரிய வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. உடலில்குருதியின்அளவு குறைவடைந்து அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் அவர் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்குறித்த சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 8 ஆம் சாட்சியான சிவாஜிலிங்கத்தின் சட்ட வைத்திய அறிக்கையில் 10 காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் கொடூரமான காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அதேபோன்று அன்றைய சம்பவத்தில்காயமடைந்தவர்களான ஏனைய 19 பேருடைய சட்ட வைத்திய அறிக்கையினையும் மன்றில் சமர்ப்பித்து சாட்சியம் அளித்திருந்தார்.

அத்துடன் 19,20,27,41 ஆவது சாட்சிகள் மன்றில் சமுகமாகியிருந்தனர். அன்றைய தேர்தல் பிரசாரத்துக்காக சென்ற வாகன தொடரணியில் சாரதிகளாக சென்ற இருவருடைய சாட்சியங்கள் மன்றில் பதிவு செய்யப்பட்டன.

மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய 4 சாட்சிகள் தற்போது குறித்த முகவரியில் இல்லை என்பதை உறுதிப்படுத்தி அழைப்பு கட்டளை தொடர்பான அறிக்கை குறித்த கிராமசேவகரால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் மேற்குறித்த வழக்கின் 5 ஆவது சாட்சியான சின்னத்துரை சுரேந்திரகுமார், 21 ஆவது சாட்சியான அன்ரன் யோகானந்தம் ரஞ்சன் ஆகியோருக்கு மன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் உடனடியாக மன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.(இ-9)

## தொடர்கின்றது சீரற்ற காலநிலை

# வள்ளுவர் பண்ணையில் 90 குடும்பங்கள் பாதிப்பு; போக்குவரத்து துண்டிக்கப்படும் அபாய நிலை

## கிளிநொச்சி இடர்முகாமைத்துவ நிலையம் தயார் நிலையில்



கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் சீரற்ற காலநிலையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நேற்று முன்தினம் மாலை முதல் கடும் குளிருடனான காலநிலை தொடர்கின்றது. அதேவேளை தொடர் மழையும் குளிர் காற்றும் வீசி வருகின்றது.

கடும் குளிர் காரணமாக மக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். பூநகரி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை மீன்பிடிக்குச் சென்ற மீனவர்கள் மூவர் காணாமல் போன நிலையில், நேற்று பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது. மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் மீறி மீன்பிடிக்கு சென்றவர்களே இவ்வாறு காணாமல் போனதாக கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரி சூரிய ராஜா தெரிவிக்கின்றார்.

கடும் மழை காரணமாக ஊற்றுப்புலம்பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பாலத்தின் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பகுதியில் அமைக்கப்பட்ட தற்காலிக பாதையும் அரிப்புக்குள்ளாகி உள்ளது. இதன் காரணமாக வள்ளுவர் பண்ணையை சேர்ந்த 90 குடும்பங்களை சேர்ந்த 500 இற்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறித்த பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்படும் அபாயம் உள்ள நிலையில், மக்களின் போக்குவரத்து பாதிக்கப்படாதவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரி தெரிவிக்கின்றார்.

இதுவரை எந்தவொரு இடைத்தங்கல் முகாம்களும் உருவாகவில்லை என்பதுடன், தொடரும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுவதற்கு இடர் முகாமைத்துவ நிலையம் தயாராக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15-312)

கேலிச்சித்திரம்




# உப்பளங்களை தனியார்மயப்படுத்தல்; எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பிற்போடப்பட்டது

கிளிநொச்சி, ஆனையிறவு மற்றும் குறிஞ்சாதீவு உப்பளங்கள் தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆனையிறவு உப்பளத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணம் குறித்த எதிர்ப்பு நடவடிக்கை தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

விரைவில் பிறிதொரு தினத்தில் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று இடம்பெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-312)

## இராசி பலன்

02.02.2016

(கார்த்திகை 17, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

திருதியை முன்னிரவு 10.48 மணிவரை

பூராடம் முழுவதும்

சுபநேரம் 6.15-7.45 மணிவரை

இராகுகாலம் 10.45-12.15 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை | | |
| செவ் | | | ராகு |
| புத<br>சுக்<br>சந் | சூரி<br>சனி | | குரு |

**மேடம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், ஆரோக்கியம் சீராகும்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் கோபமாகப் பேசி பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை அமையும், பிரயாண பயமுண்டு.

**மிதுனம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**சிம்மம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், எதிர்பாராத உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி தரும், உங்களின் கருத்தை மற்றவர்கள் ஏற்பர்.

**தனுசு:** தெய்வ சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சுபவிரயங்கள் கூடும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கும்பம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு உயரும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

# ஒன்பது பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் நீர்வரத்தும் மழைவீழ்ச்சியின் அளவுகளும்

## இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் அறிவிப்பு

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட ஒன்பது பெரிய நீர்ப்பாசனக் குளங்களுக்கும் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 6 மணிவரை கிடைக்கப் பெற்ற நீர்வரத்தின் அளவையும் மற்றும் கிடைக்கப் பெற்ற மழை வீழ்ச்சியின் அளவையும் இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.**

இதற்கமைய 25 அடி கொள்ளளவுடைய அக்கராயன் குளத்திற்கு 18 அடி 8 அங்குலமாகவும் 36 அடி கொள்ளளவுடைய இரணைமடு குளத்திற்கு 13 அடி 3 அங்குலமாகவும் 10 அடி கொள்ளளவுடைய கரியாலை நாகபடுவான் குளத்திற்கு ஆறு அடியாகவும் 24 அடி கொள்ளளவுடைய கல்மடு குளத்திற்கு 14 அடி 4 அங்குலமாகவும் 10 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கனகாம்பிகைக் குளத்திற்கு 10 அடி 7 அங்குலமாக நீர்வரத்து கிடைக்கப் பெற்று ஒரு அங்குல உயரத்திற்கு வான் பாய்கின்றது.




19 அடி கொள்ளளவுடைய முறிப்புக் குளத்திற்கு 19 அடி ஒரு அங்குலமாக நீர்வரத்து கிடைக்கப் பெற்று ஒரு அங்குல உயரத்திற்கு வான்பாய்கின்றது.

9அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய வன்னேரிக்குளம் 9 அடி 6 அங்குலமாக நீர்வரத்து கிடைக்கப் பெற்று வான் பாயும் நிலையில் உள்ளது.

8அடி 9 அங்குலம் கொள்ளளவுடைய முறிப்பு குளத்திற்கு 8 அடி 9 அங்குலமாக நீர்வரத்து கிடைக்கப் பெற்று வான் பாயும் நிலையை எட்டியுள்ளது.

இதேவேளை 12அடி கொள்ளளவுடைய பிரமந்தனாறு குளத்திற்கு 7 அடி 11 அங்குலமாக நீர்வரத்து கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் அக்கராயன் குளம் நீரேந்து பிரதேசத்தில் 36.3 மில்லிமீற்றராகவும் இரணைமடு நீரேந்து பிரதேசத்தில் 41.1 மில்லிமீற்றராகவும் கரியாலை நாகபடுவான் குள நீரேற்று பிரதேசத்தில் 28.3 மில்லி மீற்றராகவும் மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளதாக இரணைமடு நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் அவித்துள்ளார். (2-15)

# மாவீரர் குடியிருப்பு மக்களுக்கு நல்லின யமுனாபாரி ஆடுகள்

## அமைச்சர் ஐங்கரநேசன் வழங்கி வைத்தார்






முல்லைத்தீவில் மாங்குளம் - துணுக்காய் வீதியில் அமைந்துள்ள மாவீரா குடியிருப்பு மக்களுக்கு வடக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சால் நல்லின ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் வடக்கு கால்நடை அபிவிருத்தித்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நல்லின யமுனாபாரி ஆடுகளை வழங்கி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சு பின்தங்கிய ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து அங்கு வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு நல்லின ஆடுகளை வழங்கும் தகர் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் முல்லை. மாவீரர் குடியிருப்புப் பகுதி தெரிவு செய்யப்பட்டு நல்லின யமுனாபாரி ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாங்குளம் - துணுக்காய் வீதியில் அமைந்துள்ள மாவீரர் குடியிருப்பு மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே முதற்கட்டமாக 17 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ரூபா 7 இலட்சம் பெறுமதியில் இந்த ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை கலப்பு இல்லாத தூய யமுனாபாரி ஆடுகளாகும். இந்த ஆடுகளை இனவிருத்தி செய்து எதிர்காலத்தில் இப்பகுதியில் இருந்து வடக்கின் ஏனைய பகுதிகளுக்குத் தரமான யமுனாபாரிகளை விநியோகிக்கும் நோக்கிலும் இதன்மூலம் இக்குடியிருப்பு மக்கள் கணிசமான வருவாயைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலுமே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.வசீகரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாணசபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், மாகாணசபை உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியின் முடிவில் மாவீரர் குடியிருப்புப் பகுதியில் நடுகை செய்வதற்கென மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2)

### இரு வெவ்வேறு சம்பவங்களில்

# மாடுகள், ஆற்றுமணல் கடத்திய நிலையில் வாகனங்கள் கைப்பற்று; சாரதிகள் கைது

## அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் நடைபெற்றதாக மாங்குளம் பொலிஸார் தெரிவிப்பு





(மல்லாவி)

முல்லைத்தீவுமாவட்டபொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட மாங்குளம் பொலிஸ் பிரிவில் இரு வெவ்வேறு சம்பவங்களில் மாடுகளை அனுமதிப்பத்திரம் இன்றி கடத்திய இரண்டு சந்தேக நபர்களையும் கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனத்துடன் கைது செய்துள்ளதாகவும் மற்றும் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்றுமணல் கடத்திய உழவு இயந்திரம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவங்கள் கடந்த 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கும் மற்றும் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கும் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மாங்குளம்பொலிஸ்நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து மாங்குளம் பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி மாலின் பெரேராவின் உத்தரவிற்கு அமைய மாங்குளம் பொலிஸ் நிலைய உப-பொலிஸ் பரிசோதகர் அ.சியானின் தலைமையில் பொலிஸ் கொஸ்தாபல்களான வசந்த (13816), ஞாணவர்த்தன (41696), ஜெயந்த(64843), ரூவான் (71524), குணரத்தின(31131) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்புக்களின் போதே சட்டவிரோத செயற்பாடுகள் முறியடிக்கப் பட்டுள்ளன.

இச்சம்பவத்தின் போது மணவாளன்பட்டமுறிப்பு பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணல் ஏற்றி பயணித்த உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைதானார்.

இதேவேளை கருப்பட்ட முறிப்பு பகுதியில் இருந்து டிமோ பட்டாரக வாகனத்தில் அனுமதிப்பத்திரமின்றி 5 மாடு களை முள்ளியவளை பகுதி க்கு கடத்தி செல்ல முற்பட்ட வேளை கடத்தப்பட்ட மாடுகள் மீட்கப்பட்டதுடன் கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேக நபர்கள் இரண்டு பேர் கைதாகினர். மேற்படி சம்பவங்களின் போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் கைதான சந்தேக நபர்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக மாங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

# இளைஞர் பாராளுமன்ற தேர்தல்; வேட்பு மனு இன்று ஏற்பு

(புளிக்கன்குளம்)

தேசிய கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார நடவடிக்கைஅமைச்சின்ஆலோசனையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டுக்கான இளைஞர் பாராளுமன்ற வேலைத்திட்டத்தை தேசிய மட்டத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நாடளாவிய ரீதியில் 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இடம்பெறுவதோடு இத்தேர்தலானது முல்லைத்தீவு மாவட்டம் தழுவிய ரீதியிலும் இடம்பெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர்திருமதிகேசரோஜா நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கை இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களின் வேட்புமனு இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படும். இன்று தொடக்கம் 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி நள்ளிரவு வரை தேர்தல் பிரசாரம் நடத்த முடியும்.

வாக்கெண்ணும் செயற்பாடுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். மேலதிக விபரங்களுக்கு 021 206 0017, 077 617 8344 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

பிரதேச ரீதியாக இளைஞர்கள் தமது இளைஞர் சேவை அதிகாரிகளை தொடர்புகொள்ள மாந்தை கிழக்கு இளைஞர் சேவை அதிகாரி ஜெயபாலன் 077 023 6434, ஒட்டுசுட்டான் இளைஞர் சேவை அதிகாரி சஜிதரன் 077 283 5388, துணுக்காய் இளைஞர் சேவை அதிகாரிசுகந்தன் 077 774 0645, புதுக்குடியிருப்பு இளைஞர் சேவை அதிகாரி சிந்துஜன் 077 358 9165, கரைதுறைப்பற்று இளைஞர் சேவை அதிகாரி துசான் 077 021 1236, விஜிதரன் 077 970 0377 ஆகியோரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். (2-28)

# கடந்த பத்து மாதங்களில் 315 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டப்பணம் அறவீடு

## வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி தெரிவிப்பு

**(குருமன்காடு)**

**கடந்த 10 மாதங்களில் 315 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டதாக வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ஏ.ஜி.எஸ்.கே. செனவிரட்ன தெரிவித்துள்ளார்.**

மதுவரித் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடரபில் வினவிய போதே அவா இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரி விக்கையில்,

இவ்வாண்டு ஜனவரிமாதம் முதல் ஒக்டோபர் வரையிலான 10 மாத காலப்பகுதியில் 315 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. இதன்படி சட்ட விரோத அரச சாராயம் விற்பனை செய்தமை 11, சட்ட விரோதமாக வெளிநாட்டு மதுபானம் விற்பனை 04, அளவுக்கதிகமாக சாராயம் உடமையில் வைத்திருந்தமை 01. சட்டவிரோதமாக அளவுக்கதிகமாக வெளிநாட்டு மதுபானம் உடமையில் வைத்திருந்தமை 01. சட்ட விரோத கள்ளு விற்பனை 132, சட்டவிரோதமாக கள்ளு உடமையில் வைத்திருந்தமை 06. சட்டவிரோத புகையிலை உற்பத்தி பொருட்களை வைத்திருந்தமை 04. 21 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தமை 150. மாபா எனப்படும் போதைப்பொருள் விற்பனை 02, கஞ்சா உடமையில் வைத்திருந்தமை 04 என மொத்தமாக 315 பேருக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மதுவரி பரிசோதகர் எஸ். சுரேஸ், மதுவரி காவலர்களான கே.துஸ்யந்தன், ஆர். பி.திஸாநாயக்கா. சீ.டீ.சல்வா உள்ளடங்கிய குழுவினரே குறித்த செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தனர் எனவும் மாவட்ட பொறுப்பதிகாரி செனவிரட்ன தெரிவித்தார். (2-250)











முல்லைத்தீவு மாவட்ட கலை இலக்கிய விழா நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பொன்விழா மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து அலங்கரிக்கப்பட்ட பாரம்பரிய பண்பாடுகளை சித்திரிக்கும் ஊர்திகள் மண்டபத்தை வந்தடைந்ததும் கலை நிகழ்ச்சிகள் தமிழ், முஸ்லிம், சிங்களம் போன்ற மதங்களை சார்ந்தவர்களினால் பாரம்பரியக் கலைகளுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பிரதேச செயலக பிரிவுகளிலும் சிறந்தகலைஞர்கள் ஆறு பேர் மதிப்பளித்து கௌரவிக்கப்பட்டு விருதுகளும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அமைச்சர் த.குருகுலராஜாவினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். முல்லை மாவட்டத்தை சித்திரிக்கும் முகமாக முல்லைசாரல் எனும் நூலை மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் வெளியிட்டு வைக்க மூலப்பிரதியை கல்வி பண்பாட்டு அமைச்சர் த.குருகுலராஜா பெற்றுக் கொண்டார்.

(படங்கள்:-மல்லாவி,வற்றாப்பளை செய்தியாளர்கள்)

# உரமானியக் கொடுப்பனவிற்கான பணம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை

## பயிருக்கான உரத்தை பயன்படுத்த முடியவில்லை—விவசாயிகள் கவலை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசினரால் வழங்கப்படும் உரமானியக் கொடுப்பனவிற்கான பணம் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. இதனால் தமது பயிருக்கான உரத்தை உரிய காலப்பகுதிகளில் பயன்படுத்துவதற்கு முடியாமல் கஷ்டமடைவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம் மாவட்டத்தில் உரிய கமநல சேவை நிலையங்களின் மூலமான விவசாயிகளின் உரமானியப் பட்டியல்கள் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை நிலையத்திற்குக் கிடைக்கப் பெறாத நிலையினால் அவற்றைத் தொகுத்து அனுப்பப்படாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன் ஐந்து ஏக்கர் காணிக்கு ஒரு விவசாயிக்கு உரமானியம்வழங்கப்படும்என்ற அரச சுற்று நிருபம் உள்ள போதிலும் சில விவசாயிகளால் ஒரே பெயரில் வெவ்வேறு கமநல சேவை நிலையங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும் சிக்கல் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த வருடத்தைப் போலன்றி வங்கிக் கணக்கு தனிக்கணக்காக இருக்கவேண்டும். கூட்டு வங்கிக் கணக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென தற்போது தான் கமநல சேவை நிலையங்களுக்கு அறிவித்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவ்வறிவித்தல் உரமானியக்கொடுப்பனவை மேலும் தாமதமடையச் செய்யும். இவ்வாறான இழுபறியான நிலையைவிட உரத்திற்கான குறைந்த விலையில் விலைக்கட்டுப்பாட்டை விதித்து விவசாயிகளுக்கு நன்மையை ஏற்படுத்தலாமென விவசாயிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனவே உரிய அதிகாரிகள், அரசியலாளர்கள் இவ் விடயத்தில் கூடிய கரிசனையெடுத்து விவசாயிகளின் நலனுக்கு உதவ வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-254)

# இரண்டு ஆட்டோக்கள் விபத்து; பெண் உட்பட நால்வர் படுகாயம்



வவுனியாவில் ஏற்பட்ட வீதி விபத்தில் பெண்ணொருவர் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நெளுக்குளத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோவும் வேப்பங்குளத்திலிருந்து மன்னார் வீதியு,டாக பயணித்துக் கொணடிருந்த ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகியிருக்கலாம் என நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் பெண் ஒருவர் உட்பட நால்வர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

# கல்விச் சேவை ஊழியர் சிக்கனக் கடனுதவி சங்க வடமாகாண அலுவலகம் கிளியில் திறப்பு

கல்விச் சேவை ஊழியர் சிக்கன கடனுதவி சங்கத்தின் வடக்கு மாகாண அலுவலகம் நேற்று முன்தினம் கிளிநெச்சியில் திறந்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி நகரில பழைய வைத்தியசாலை முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது. குறித்த நிகழ்வில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மகிநத ஜெயசிங்க. ஈடிசிஎஸ் தவிசாளர் பிரியந்த லியனகே, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டு அலுவலகத்தை திறந்து வைததனர்.

குறித்த நிகழ்வில் அதிபர். ஆசிரியர்கள், மாணவர்கள். டி ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகர் குறிப்பிடுகையில்.

குறித்த சங்கத்தை இயங்க விடாது கடந்த அரசாங்கம் பல்வேறு நெருக்கடிகளை கொடுத்ததாக தெரிவித்தார்.

நீதிமன்றம் வரை சென்றும். பல போராட்டங்களின் மத்தியிலேயே இச் சங்கத்தை மீண்டும் இயங்கும் நிலைக்கு கொண்டு வந்ததாகவும் தெரிவித்த அவர், முதல் முதலாக வடக்கு மாகாணத்தில் இதற்கான அலுவலகத்தை இன்று (நேற்று முன்தினம்) நிறுவியுள்ளதாகவும் அவர் மேலும். தெரிவித்தார்.

தற்போது உள்ள அரசும் மக்களை நெருக்கடி கொடுப்பதாக அடுத்தாண்டுக்கான வரவு- செலவு திட்டத்தில் மக்களை ஏெருக்கடிக்குள் தள்ளியுள்ள அரசு, பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு பல கோடி ரூபா வாகன கொள்வனவு, பல இலட்சம் ரூபாய் வாடகை வாகனங்கள் என பல்வேறு செ்ாகுசுகளை வழங்குவதாக தெரிவித்தார். பல கோடி ரூபா வாகனங்களை கொள்வனவு செய்யும் வகையில் வாகன வரி சலுகையை வழங்கியுள்ள இந்த அரசு மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர்களிற்கே பல நன்மைகளை வழங்குவதாக தெரிவித்தார்.

வருகை தந்திருந்த மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டதுடன். சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் பிள்ளைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது. (2-15)



# இளைஞர் குழு தாக்குதல்; மாணவன் தலையில் காயம்

வவுனியாவில் இளைஞர் குழுவின் தாக்குதலுக்குள்ளான பிரபல பாடசாலை மாணவன் தலையில் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது பற்றி தெரியவருவதாவது,

வவுனியாவில் நூற்றாண்டு பழைமை வாய்ந்த பாடசாலையில் நேற்று முன்தினம் பாடசாலை முடிவடைந்து வெளியே வந்த குறித்த மாணவனை ஒரு இளைஞர் குழு வாள் மற்றும் நக்கிள்ஸ் போன்ற ஆயுதங்களால் தாக்கி காயப்படுத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்(2-250)

# தூய்மையான கிராமம் எனும் விசேட செயற்றிட்டத்தின் 7ம் கட்ட நிகழ்வு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில்







(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் முதன் முறையாக "தூய்மையான கிராமம்" எனும் தொனிப் பொருளில் கோப்பாய் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட விசேட செயற்றிட்டத்தின் 7 ஆம் கட்ட நிகழ்வு நேற்றைய தினம் யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் விசேட செயற்றிட்டத்தின் ஒரு அங்கமான மர நடுகைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வு தொடர்பாக கோப்பாய் மத்தி கிராம சேவை அலுவலர் கதிர்காமநாதன் அனுஜன் தெரிவிக்கையில்,

"தூய்மையான கோப்பாய் மத்தி" செயற்றிட்டமானது கடந்த ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. யாழ்.குடாநாட்டில் மட்டுமன்றி இலங்கையிலே முதன்முறையாக இத்திட்டம் எமது கிராமத்தில முன்னெடுக்கப்படுகிறது.

அதன் முதல் கட்ட நடவடிக்கையில் கோப்பாய் மத்தியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சிரமதானம் இடம்பெற்று வந்தது. இரண்டாம் கட்ட நடவடிக்கையாக போதையை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் கிராமமட்ட விழிப்புணர்வு நிகழ்வும் பேரணியும் இடம் பெற்றிருந்தது.

கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் 10 கிராமங்களும் ஆயிரத்து 114 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 694 பேர் வசித்து வருகிறார்கள். அனைத்து வளங்களையும் கொண்ட ஒரு பெரிய கிராமசேவகர் பிரிவாகும்.

எமது கிராமத்தை தூய்மைப்படுத்துவதும் யாழ்.குடாநாட்டில் முன்னணி கிராமமாக எமது கிராமத்தை திகழ்ச்செய்வதுமே எமது செயற்றிட்டத்தின் நோக்கமாகும். எமது பிரதேச செயலர், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் ஒத்துழைப்புடன பொருளாதார உத்தியோகத்தர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுச்சுகாதார பரிசோதகர், கிராம மட்ட குழுக்கள், கழகங்கள் மற்றும் பிரதேச மக்களுடன் இணைந்து கடந்த மாதங்களில் பல்வேறு சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

இன்றைய (நேற்றைய) மரநடுகை தினத்தை முன்னிட்டு கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் உள்ள அனைத்து வியாபார நிலையங்களிலும் புகைத்தல் பொருட்கள் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

அதே போன்று அடுத்து வரும் காலங்களில் முற்று முழுதாக புகைப்பொருட்கள் போதைப்பொருட்களை விற்பனை செய்யாத வியாபார நிலைய உரிமையாளர்கள் கௌரவிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த மரநடுகை திட்டத்தில் கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் உள்ள பிரதான மற்றும் சிறு வீதிகளின் ஓரங்களிலும் 200 மரங்கள் நாட்டப்படவுள்ளன.

இந்த மரம் நடுகை திட்டத்தினை தொடர்ந்து மரங்களை பராமரிக்க வலி. கிழக்கு பிரதேச சபையினர் பொறுப்பேற்று செயற்படுத்துவதற்கு முன்வந்துள்ளனர்.

தூய்மையான கோப்பாய் மத்தி என்பது ஒட்டு மொத்த கிராம மக்களின் முயற்சியிலேயே முன்னெடுக்கப்பட்டு வரும் வெற்றிகரமான செயற்பாடு என்பதுடன் இத் திட்டம் வெகு விரைவில் தூய்மையான கிராமம் எனும் செயற்றிட்டமாக நாடளாவிய ரீதியில் மாற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அ. அமிர்தலிங்கம், கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன், 513 ஆவது படைப் பிரிவு கட்டளை தளபதி பிரிகேடியர் சிசிர பிலாப்பழய, ஆசிரிய மாணவர்கள், கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)





(படங்கள்:பொ.சோபிகா)

# மகிந்த ஆட்சிக்காலத்தில் தீவக பிரதேசங்கள் யுத்த சூன்ய பிரதேசங்களாக காணப்பட்டன

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் தீவகப் பிரதேசங்கள் யுத்த சூன்ய பிரதேசங்களாகவே காணப்பட்டன.

அந்த நிலை நல்லாட்சி அரசின் காலத்தில் தொடருமானால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தீவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட அவர், ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களிலும் பார்க்க கடந்த இரண்டு வருடங்களில் எழுவைதீவு பாடசாலை மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளில் முன்னேற்றம் கண்டுள்ளதாக அவர்களது பெற்றோர் என்னிடம் கூறியுள்ளனர். இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையிலும்மாணவன் ஒருவர் சித்தியெய்தி உள் ளான்.

கடந்த காலங்களில் இவ்வாறான பரீட்சைகளில் மாணவர்கள் சித்தி எய்வது என்பது கடினமாகவே இருந்தது.

ஆனால் எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மாணவர் ஒருவர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியமை வரவேற்கத் தக்கது.

இம்மாணவனது சித்தி எமது பிரதேசத்தையே கௌரவித்துள்ளது. மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு இங்குள்ள பாடசாலைகள்தான் ஒரே வழியாக உள்ளன.

எனினும் உரிய தளபாட வசதிகள்காணப்படாதநிலையே உள்ளன. இதற்கு அப்பால் ஆசிரியர் பற்றாக்குறை என்பதும் அதிகரித்து காணப்படுகின்றது. ஆசிரியர்கள் இங்கு பணிக்காக அனுப்பப்பட்டாலும், அவர்கள் யாருடைய செல்வாக்கை பயன்படுத்தி என்றாலும் வேறுஇடத்திற்கு இடமாற்றம் பெற்று சென்று விடுகின்றார்கள்.

அரசாங்கத்தில் பணியை ஏற்கும் அரச அதிகாரிகள் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்ற தயார்என சத்தியப்பிரமாணம் செய்கின்றார்கள். ஆனால் எழுவைதீவு, அனலைதீவு போன்ற அனைத்து தீவுகளிலும் கடமையாற்ற ஆசிரியர்கள் முன்வருகின்றனர் இல்லை. அனலைதீவிலும்பாடசாலை மாணவர்களுக்கான வளப் பற்றாக்குறை என்பது அதிகரித்தே உள்ளது.

ஒரு பாடசாலையை எடுத்துக்கொண்டால் 96 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆனால் அங்கு இரண்டு நிரந்தர நியமனம்பெற்ற ஆசிரியர்களே உள்ளனர். நெடுந்தீவிலும் கல்வி நிலை பின்தங்கிய நிலையில் தான் உள்ளது.கடந்த இருபது வருடகாலமாக எந்தவித அபிவிருத்தியையும் இவர்கள் பெற்றிருக்கவில்லை.

எழுவைதீவு வைத்தியசாலையில் வைத்தியர் எவரும் இல்லை. அனலைதீவில் வாரத்திற்கு மூன்று நாட்கள் சிகிச்சை இடம்பெறுகின்றது. அங்கு ஒரு கர்ப்பிணி பெண் சிகிச்சைக்காக சென்றால் வைத்தியம் செய் வதறகு வைத்தியர் இல்லை. நல்லாட்சி அரசாங்கம் இந்த குறைகளை நிவர்த்தி செய்யாததை ஏற்றுக்கொள்ள முடியாது.

யுத்தம் முடிவடைந்து ஏழு வருடாங்கள் கடந்துள்ள நிலையில் கடந்த அரசாங்கம் யுத்த சூனிய பிரதேச வலயம் போன்று தான் இந்த பிரதேசங்கள் கடந்த காலங்களில் இருந்திருக்கின்றன.எழுவைதீவி, நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகியதீவுகள் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தீவகம் இப்போதும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. இதனால் தான் அவர்களுக்கு சற்று உதவியேனும்கிடைத்தது. ஆனால் கடந்த காலங்களில் இந்த பிரதேசம் ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. அதனால்அச்சநிலையே இங்கு காணப்பட்டது.

தற் போது நீதிமன்றங்களிலும் கூட ஆயுதக்குழுக்கள் இங்கு வந்தவர்களின் மீது கொலை வெறித் தாக்குதல் மேற்கொண்ட வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

கொலையை புரிந்தவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று வாழ்கின்றனர். இன்ரர்போல் மூலம் அந்த கொலைதாரிகளை கைது செய்ய எமது நீதிபதிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அவ்வாறான நிலைமை தற்போது தோன்றியுள்ளது. தேசிய ரீதியில் தீவக வலயம் 97 ஆவது நிலையில் உள் ளது.

மேலும் வட்டுக் கோட்டையில் இன்னுமொரு வலயம் பிரிக்கப்பட உள்ள நிலையில் தீவகம் 98ஆவது நிலைக்கு தள்ளப்படும் அபாயம் உள்ளது.

ஆகையால்கடந்த காலங்களில் காணப்பட்ட அட்டூழியங்களில் இருந்து மக்கள் எவ்வாறு விடுதலை செய்யப்பட்டார்களோ அவ்வாறு இவர்களது கல்வி தொடர்பிலும் நவடிக்கை எடுக்க வேண்டும என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஒளி விழாவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

இளவாலை றோ.க.த. ஆண்கள்பாடசாலையின்ஒளிவிழா, பரிசளிப்பு விழா, பெற்றோர் தின விழா என்பன இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி. மீ.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையினை இளவாலை மறைக்கோட்ட முதல்வர் பங்குத் தந்தை அருட்பணி ம.யேசுரட்ணம் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா,கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் ஆசிரிய ஆலோசகர் திருமதி செ.டினேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)




# சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்


(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய மேல்மாடி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு சனசமூக நிலையத் தலைவர் சி.செல்வராசா அறிவித்துள்ளார். (இ-3)

# ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

யா/ நெல்லியடி மத்திய கல்லூரி கற்கை நிலையத்தில் 2011/2013 கல்வியாண்டில் கல்வி பயின்று கல்விமாணி பட்டப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான அவசர கலந் துரையாடல் நாளை பிற்பகல் 3 மணிக்கு யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத் தில் மாலுசந்தி நடைபெறும். எனவே அனைத்து ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ



# சமுர்த்திக் காப்புறுதி, கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனிகளை ஒன்றிணைத்தல்

## பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரணடாவது வரவு - செலவுத் திட்டம் அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

(தொடர்ச்சி)

வங்கிகளின் அவ்வாறான ஒருங்கிணைப்பானது, வங்கிகளின் அளவை அதிகரிப்பதற்கும், பன்முகப்படுத்தப்பட்ட மூலங்களிலிருந்து நிதியைத் திரட்டுவதற்கும் இடர்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய இயலளவினை விருத்தி செய்வதற்கும் வங்கிகள் தற்போதைய நிலைமையினை விட பெருமளவிலான பாரிய அரச மற்றும் தனியார் துறைக் கருத்திட்டங்களில் பங்கேற்பதற்கும், செயற்பாட்டுச் செலவுகளுடன் தொடர்புடைய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் வழிவகுக்கும். இது தொடர்பாக நாம் எமது வங்கிகள் போதிய அளவிலான முதலைக் கொண்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இதன் பொருட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு ரூபா 20.000 மில்லியனையும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட விசேட வங்கிகளுக்கு ரூபா 7,500 மில்லியனையும் மற்றும் முதன்மை விநியோகஸ்தர்களுக்கு ரூபா 1,500 மில்லியனுமாக குறைந்த மூலதனத் தொகையை அதிகரிப்பதற்கும் முன்மொழிகின்றேன்.

279.வீடமைப்பு வங்கியொன்றினை உருவாக்கும் நோக்குடன் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினையும் (HDFC) மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியினையும் (SMIB) ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதோடு இம் மூலதன உட்செலுத்தலுக்காக ரூபா 7,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

280.மேலும் உறுதியான கிராமியத் துறையின் நுண் கடன் வழங்கல்களை மையமாகக்கொண்ட வங்கியொன்றினை உருவாக்கும் பொருட்டு கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும் மற்றும் திவிநெகும வங்கியும் ஒருங்கிணைக்கப்படும்.

281.சபாநாயகர் அவர்களே, சமகாலத்தில் வங்கிகளுக்கான தனிப்பங்காளரின் சொத்து 10 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்களின் சேவைக்காலம் 9 ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வங்கிகளை உறுதிப்படுத்தும் முன்மொழிவுக்கேற்ப இக் கொள்கைகளை நாம் மீளாய்வு செய்ய உள்ளோம்.

282.வங்கிகள் தமது கடன் வழங்கும் செய்முறையில் குறைந்தது 10 சதவீதம் விவசாயத்துறைக்கும் 10 சதவீதம் சிறு நடுத்தர முயற்சியாண்மைகளுக்கும் 10 சதவீதம் ஏற்றுமதித் துறைகளுக்கும் 10சதவீதம் சுற்றுலாத்துறைக்கும் 5சதவீதம் இளைஞர்களுக்கும் 5 சதவீதம் பெண்களுக்கும் வழங்க பணிக்கின்றேன்.

மேலும் வங்கிகள் குறைந்தது 15 சேமிப்புக்களை வர்த்தக அபிவிருத்திக்காக தமது துறையினுள் கடனளிக்கவேண்டும்.

283.அதேவேளை வங்கிக் கைத்தொழில் தொடர்பான பொதுவான ஒரு முறைப்பாடானது ரூபா 5மில்லியனை விடக் குறைந்த கடனொன்றினை செயற்படுத்துவதற்குக் கூட ஒரு மாத காலத்தை விடக் கூடுதலான காலம் எடுக்கப்படுகின்றது என்பதாகும். இக்கடன் செய்முறையினை ஒழுங்குமுறைப்படுத்துமாறு வங்கிகளை வேண்டிக்கொள்வதற்கு இப் பாராளுமன்றமானது என்னுடன் இணைந்து கொள்ளும் என்பதில் நான் உறுதியாக உள்ளதோடு, அதன் மூலம் ரூபா 5 மில்லியனை விடக்குறைந்த கடனை ஒரு மாதத்தை விடக் குறைந்த காலப்பகுதிக்குள் செயன்முறைப்படுத்தக் கூடியதாக உள்ளதோடு, அரசாங்க வங்கிகள் இச் செயன்முறையை 2017 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தும்.

284 தற்போதைய நவீன யுகத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, வங்கிச் சட்டத்திற்கு அவசியமான திருத்தங்களையும் நாம் அறிமுகப்படுத்துவோம்.

285.காசுக் கொடுக்கல் - வாங்கல்களைக் குறைக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் ரூபா 5 மில்லியனை விட அதிகமான காசுக் கொடுக்கல் - வாங்கல்கள் மீது 2 சதவீதக் கட்டணத்தினை விதிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

எவ்வாறாயினும், குறித்த 2 சதவீத கட்டணம் காசோலை, வங்கி வரைவு போன்ற வங்கியியல் சாதனங்கள் ஊடாக இடம்பெறும் கொடுக்கல்-வாங்கல்களுக்கு ஏற்புடையதாகாது.

286.வாகன வகையீடுகளுக்கான சொத்துக்களின் பெறுமதிக்கான கடன் விகிதாசாரத்தினை (LTV)பின்வருமாறு வரையறுக்கப்படுவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

முச்சக்கர வண்டிகள் 25 சதவீதம், மோட்டார் வாகனங்களும் வான்களும் 50 சதவீதம், வர்த்தக ரீதியான வாகனங்கள் (லொறிகளும் கனரக வாகனங்களும்) 90 சதவீதம்.

### காப்புறுதி

287. சபாநாயகர் அவர்களே, தற்போது கமத்தொழிலுக்கான பயிர் காப்புறுதியும், கமநலக் காப்புறுதிச் சபையும் நெல்லை மாத்திரமே உள்ளடக்குகின்றன. ஆயினும், தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேலும் ஆதரவளிப்பதற்காக பிரதான உணவுப் பயிர்களான உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சோளம் மற்றும் சோயா அவரை ஆகியனவற்றையும் உள்ளடக்கும் நோக்குடன் பயிர் காப்புறுதித் திட்டத்தினை விரிவாக்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். உரக்காசு மானியப் பெறுகையாளரான ஒரு விவசாயிக்குக் கூடியது ஒரு ஹெக்டேயரை உள்ளடக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

288.சமுர்த்திக் காப்புறுதி மற்றும் கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியினையும் 2017 ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முதலில் ஒன்றிணைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

மேலும் இக்கம்பனியைத் தற்போது நடைமுறையிலுள்ள காப்புறுதிக் கம்பனிகளுடன் ஒன்றிணைக்குமாறும் ஊக்குவிக்கின்றேன்.

### அடகுத் தொழிற்றுறை

289.விசேடமாக எமது கிராமிய சமூகம், நிதி நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு நகை அடகிலேயே தங்கியுள்ளது. ஆயினும், பெரும்பாலும் முறைப்படுத்தப்படாத நகை அடகு பிடிக்கும் தரகர்கள் தமது விருப்பத்துக்கு இந்த மக்களைச் சுரண்டுவதற்கு முனைகின்றார்கள். ஒரு வருடத்திற்கு ஒரு அலகிற்கு ரூபா 100.000 ஆகப் பதிவுக் கட்டணத்தினை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். உறுதிப்படுத்தப்பட்ட வருமானம் சுமார ரூபா 1.000 மில்லியனாக இருக்கலாம் என நாம் மதிப்பீடு செய்துள்ளோம்.

### மூலதனச் சந்தை

290.சபாநாயகர் அவர்களே, நாம் இந்த வருடம் மூலதனச் சந்தைகளின் ஒழுங்குமுறைவேலைச சட்டகத்தினையும் செயற்பாட்டு வினைத்திறனையும் விருத்தி செய்வதற்கும் மற்றும் கடந்த தசாப்தத்தில் மூலதனச் சந்தைகளின் உறுதியான வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளதொடர்ச்சியாக இருந்துவரும் ஒரு பிரச்சினையான நம்பகத்தன்மையின் இழப்பீட்டை மீட்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

நாம் மூலதனச் சந்தை உபாயமொன்றினை வடிவமைத்துள்ளதோடு, இவ்வுபாயமானது, பிரதான பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய ஆலோசனைச் சபையொன்றினை உள்ளடக்கியிருக்கும். அத்தோடு, இவர்கள் இவ்வுபாயங்களைநடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குவதோடு, மூல தனச் சந்தை நடவடிக்கைகளின் அபிவிருத்தியையும் விருத்தி செய்வார்கள்.

291.எமது உபாயத்தின் ஒரு பகுதியாக, 2017ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் புதிய பிணையங்கள் மற்றும் பரிமாற்றச் சட்டமொன்றினையும் அறிமுகப்படுத்துவதோடு இச்சட்டமானது பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவிற்கு விருத்தி செய்யப்பட்ட அமுலாக்கல் இயலளவையும் மற்றும் செயற்பாடுகளில் பாரிய ஒரு நெகிழ்ச்சியினையும் நாம் வழங்குவோம்.

292. 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் நீண்ட காலத் தேவையொன்றாக உணரப்பட்டு வந்த பரஸ்பரமற்ற உரிமையகற்றல் சட்டமூலத்தினை (Demutualization Bill) அறிமுகப்படுத்துவோம். இது குறிப்பிடத்தக்க ஒரு மாற்றமாக அமைவதோடு, பங்குரிமையாளர்களினால் பங்குகளை வைத்திருக்கும் கம்பனியொன்றாக கொழும்புப் பங்குப்பரிமாற்றம் மாற்றப்படும்.

293.நாம் பிணையங்கள் சட்டத்தினை 2017ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதோடு இச் சட்டமானது பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களுக்கு வசதியளிக்கும்.

294.வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திறைசேரி முறி சந்தையில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு குறிப்பாக உறுதிப்பாடான வெளிநாட்டு முதலீடுகளை முறிச்சந்தைக்கு கவர்வதற்காக அதன் தீர்ப்பனவு பொறிமுறையினை ஒழுங்குபடுத்துவதற்கும் 2017 ஜூன் 30 ஆம் திகதியளவில் யூரோ விடுவிப்பு வசதியினை பயன்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இது சந்தையில் வெளிப்படு தன்மையினை விரிவாக்கச் செய்யும்.

295.அரசாங்க முறிச்சந்தைகளின் வழங்கல்களின் திரவத்தன்மையை அதிகரிக்கும் நோக்குடன் திறைசேரி முறிகளுக்கு 2 வருடங்கள், 5 வருடங்கள் மற்றும் 10 வருடங்கள் என்ற அளவுகளைக் கொண்ட பிணையங்கள் உள்ளன.

296.அரசாங்க நிறுவனங்கள் தமது திரும்பல்களை அதிகரிக்கும் பொருட்டு அவற்றை உத்தியோக பூர்வ ரீதியாக வழிநடத்துவதற்காக விசேடத்துவம் பெற்ற நிதி முகாமையாளர் கம்பனிகள் மற்றும் காப்பீட்டுக் கணிப்பாளர்களையும் நான் பரிந்துரை செய்கின்றேன்.

297.ஆதன விற்பனை முதலீட்டு நம்பிக்கை நிதியங்களுக்குள்ள குறிப்பிடத்தக்க வாய்ப்புக்களைக் கருத்திற் கொண்டு, அலகு நிதியக் கோவையில் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவுக்கு நாம் வசதியளிப்போம்.

298.சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளைப் பட்டியலிடுவதற்காக நாம் தனிப்பட்ட உரவ சபையினை அறிமுகப்படுத்துவோம்.

இதன் மூலம் குறைந்த செலவிலான மூலதனத்தினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

299.கொழும்புப் பங்குப் பரிமாற்றத்தில் பட்டியலிடுமாறு வெளிநாட்டுக் கம்பனிகளையும் நான் அழைக்கின்றேன்.

### வீட்டுரிமை சமூகத்தினை உருவாக்குதல்

300.சபாநாயகர் அவர்களே, எமது அரசாங்கம் சகலருக்கும் ஒரு வீட்டினை உருவாக்குவதில் தன்னை அர்ப்பணித்திருக்கின்றது. இச் சூழ்நிலையில் நாம் குறைந்த மற்றும் நடுத்தர அளவிலான குடும்பங்களுக்காக 500,000 வீட்டு உரிமை நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை ஆரம்பிப்போம்.

301. இத்திட்டத்தின் கீழ் அடுத்து வரும் 3 ஆண்டுகளில் 2017-2019 ஆண்டு காலப்பகுதியில் நடுத்தர வருமானம் கொண்ட வகையீட்டிற்கான ஒரு அலகுக்கு ரூபா 5 மில்லியனில் 100.000 வீட்டு அலகுகளையும் மேலும் குறைந்த வருமானம் கொண்ட வகையீட்டிற்கான ஒரு அலகுக்கு ரூபா 1 மில்லியனில் 250.000 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கும் தனியார் துறையினர் அழைக்கப்படுவார்கள்.

302.பெருந்தோட்டத் துறையிலுள்ள வீட்டுத் தேவைகளும் உக்கிரமடைந்த நிலையில் காணப்படுவதோடு, இன்னும் சிலர் செயலிழந்த லயன்களில் அடிப்படை வசதிகளற்ற நிலையிலுங்கூட வாழ்ந்து வருகின்றனர்.


ஆகவே அரசாங்கம், பெருந்தோட்டத்துறைக்கு 25,000 வீடுகளை நிர்மாணிக்கவுள்ளது.

303.அதற்கான காணியும் வசதிகளும் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

304.தேசிய சேமிப்பு வங்கி, புதிய வீடமைப்பு வங்கியுடன் இணைந்து வீட்டு உரிமையாளராகக் கூடியவர்களுக்கு 25 வருட காலத்திற்கு அனைத்தும் உள்ளடங்கி 7 சதவீத வட்டிக்கு கடன் வசதியொன்றினை வழங்கும். தேசிய சேமிப்பு வங்கி அத்தகைய கடன்களுக்காக சுமார் ரூபா 370 பில்லியனை திரட்டும்.

(தொடரும்)

# ட்ரம்புடன் இரவு விருந்து; ஏழு கோடி ரூபா கட்டணம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்புடன், சேர்ந்து இரவு விருந்தில் பங்கேற்க ஏழு கோடி ரூபாய் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், குடியரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். 2017 ஜனவரி 20இல், அவர் பதவி ஏற்க உள்ளார். புதிய அமைச்சர்களை தேர்வு செய்யும் பணியில் அவர் ஈடுபட்டு உள்ளார். தன் அரசில் புதிய நிதியமைச்சராக பிரபல வங்கி அதிகாரி ஸ்டீவ் முனிச்சினை நியமிக்கப் போவதாக, ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

**ஏழு கோடி ரூபாய் கட்டணம்**

பதவியேற்பு விழா ஏற்பாடுகள் தற்போது நடந்து வருகின்றன. அங்கு ஜனாதிபதி பதவியேற்பு விழா, அரச செலவில் நடப்பது இல்லை. அதற்குப் பதிலாக, தனிநபர்கள் மற்றும் அறக்கட்டளையிடம் இருந்து பெறப்படும் நன்கொடை மூலம், மகப் பிரம்மாண்டமாக விழா நடத்துவது வழக்கம். இதற்காக, பதவியேற்பு விழாக்குழு நிதி திரட்ட அரம்பித்துள்ளது. பதவியேற்பு விழாவிற்குப் பின், புதிய ஜனாதிபதி ட்ரம்புடன் சேர்ந்து, இரவு விருந்தில் பங்கேற்க ஏழு கோடி ரூபாய் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதுபோலவே துணை ஜனாதிபதி, மற்ற அமைச்சர்கள் உள்ளிட்டோருடன், சேர்ந்து இரவு உணவு சாப்பிட, 20 இலட்சம் ரூபாய் முதல், ஏழு கோடி ரூபாய் வரை கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**7 பேர் முன்வந்துள்ளனர**

ட்ரம்புடன் சேர்ந்து உணவு சாப்பிட, தற்போது, வசதி படைத்த, ஏழு தொழிலதிபர்கள் முன் வந்துள்ளனர். தற்போதைய ஜனாதிபதி ஒபாமா இரண்டாம்முறை பதவியேற்றபோது, வசூலான 310 கோடி ரூபாய் சாதனையை முறியடிக்க ட்ரம்ப் ஆதரவாளர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளனர். (இ-10)

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மிச்செல் ஒருபோதும் போட்டியிட மாட்டார் - ஒபாமா



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மிச்செல் ஒருபோதும் போட்டியிட மாட்டார் என ஒபாமா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.


நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனுக்காக பிரசாரம் செய்தவர் ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா. "நான் ஜனாதிபதி பதவிக்கு வந்தால் மிச்செல்லுக்கு அமைச்சர் பதவி அளிப்பேன்" என ஹிலாரி கூறியிருந்தார். ஆனால் தேர்தலில் அவர் தோல்வியை தழுவ நேரிட்டது. ஒரு பெண், முதல் முறை யாக அமெரிக்க ஜனாதிபதி ஆகினற வாய்ப்பும் இல்லாமல போய் விட்டது.

இந்த நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மிச்செல் ஒபாமா போட்டியிடக் கூடும் என யூகங்கள் எழுந்தன.

இது தொடர்பாக 'ரோலிங் ஸ்டோன்' என்ற பத்திரிகைக்கு ஒபாமா அளித்த பேட்டியின்போது , "மிச்செல் ஒருபோதும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார். நீங்கள் அறிந்தபடி மிச்செல் திறமை வாய்ந்தவர். அமெரிக்க மக்களுடன் அவர் வியக்கத்தக்க நட்புறவைக் கொண்டுள்ளார். ஆனால் அவர் அரசியலில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்று நான் நகைச்சுவையாகத்தான் கூறினேன்.

ஏற்கனவே முன்பு மிச்செல்லிடம் அவரது எதிர்கால திட்டம் பற்றி கேட்டபோது அவர், "நான் ஒருபோதும் ஹிலாரியின் பாதையில் செல்ல மாட்டேன்" என குறிப்பிட்டது நினைவுகூரத்தக்கது. ஹிலாரி, தனது கணவர் கிளின்டனின் பாதையில் அரசியலில் குதித்தது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# சொந்த வர்த்தகத்தை கைவிட டொனால்ட் ட்ரம்ப் தீர்மானம்



அமெரிக்க ஜனாதிபதி யாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், தனது சொந்த வர்த்தக வேலைகளை விட்டு விடப்போவதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி யாக செயற்படும் தனது பொறுப்பில் கவனம் செலுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாதிரியான முடிவை எடுப்பதற்கு தன்னை யாரும் கட்டாயப்படுத்தவில்லை என்றும் தனது தொழிலுக்கும் தனது பதவிக்கும் இடையில் முரண்பாடு வராமல் இருக்க இப்படி ஒரு முடிவை எடுத்ததாக அடுத்தடுத்த டுவிட்டர் செய்திகளில் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்த மேலும் விபரங்களை டிசெம்பர் மாதத் தின் இடைத் திகதிகளில், தனது குழந்தைகளுடன் சேர்ந்து செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவிக்கவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (இ-10)

# எண்ணெய் உற்பத்தியை குறைக்க ஏற்றுமதி நாடுகள் திடீர் முடிவு



8 ஆண்டுகளுக்குப் பிறகு எண்ணெய் உற்பத்தியை குறைக்க ஏற்றுமதி நாடுகள் முடிவு செய்துள்ளதால், பெற்றோல் விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச அளவில் கச்சா எணணெய் விலை பல ஆண்டுகளாக மிகக் குறைவாகவுள்ளது. இதனால் அதிக அளவில் எண்ணெய் உற்பத்தி செய்யும் அரபு நாடுகள் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளன.

கடந்த காலங்களில் எண்ணெய் விலை குறையும் போது எண்ணெய் உற்பத்தியை குறைத்து விலையை கட்டுக்குள் வைப்பது வழக்கம். ஆனால் இந்த நாடுகளிடையே ஒற்றுமை இல்லாததால் கடந்த 8 ஆண்டுகளாக உற்பத்தி குறைப்பை செய்யவில்லை.

இந்த நிலையில் எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் கூட்டமைப்பின் (ஒபெக்) கூட்டம் ஆஸ்திரியாவில் உள்ள வியன்னாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டமைப்பில் சவுதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத், நைஜீரியா, அல்ஜீரியா, வெனிசுலா, ஐக்கிய அரபு நாடுகள் உள்ளிட்ட 14 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கூட்டத்தில் எண்ணெய் உற்பத்தியை 10 சதவீத அளவிற்கு குறைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. இதன்படி ஒவ்வொரு நாளும் 12 இலட்சம் பரல் எண்ணெய் உற்பத்தி குறைக்கப்படும்.

உலகிலேயே சவுதி அரேபியாவில் தான் அதிக அளவில் எண்ணெய் உற்பத்தி நடைபெறுகிறது. அந்த நாடு 4.5 சதவீதம் எண்ணெய் உற்பத்தியை குறைக்க சம்மதித்துள்ளது. இதனால் சவுதி அரேபியா மட்டுமே 5 இலட்சம் பரல் உற்பத்தியை குறைக்க உள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் அல்லாமல் ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளும் அதிக அளவில் பெற்றோலை உற்பத்தி செய்கின்றன. இதில் ரஷ்யா அதிக அளவில் பெற்றோல் ஏற்றுமதி செய்கிறது.

எண்ணெய் ஏற்றுமதி நாடுகளில் அங்கம் வகிக்காத நாடுகளும் பெற்றோல் உற்பத்தியை குறைக்க முன்வந்துள்ளன. அந்த நாடுகள் 6 இலட்சம் பரல் எண்ணெய் உற்பத்தியை குறைக்க உள்ளன. ரஷ்யா 3 இலட்சம் பரல் எண்ணெய் உற்பத்தியை குறைக்க சம்மதித்துள்ளது.

எண்ணெய் உற்பத்தி குறைக்கப்படுவதால் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை உயரும். குறிப்பாக 10 சதவீதத்திற்கு மேல் எண்ணெய் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3-10)

# சிரியாவின் அலெப்போ நகரில் விமானப்படை கடும் தாக்குதல்

## 21 பேர் உயிரிழப்பு



(அலெப்போ)

சிரியாவின் அலெப்போ நகரில் நேற்று முன்தினம் விமானப்படை நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் போராளிகள் வசம் சிக்கியுள்ள அலெப்போ மற்றும் இட்லிப் மாகாணங்களை மீட்பதற்காக ரஷ்ய விமானப்படையின் உதவியுடன் அரசுப் படைகள் அணமைக்காலமாக ஆவேசத் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலின் எதிரொலியாக போராளிகள் பின்வாங்க தொடங்கியுள்ளதால் அரசுப் படைகள் போர்விமானங்கள் மூலம் குண்டுகளைவீசி ஆக்ரோஷத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த தாக்குதலில் பெரும்பாலும் பொதுமக்களே கொல்லப்படுவதாக உள்ளூர் ஊடகங்கள் குற்றம்சாட்டி வருகின்றன.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்பதற்குள் அலெப்போவில் இருந்து போராளிகளை விரட்டியடிக்க வேண்டும் என்ற குறிக்கோளில் இராணுவப்படைகள் ஆவேசமான அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால், அலெப்போ நகரவாசிகளில் பலர் உயிர்பயத்துடன் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர். இதுவரை சுமார் 40 ஆயிரம் மக்கள் இவ்வாறு வெளியேறியுள்ள நிலையில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 20 ஆயிரம் பேர் தாங்களது வீடுகளில் இருந்து மாற்றிடங்களை நோக்கி சென்றுள்ளனர்.

இந்நிலையில், அலெப்போ நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள ஜுப் அல் குபே மாவட்டத்தில் நேற்று முன்தினம் விமானப்படை நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் இரு குழந்தைகள் உட்பட 21 பேர் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் அங்குள்ள போர் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சிரியாவை சுமார் 33 ஆண்டுகளாக ஆட்சி செய்து வரும் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்று கடந்த 2011ஆம் ஆண்டில் இருந்து நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில் இதுவரை அப்பாவி பொதுமக்கள் உட்பட சுமார் மூன்று இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். 7 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்து உடலுறுப்புகளை இழந்து மாற்றுத்திறனாளிகளாக மாறியுள்ளனர்.

சுமார் 50 இலட்சம் மக்கள் வெளிநாடுகளிலும் 70 இலட்சம் மக்கள் உள்நாட்டிலும் இடம்பெயர்ந்து அகதிகளாக பிறபகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

# உலகின் 'டாப் 100' மதிப்புமிக்க புகைப்படங்கள் பட்டியலில் ராட்டையுடன் அமர்ந்துள்ள காந்தி

(நியூயோர்க்)

எப்போதும் செல்வாக்கு மிக்க 100 புகைப்படங்கள் பட்டியலில் மகாத்மா காந்தி ராட்டை அருகில் அமர்ந்திருக்கும் படம் இடம்பெற்றுள்ளது. அமெரிக்காவில் இருந்து வெளியாகும் டைம்ஸ் இதழ், 'உலகை மாற்றிய புகைப்படங்கள்' என்ற தலைப்பில் 100 அபூர்வ புகைப்படங்களை தொகுத்து வெளியிட்டுள்ளது.




அதில் அஹிம்சை வழியில் போராடி இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்த காந்தியடிகள் படமும் இடம் பெற்றுள்ளது. 1946ஆம் ஆண்டு மார்க்ரெட் புர்கி என்ற புகைப்படக் கலைஞரால் எடுக்கப்பட்ட இந்த கறுப்பு வெள்ளை படத்தில் காந்தி நூல் நூற்கும் ராட்டை முன் தரையில் அமர்ந்து புத்தகம் படிப்பது போன்று உள்ளார்.

இந்தப் படம் இந்திய தலைவர்கள் என்ற கட்டுரைக்காக எடுக்கப்பட்டது. ஆனால் அப்போது அந்த புகைப்படம் வெளியிடப்படாத நிலையில் அவர் கொலை செய்யப்பட்ட போது, அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக 2 ஆண்டு கழித்து வெளியிடப்பட்டது. இது தொடர்பாக டைம்ஸ் இதழ், "சட்ட மறுப்பு இயக்கத்தை வலியுறுத்தி அஹிம்சை வழியில் போராடிய உலக தலைவர் காந்தி" என புகழாரம் சூட்டியுள்ளது.

இது தவிர சிரியாவில் கடற்கரை நகரான போட்ரம் பகுதியில் 3 வயது குழந்தை சடலமாக கிடக்கும் படம், 2011ஆம் ஆண்டு ஒசாமா பின் லேடன் அமெரிக்க படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட போது தனது அலுவலகத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மூத்த அரசு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தும் காட்சியும், கடந்த 2001இல் இரட்டை கோபுரத்தில் இருந்து விழும் மனிதனின் புகைப்படம் உள்ளிட்ட படங்களும் அந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இ-3-10)

# திருச்சி அருகே வெடிமருந்து தொழிற்சாலையில் தீ விபத்து

## 20 தொழிலாளர்கள் பலி





திருச்சி அருகே வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 தொழிலாளர்கள் உடல் சிதறி பலியாகினர். சம்பவம் நடந்த இடத்தில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருச்சி- சேலம் வீதியில் உள்ள முருங்கப்பட்டி கிராமத்தையொட்டி வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இங்கு ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் தொழிலாளர்கள் வேலைக்குச் சென்ற போது, திடீரென வெடிமருந்து குடோன் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறி தீப்பிடித்தது.

குடோனுக்குள் இருந்த தொழிலாளர்கள் நெடுந் தொலைவுக்கு தூக்கி வீசப்பட்டனர்.

சத்தம் கேட்டு பொதுமக்கள் அங்கு சென்று பார்த்த போது, தொழிலாளர்கள் ஆங்காங்கே உடல் சிதறிய நிலையில் சடலமாகக் கிடந்தனர். வெடிமருந்து வெடித்து தீப்பிடித்ததால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. சிலரது உடல் அடையாளம் தெரியாத அளவிற்கு உருக்குலைந்து கிடந்தது. இந்த வெடிவிபத்தில் தொழிற்சாலைக்குள் இருந்த 20 தொழிலாளர்கள் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதுபற்றி தகவல் அறிந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இறந்தவர்களின் உடல்கள் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (இ-3-10)

# காஷ்மீர் எல்லையில் நிலைமை சீரடையும்

## பாக்.இராணுவத் தளபதி நம்பிக்கை




காஷ்மீர் எல்லையில் நிலைமை விரைவில் சீரடையும் என்று பாகிஸ்தான் புதிய இராணுவத் தளபதி காமர் ஜாவித் பஜ்வா தெரிவித்துள்ளார்.

ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் பாகிஸ்தானின் 16ஆவது இராணுவ தளபதியாக பஜ்வா பதவியேற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அவர் முதல் நாள் அலுவலகப் பணிகளை மேற்கொண்டார்.

காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் இந்திய, பாகிஸ்தான் இராணுவங்களுக்கு இடையே கடும் சண்டை நடைபெற்று வருகிறது. பாகிஸ்தான் தரப்பில் இராணுவ வீரர்கள் உட்பட இதுவரை 57 பேர் உயிரிழந்துள்ளனர். இதே போல இந்திய தரப்பிலும் உயிரிழப்புகள் நேரிட்டுள்ளன.

புதிய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள பஜ்வாவுக்கு எல்லைப் பதற்றம் மிகப்பெரிய சவாலாக உள்ளது. இதுதொடர்பாக பாகிஸ்தானின் அரசு ஊடகமான ஏபிபிக்கு அவர் அளித்த பேட்டியில், காஷ்மீர் எல்லையில் நிலைமை விரைவில் சீரடையும் என்று தெரிவித்தார். எனினும் எல்லை விவகாரத்தில் எத்தகைய அணுகுமுறை கடைப்பிடிக்கப்படும் என்பது குறித்து அவர் விபரித்து கூறவில்லை.

தீவிரவாதப் பிடியில் இருந்து பாகிஸ்தானை விடுவிப்பேன் என்றும் பஜ்வா உறுதி அளித்துள்ளார். அதன்படி ஜனநாயக ஆதரவாளரான அவர் புதிய அணுகுமுறைகளைக் கையாளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3-10)

# 1 நிமிடத்தில் 20 ஆடைகள் மாற்றி மலேசியப் பெண் கின்னஸ் சாதனை

ஒரே நிமிடத்தில் 20 ஆடைகளை மாற்றி மலேசியப் பெண் ஒருவர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

மின் செக் லூ என்ற மலேசியப் பெண் கடந்த செப்டெம்பர் மாதம் ஒரு நிமிடத்தில் 16 உடைகளை பார்வையாளர்கள் முன்னிலையில் மாற்றி கின்னஸ் சாதனை படைத்தார். மினின் இந்த சாதனையை மற்றொரு மலேசியப் பெண்ணான சில்வியா லிம் ஒரு நிமிடத்தில் 18 ஆடைகள் மாற்றியதன் மூலம் முறியடித்தார்.

இதனால் சற்றும் மனம் தளராத மின் தற்போது ஒரு நிமிடத்தில் 20 ஆடைகளை மாற்றி புதிய உலக சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் மின்னின் பெயர் மீண்டும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

மின் செக் லூ நிகழ்த்திய இந்த சாதனையை கின்னஸ் புத்தகம் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட 19 இலட்சம் பார்வையாளர்களைத் தாண்டி இந்த வீடியோ தற்போது இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. (இ-3-10)

# ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை கைவிட்டால் பேரழிவு ஏற்பட்டுவிடும்

## ட்ரம்புக்கு சி.ஐ.ஏ.இயக்குநர் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்புக்கு சி.ஐ.ஏ. இயக்குநர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து சி.ஐ.ஏ. இயக்குநர் ஜான் பிரன்னன் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது ஈரானுடன் அமெரிக்கா செய்து கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தை தான் கைவிடப் போவதாக டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத்தியபடி அவர் நடந்து கொண்டால், அது பேரழிவாகவும் அதிகபட்ச முட்டாள்தனமாகவும் அமையும்.

புதிதாக பொறுப்பேற்கவுள்ள ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம் ரஷ்யாவின் வாக்குறுதிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிரியாவில் வேண்டுமென்றே நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு ரஷ்யா தண்டிக்கப்பட வேண்டும்.

வெளியுறவுத் துறை விவகாரங்களில் அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதியான ஒபாமாவின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை ட்ரம்பும் வரவிருக்கும் அவரது அரசும் கைவிடக்கூடாது. இதில் ட்ரம்ப் நிர்வாகம் ஒழுங்கு மற்றும் மதிநுட்பத்தை கடைப்பிடிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நான்கு ஆண்டுகளாக சி.ஐ.ஏ. இயக்குநராக பொறுப்பு வகித்து வரும் ஜான் பிரன்னன் வரும் ஜனவரி மாதம் பதவி விலக உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

## இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு

# மனித உரிமைகளை அரசியல் ஆயுதமாக பயன்படுத்துவதை ஏற்க முடியாது



## மகிந்தவிடம் சீனா தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளியாரின் தலையீடுகளுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகவும் மனித உரிமைகளை ஒரு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி இலங்கையின் பெயரைக் கெடுப் பதற்கு மேற் கொள்ளப்படும் முயற்சிகளை ஏற்றுக கொள்ளப் போவதில்லை என்றும் சீனா தெரிவித்துள்ளது.**

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையின முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது, சீனாவின் அரசவை உறுப்பினரும் சீன மக்கள் குடியரசின் வெளிவிவகாரங்களுககான முன்னணிக் குழுவின் பொதுச்செயலருமான யாங் யீச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் உள்ள டாவோயுடாய் அரச விருந்தினர் மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, மகிந்த ராஜபக்ஷவை சீனாவின் உண்மையான நண்பன் என்று வர்ணித்துள்ள யாங் யீச்சி, சீனத் தலைநகரில் அவரை வரவேற்பதையிட்டு மகிழ்ச்சி கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். (இ-10)

# உள்நாட்டு விமான சேவை ஒன்றை உருவாக்க இலங்கை அரசு முடிவு

(கொழும்பு)

தனியார் மற்றும் அரச கூட்டு முயற்சியாக, இலங்கை விமானப்படை மூலம் உள்நாட்டு விமானசேவை ஒன்றை உருவாக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் இது தொடர்பாக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த உள்நாட்டு விமான சேவை, அனைத்துலக சிவில விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் விதிமுறைகளுக்கு அமைவாக உருவாக்கப்படும்.

இந்த நிறுவனத்தில் இணைந்து பணியாற்ற தனியார் முதலீட்டாளர்களிடம்இருந்து கேள்விப்பத்திரம் கோரப்பட்டு, தகுதிவாய்ந்த தனியார் முதலீட்டாளர் தெரிவு செய்யப்படுவார் என்றும் கயந்த கருணாதிலக தெரிவித்தார். (இ-10)

# சூரியசக்தியின் மூலம் மின்சாரம்; சட்ட ரீதியான தடைகள் நீக்கப்படும்

சூரியசக்தியின் மூலம் மின்சாரத்தை பிறப்பிக்க விரும்பும் சமூகங்களுக்கு இருக்கும் சட்ட ரீதியான தடைகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது நீக்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

அதனால், தேசிய மின் கட்டமைப்பிற்கு மின்சாரத்தை விற்கவும் வீட்டுக் கூரை மேல் சூரிய மின்சக்தியினை உற்பத்தி செய்யவும் தேவைப்படும் உரிமம் பெறும் செயற்பாட்டிலிருந்து, வீட்டுக்கூரையின் மேல் சூரிய மின்பிறப்பாக்கத் தொகுதியின் மூலம் மின்சார உற்பத்தி செய்யும் மின்சார நுகர்வோர்களுக்கு விலக்களிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட இலங்கை மின்சாரச் சட்டத்தின்படி, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அளித்த உரிமத்தை வைத்திராத எவரும் மின்சாரத்தைப் பிறப்பிக்கவோ, அம்மின்சாரத்தை இலங்கை மின்சார சபைக்கு விற்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆனால் இந்த புதிய தீர்மானத்தின்படி, ஆணைக்குழுவின் உரிமம் இன்றியே, மின்சார நுகர்வோர் எவரும் தத்தம் வசிப்பிடங்களில் சூரிய சக்தி அடிப்படையிலான அமைப்பைப் பொருத்திக் கொண்டு மின்சாரத்தை பிறப்பித்து நுகர்வோர் மற்றும் உரிமதாரர் ஆகியோருக்கு இடையே கைச்சாத்திடப்படக்கூடிய உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு விற்பனை செய்ய முடியும். அவர்களைப்போன்ற அனைத்துத் தரப்பினரும் ஒரு உரிமம் ஒன்றை பெறுவதிலிருந்து விலக்களிக்கப் பெற்றுள்ளனர்.

புதுப்பிக்கக்கூடிய மூல வளங்களின் ஊடாக மின்சாரப் பிறப்பாக்கத்தை ஊக்குவித்தல் என்னும் எண்ணக்கரு மீது, இலங்கை அரசாங்கமும் தனியார் துறை முதலீட்டாளர்களும் தங்களின் கவனத்தைக் குவித்துள்ள வேளையிலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கமானது தற்போது "சூரிய பல சங்க்ராமய" (சூரிய சக்திக்கான போர்) எனும் ஒரு சூரிய மின்சக்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் மூலம் மக்கள் தமக்குத் தேவையான மின்சாரத்தை தாமே உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், வலிதுடைய மின்சாரக் கணக்கொன்றை வைத்திருக்கும் எந்தவொரு வீடு மற்றும் வேறு வளாகங்களின் சொந்தக்காரரும் தாம் பிறப்பிக்கும் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பிற்கு வழங்க முடியும். இது Net metering, Accounting மற்றும் Net Plus எனப்படும் மூன்று முறைமைகளின் கீழ் நடைபெறும்.

சமூக அடித்தளத்தைக் கொண்ட, சிறு அளவிலான, வீட்டுக் கூரை மேல் செய்யப்படும் சூரிய மின்சாரப் பிறப்பாக்கத்திற்கான உரிம விலக்களிப்பிற்கான திட்டங்கள், இன்னும் அதிக அளவிலான சூரியத் தொகுதிகளை சமூகங்கள் பெறுவதற்கு ஊக்குவிக்கும்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தம்மித்த குமாரசிங்க இந்த விலக்களிப்பினூடாக நாம் தடைகளை முடிந்த அளவு குறைக்க விரும்புகின்றோம். அத்துடன் வீட்டுக்கூரைகளின் மேல் சூரிய சக்தித் தொகுதிகளை குடும்பங்கள் உபயோகிப்பதை ஊக்குவிக்கின்றோம் என கருத்துத் தெரிவித்தார்.

'சுற்றுச்சூழலுக்கு நட்பானதும் புதுப்பிக்கக்கூடிய மூல வளங்களின் மின்சாரத்தை சாத்தியமான விலையில் பெறக்கூடியதானதுமான சிறந்த வாய்ப்பாக, இலங்கை மின்சார நுகர்வோர்களுக்கு இது அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மின்சார நுகர்வோர்கள் மத்தியில் சூரிய சக்தி அடிப்படையிலான மின்பிறப்பாக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம், வீட்டு சூரிய மின்சக்திப் பிறப்பாக்கத் தொகுதிகளால் பகல் வேளைக்கான மின்சாரத் தேவையினை எதிர்கொள்ள முடியும். அந்தக் காலப்பகுதியில் அனல்மின் நிலையங்களின் செயற்பாட்டை இது பிரதியீடு செய்யும். அத்துடன் இத்திட்டத்தால் நீர் மூல வளங்கள் அதிக வினைத்திறனுடன் பாதுகாப்படையும்.

இலங்கை மின்சார சபையின் எதிர்வு கூறலின்படி இலங்கையின் மின்சாரத் தேவைப்பாடானது 2015 - 2034 காலப்பகுதியில் சராசரியாக 5.3 வீதம் வளர்ச்சியடையும். அதற்கு மேலதிகமாக, உச்ச தேவைப்பாடானது சராசரியாக 4.7 வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-10)

## இன்று ஒரு தகவல்

### மறித்துப் பேசுகிறீர்களா?

பிறர் பேசும் போது இடைமறித்துக் குறுக்கே பேசுவது இருக்கிறதே அது பொறுத்துக் கொள்ள முடியாதது.

வெளிநாட்டுத் தமிழர்கள் பலரோடு பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

இவர்கள் எல்லோரிடமும் நான் பல சிறப்பான குணங்களையும் பழக்கவழக்கங்களையும் காண்கிறேன்.

கற்றுக் கொள்ளவும் செய்கிறேன்.

மலேசியப் பத்திரிகை நண்பர் ஆதி குமணனைச்சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன்.

இவர் தமிழ் ஓசை இதழின் ஆசிரியர். தமிழகத் தமிழர்கள் சிலரிடம் நான் காணும் ஓர் இயல்பு.

நம்மை இவர்கள் முழுமையாகப் பேசவிடுவதில்லை.

ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இடையில் வேறு ஏதோ சொல்கிறார்கள்.

நாம் சொல்லவந்தது விடுபட்டுப் போகிறது. தலைப்பு மாறி விடுகிறது. அல்லது மறந்து போகிறது என்கிறார்.

மேலைநாட்டினர் பலரும் பிறர் ஏதேனும் பேச ஆரம்பித்தால் எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு , ஒரு குற்றம் சாட்டப்பட்டவன் தன்னைப் பற்றித் தீர்ப்பு வழங்கப்படுவதைக் கவனிப்பதைப் போல் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்.

தாங்கள் பேசும் போது எவரேனும் குறுக்கே பேசினால் அதைத் தனக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அவமானம் என்று கருதுகிறார்கள்; காயப்பட்டுப் போகிறார்கள்.

இந்த உண்மையை உணர்ந்து இந்த நல்ல பழக்கத்தை நாமும் பின்பற்றுவது நல்லது.

எதையும் முழுமையாக வாங்கிக் கொள்ள வேண்டும். பிய்த்துப் பிய்த்து அல்ல!

நாம் அக்கறையுடன் முக்கியத்துவம் தந்தும் கேட்கிறோம் ; நம் கருத்துக்கு மதிப்புக் கிடைக்கிறது. நம்மையும் மதிக்கிறார்கள் என்றெல்லாம் எதிராளி நம்மைப் பற்றிக் கருத நாம் இடமளிக்க வேண்டியது அவசியமாகிறது!

சொல்வதை முழுமையாக வாங்கிக் கொள்ளாமல் அவர் ஏதோ ஒன்றைச் சொல்ல முன்வர நாம் பாதியை மட்டும் கேட்டுக் கொண்டு மீதியை நம் அனுமானத்திற்கும் கற்பனைக்கும் விட்டுவிட அது தொடர்பாக எதையாவது உளறி வைக்க நிலைமை எக்குத் தப்பாகி விடக்கூடும்.

பிறரைச் சரிவர எடை போடவும் அவர்களை முழுமையாகப் புரிந்து கொள்ளவும்.

அவர்கள் சரக்கு இவ்வளவு தான் அல்லது இன்னது தான் எனத் தீர்மானமாக முடிவுக்கு வரவும் பிறரைப் பேச அனுமதிப்பது மிக அவசியமாகிறது.

பழங்காலத்துச் சினிமாக்களைப் பார்த்திருப்பீர்கள்.

ஒருவர் ஒன்றரைப் பக்க வசனம் பேசி முடியும் வரை அடுத்தவர் அமைதியாக இருப்பார்.

அது இன்றைய நடைமுறை வாழ்விற்கும் அவசியமான ஒன்றாக இருக்கிறது.

**லேனா தமிழ்வாணன்**

# விளைதிறன் விருத்திக்கான வெளிநாட்டுப் பயிற்சி

நேற்றைய தொடர்ச்சி....

ஏழாவது விடயத்தலைப்பாகிய மாற்ற முகாமைத்துவம் தொடர்பில் பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் தொடர்பாகவும், தலைமைத்துவ நடிபங்கு தொடர்பாகவும், முகாமைத்துவ மாற்றங்கள், தந்திரோபாய தலைமைத்துவ முகாமைத்துவம், தந்திரோபாய நடைமுறைச் சிந்தனைகள், தீர்மானம் எடுப்பதன் முறைமைகள், நிலைத்து நிற்கக்கூடிய தலைமைத்துவ முகாமைத்துவ மாற்றங்கள், பாடசாலை முன்னேற்றம் தொடர்பான உத்திகள் போன்ற விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

♦ ஆசிரியர் தரங்கணிப்பு என்னும் விடயத்தில் அதன் நன்மைகளாக நேர்மனப்பாங்குத் தன்மை ஏற்படுத்தல், வெளிப்படுத்தல், பின்னூட்டல், அபிவிருத்தியில் சாதகமான தாக்கங்கள், பாடசாலை மட்ட மதிப்பீட்டிலிருந்து தொடர்புபடுத்தல், இலக்கு நிர்ணயம், தொழில் சார் கற்றலும் மற்றும் அபிவிருத்தியும் பற்றி நோக்கப்படுகின்றது.

♦ இறுதியாக பாடசாலை ஒன்றின் உச்சமட்ட முகாமையாகவும் மாற்று முகவராகவும் இருக்கும் அதிபரானவர் பல்பரிமாண தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் கல்வியின் தரத்தை அதிகரித்தல், வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை வினைத்திறனாக்குதல், வெற்றிகரமான கல்விச் சூழலை ஏற்படுத்தல், இணை பாடவிதான மற்றும் ஆரோக்கியமான சுகாதார சூழலை ஏற்படுத்தல், அழகியல் செயற்பாடுகளில் அக்கறை கொள்ளல் கற்றலுக்குரிய மாணவர்களின் நேர முகாமைத்துவத்தினை கண்காணித்தல், பாடசாலையை தினமும் சுற்றி வந்து மேற்பார்வை செய்தல், எழுத்து வேலைக்கு அதிக நேரத்தை செலவழியாது உயர் தகைமை சார்ந்த செயற்பாடுகளுக்கு நேரத்தை செலவிடல் வினைத்திறன் கொண்ட குறுகிய நேர கூட்ட முகாமைத்துவத்தைப் பின்பற்றல், பாடசாலை மட்ட வெற்றியில் அதிபரின் பங்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தைச் செலுத்துவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடல் என்பன மிகச் சிறந்த தலைமைத்துவப் பண்புகளாக நோக்கப்படுகின்றன.

**மலேசியா நாட்டின் கல்வி முறைமையும் பாடசாலையின் கட்டமைப்பும்**

இந்நாட்டின் கல்வியில் எதுவிதமான அரசியல் தலையீடுகளும் ஆதிக்கம் செலுத்தாது பாடசாலைகள் சுதந்திரமாக இயங்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. எமது நாடு போன்று இலவச கல்விக்கான எந்தவித வாய்ப்புக்களும் அங்கே காணப்படுவதில்லை. அரசினுடைய கட்டுநிதிப் பங்களிப்புடனும் பெற்றோர், பழைய மாணவர் நிதிப்பங்களிப்பினுடனும் பாடசாலைகள் செயற்படுகின்றன. எதிர்காலத்தில் கணிதம், விஞ்ஞானம் எனும் பாடங்கள் முழுமையாக ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. பரீட்சை தொடர்பான நெருக்கீடுகள் குறைந்தளவிலே காணப்படுகின்றன. திறன் மற்றும் மனப்பாங்கு விருத்தியினூடாக அறிவு விருத்தி செய்யப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது. அதன் அடிப்படையில் மலேசியாவில் இயங்குகின்ற இரண்டு அரச பாடசாலைகளுக்கு எமது குழுவினர் தரிசிப்பை மேற்கொண்டனர்.

முதலாவது பாடசாலை தரிசிப்பிலே முன்பள்ளி தொடக்கம் பதினொராம் தரம் வரை 31 வகுப்பறைகள் கொண்ட 1296 மாணவர்கள், 120 ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். பாடசாலை நிர்வாக கட்டமைப்பில் அதிபரின் தலைமையின் கீழ் மூன்று உதவி அதிபர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் முறையே அதிபர் கலைத்திட்டத்திற்குப் பொறுப்பாகவும் மற்றையோர் இணைக்கலைத்திட்டம் ஆலோசனையும் வழிகாட்டலும், மாணவர் நலனோம்பு போன்ற துறைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி விடயம் தொடர்பில் எழுகின்ற பிரச்சினைகளுக்கு துறைசார்ந்த பொறுப்பானவர்களே பதிலளிக்கும் கடமைப்பாட்டினையும் கொண்டுள்ளனர். எமது நாட்டைப் போன்று வெறுமனவே நூற் கல்வியின் ஊடான எழுத்துப் பரீட்சையை மையமாக நோக்கியதான கல்வி முறைமை அங்கு காணப்படவில்லை. பொதுப் பரீட்சையில் 30 வீதமானவர்களே சித்தியடைந்து உயர் கல்விக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் பிரவேசிக்கின்றனர். மீதமானவர்கள் தொழிறபயிற்சியின் ஊடாக பயிற்றுவிக்கப்பட்டு அவர்களது திறன் விருத்தி



மேற்கொள்ளப்படுகின்றது. மின்னியல், இலத்திரனியல், கலைத்துறை இலக்கியம், தையல், கடேற், சாரணியம், கராத்தே உள்ளக விளையாட்டுக்கள், வெளியக விளையாட்டுக்கள் போன்ற இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

மாணவர்கள் மகிழ்வாகவும் நெருக்கீடற்ற நிலையிலும் விரும்பிய தொழிறபயிற்சியை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் ஒருவருடம் தொடக்கம் நான்கு வருடம் வரையான காலப்பகுதிக்கு கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு சான்றிதழ், டிப்ளோமாதாரி, பட்டதாரி எனும் நிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 30 நிமிட நேரம் கொண்ட 12 பாட வேளைகள் நாள் ஒன்றிற்கு கற்பிக்கப்படுகின்றது. இவற்றில் இணைக்கலைத்திட்டப் பாடங்களாக சமையற்கலை, தையற்கலை, மெற்றை ரேந்தை செய்தல் என்பன பாட வேளையில் உள்ளீர்க்கப்பட்டு கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் ஆசிரியர்கள் திருப்திகரமான தங்களுடைய செயற்பாட்டை மேற் கொள்கின்றனர். ஆசிரியருடைய வேதனம் மிக உச்ச நிலையில் வழங்கப்படுகின்றது. உதாரணமாக சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் இலங்கை ரூபாவில் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மாதாந்த வேதனத்தைப் பெறுகின்றார். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் ஊடாக புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற ஆசிரியர்களுடைய அடிப்படை வேதனம் நாற்பதாயிரம் ரூபாவாக காணப்படுகின்றது. அதிபருக்கும் உயர் சம்பளம் வழங்கப்படுகின்றது. ஆசிரியர் மாணவர் வீதம் என்பது பத்துக்கு ஒன்றாக அமைந்திருக் கின்றது. அதிபருடைய நிர்வாகச் சுமை என்பது மிகக் குறைந்தளவு காணப்படுகின்றது. காரணம் அலுவலகத்தில் நிதி தொடர்பான எழுதுநர் ஒரு வரும் பிரதம எழுதுநர், ஏனைய உதவி எழுதுநர் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். 670 மாணவர்களைக் கொண்ட இரண்டாவது பாடசாலையிலே மேற்குறித்த ஆளணி நியமனம் காணப்படுகின்றது. இங்கு எமது பிரதேசத்தில் உள்ளது போன்று அதிகளவான மாணவர்களை நிர்வகிக்கின்ற நிலைமை அங்கு காணப்படுவதில்லை. அதிபரின் கடமை ஒன்றிணைத்தல், மேற்பார்வை செய்தல், ஆலோசனை வழங்குதல் என்பனவாகும்.

மாணவர்கள் கற்பதற்குரிய மனித பௌதக வளவசதிகள் யாவும் உச்சமாக காணப்படுகின்றன. ஆசிரியர்களுக்கான ஓய்வறைகள் தனித்தனியே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அவற்றினுள் கணனி கற்பித்தல் சாதனங்கள், தொடர்பாடல் வசதிகள், செயலட்டைகள் என்பன காணப்படுகின்றன. மாணவர்களுக்கான பயிற்சியை நடத்துவதற்கான தனியான பரீட்சை அலகு அமைந்துள்ளது. அவற்றுள் வினாத்தாள் அச்சடிக்கும் இயந்திரம், புள்ளிப் பதிவுகளை மேற்கொள்வதற்கான மற்றும் அலகு உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். ஆசிரியர்களுக்கான இடமாற்றம் என்பது அங்கு பின்பற்றப்படுவதில்லை. அவர்கள் சுய விருப்பில் இடமாற்றம் பெறலாம்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் கற்று வெளியேறியவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படுகின்றது. இங்கு முழுமையாக மாணவர்களது திறன்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. மாணவர்களுக்கான தண்டனை வழங்கலில் சரீர தண்டனை முறை முற்றாக நீக்கப்பட்டுள்ளது. எனினும் ஆறு வகையான தண்டனை வழங்கும் முறைமைகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன ஆரம்ப அறிவுறுத்தல், சிறிய வேலைகளில் ஈடுபடுத்தல், பெற்றோரை அழைத்து ஆலோசனை வழங்கல், தற்காலிக இடைநிறுத்தம் என்ற வகையில் அமைகின்றது. பாடசாலையின் கல்வி நிலை மிக உச்சமாக காணப்படுகின்றது. அதிபர் என்பவர் அதிகாரங்களை பரவலாக்கி ஜனநாயக தலைமைத்துவ முறையில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் சமூகத்தையும் வழி நடத்துகின்றார். தரம் 5 இல் பரீட்சை முறைமை காணப்படுகின்றது. அது கடுமையான போட்டிப் பரீட்சையாகவோ அல்லது மாணவர்களது உளத்தாக்கத்திற்கு உட்பட்ட பரீட்சையாகவோ அமைவதில்லை. இப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பாடசாலை பெற்றோருடைய உயர் ஆதரவு காணப்படுகின்றது. மலேசிய கல்வி முறையில் திறனையும் மனப்பாங்கையும் விருத்தியாக்கும் தந்திரோபாயங்களை மேற்கொள்ளும்போது அறிவு தானாக வளர்ச்சியடையும் என்ற கருதுகோள் பின்பற்றப்படுகின்றது. ஆனால் எமது நாட்டில் மாறாக புத்தக பூச்சியாக பரீட்சை மையமாக அறிவுப் பிரவாகத்தை மட்டும் ஏற்படுத்த முனைகின்ற நிலைமை காணப்படுகின்றது. இந்நிலைமை 21 ஆம் நூற்றாண்டில் மாற்றமுற வேண்டும் என்பதே தற்கால அரசின் நோக்காகும். மலேசிய நாட்டுப் பாடசாலைகளில் விசேட தேவையுடையோர் என்கின்ற தனி அலகு மிகச் சிறப்பாகச் செயற்படுகின்றது. 26 மாணவர்களுக்கு எட்டு ஆசிரியர்களும் மூன்று உதவியாளர்களும் வசதிப்படுத்துநர்களாக செயற்படுகின்றனர். அம்மாணவர்களை இனங்கண்டு சித்திரம் மற்றும் வடிவமைப்பு, புதிர்ப் போட்டிகள், கண்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள், மாதிரிச் சந்தைகள் போன்ற செயற்பாடுகள் மற்றும் அம்மாணவர்களினால் ரேந்தை பின்னுதல், அழகுசாதனப் பொருள் தயாரித்தல் போன்ற செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தரமான கல்வியுடன் கூடியதுமான சமாதானமான நாட்டினை உருவாக்குதல் என்னும் நோக்கும் தனியாளின் உள்ளார்ந்த செயற்பாடுகளை பூர்த்தி செய்து மன வலிமையுள்ள சமூகத்தை உருவாக்கி மிக உயர் தரத்திலான கல்விக் கட்டமைப்பை தோற்றுவித்தல் எனும் குறிக்கோளுடன் அப்பாடசாலை இயங்குவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இஸ்லாமிய மதத்தையே பெரும்பான்மையாக பின்பற்றுகின்ற மக்கள், மாணவர்கள் மதக் கொள்கைகளில் உறுதியாக இருப்பதை காண முடிகின்றது. ஏனைய மதத்தைப் பின்பற்றுகின்றவர்கள் கற்கின்ற போதும் மத ரீதியான புரிந்துணர்வுகள் அங்கே திருப்தியான நிலையில் இருப்பதை நோக்க முடிகின்றது.

அந்தவகையில் 21 ஆம் நூற்றாண்டை எதிர்கொள்ள இருக்கின்ற கல்விச் சமூகத்தை சீரிய முறையில் வழிப்படுத்த வேண்டிய தலைவர்களாக உள்ள அதிபர்கள் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள், தந்திரோபாயங்கள், நுட்ப முறைமைகள் அனுபவ வெளிப்பாடுகள், வெளிநாட்டு சூழலில் பாடசாலைகளினுடைய ஒழுங்கமைப்புக்கள் என்பன பற்றிய ஒரு புத்தி கொள் வகையாகவே இப்பயிற்சி அமைந்திருந்தது என்றால் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மாற்றம் ஒன்றுதான் மாறாது என்பதற்கு ஏற்ற வகையிலே 21 ஆம் நூற்றாண்டின் சமூகத்தை மாற்றியமைப்பதற்கான தொடக்கப்புள்ளியாக இக்குறுகிய காலப் பயிற்சி அமைந்துள்ளது. அந்த வகையில் எமது நாட்டில் கல்வி அபிவிருத்திக்காக அர்ப்பணிப்போடு உழைத்துக் கொண்டிருக்கின்ற பாடசாலையின் உச்ச மட்ட முகாமையாளராகிய அனைத்து அதிபர்களுக்கும் இது போன்றதொரு வெளிநாட்டுப் பயிற்சியை வழங்குவதனூடாக அவர்களது விளைதிறனை விருத்தி செய்ய முடியும் என்பது நிதர்சனமான தொன்றாகும்.

(முற்றும்)

**தி. அபராஜிதன், அதிபர்.**

## உலக நாடுகளுக்கு எந்நாளும் பொய் கூற முடியாது

# நல்லிணக்கப் பயணத்திற்கு ட்ரம்பிடம் மைத்திரி அவகாசம்

## மகிந்த சமரசிங்க தகவல்

(கொழும்பு)

**நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிப்பதற்கு இலங்கைக்கு கால அவகாசம் வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக திறன் அபிவிருத்தி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் நடைபெறுகின்ற அனைத்து சம்பவங்களும் வெளிநாடுகளுக்கு அறிக்கையாக செல்வதாக சுட்டிக் காட்டிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, தினமும் பொய் கூறிக் கொண்டு காலத்தை வீணடிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்தின் வெளிவிவகார அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் மகிந்த சமரசிங்க "மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு சிறந்த வெளிவிவகாரக் கொள்கை, உறவு இருந்திருந்தால் எதற்காக முன் கூட்டியே தேர்தலுக்கு செல்ல வேண்டும்? அவர் இந்திய ஜோதிடர்களின் ஆலோசனையை அல்ல, ஜெனிவா ஜோதிடத்தையே நம்பியிருந்தார்.



புதிய ஆட்சி என்ன செய்தது என்று சிலர் கேட்டனர். இந்த அரசாங்கம் பொருளாதாரத் தடை அபாயத்திலிருந்து தப்பிக்க வழிசெய்தது. பயங்கரமாக வரவிருந்த ஐ.நா.மனித உரிமைப் பேரவை தீர்மானத்தையும் ஒத்திவைக்க முயற்சித்தது. நல்லாட்சி அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை பக்கச்சார்பானதல்ல. உலக நாடுகளுக்கு எந்நாளும் பொய்கூற முடியாது. இங்கு நடைபெறும் அனைத்து சம்பவங்களுமே அறிக்கையாகச் செல்கின்றன. எனவே ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இணைந்து சிறப்பான திட்டங்களை வகுக்கின்றனர். அதேவேளை அமெரிக்க தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என அங்குள்ள மக்களை வழிநடத்தும் அதிகாரம் எமக்கில்லை. எனவே எமது அரசாங்கம் மீது வீண்பழி சுமத்தக்கூடாது. நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிப்பதற்கு காலம் அவசியம் என அமெரிக்க ஜனாதிபதியிடம் எமது ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கா என்பது பலம்பொருந்திய நாடு. அதனுடன் இணைந்து செயற்படுவதற்கு இலங்கை எப்போதும் தயாராகவே இருக்கிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## சீனப் பெருஞ்சுவரை பார்வையிட படையெடுத்த மகிந்த அணியினர்





சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார். சீனா சென்றுள்ள மகிந்த, அங்குள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பார்வையிட்டு வருகிறார்.


அதற்கமைய உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவரை பார்வையிட மகிந்த குழுவினர் சென்றுள்ளனர். சீனாவில் நிலவும் குளிரான காலநிலையைப் பொருட்படுத்தாமல் மகிந்த குழுவினர் சுற்றுலாவில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான புகைப்படங்களை மகிந்த தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை சீனாவில் சுற்றுலா பயணிகளை கவரும் Canton tower ஐ பார்வையிடவும் மகிந்த சென்றிருந்தார். அதன் பின்னர் Nansha கண்காட்சி கூட வர்த்தக சோதனை மண்டலத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 916

நிரு




மரியதாஸ்




வின்ஜக்ஷன்




ராதி




விமல்




மயூரி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் உயர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் 65 ஆவது அகவை



"உண்மையான மகிழ்ச்சி நாம் சம்பாதிக்கும் பணத்தில் இல்லை. அதில் எவ்வளவு தர்மங்களைச் செய்கின்றோம் என்பதிலேயே அடங்கியிருக்கின்றது" என்பதிற்கமைய **திரு.வாமதேவா தியாகேந்திரன்** அவர்கள் சுவிஸ் நாட்டில் வசித்தாலும் தான் பிறந்த மண்ணுக்கும் மக்களுக்கும் உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் தியாகி அறக்கொடை நிறுவனத்தை உருவாக்கித் தனது முழுமையான உழைப்பாலும் நிதிப்பங்களிப்பினாலும் வறுமையில் உள்ள எமது மக்களுக்கு அறப்பணிச் செயற்பாடுகளைத் தொய்வில்லாது தொடர்கின்றார்.

**தமது 65ஆவது அகவை நாளாகிய இன்று மட்டும் (02.12.2016) அவரின் அறப்பணிக் கொடுப்பனவுகள்.**

1) பார்வைக் குறைபாடுடைய பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியவர்கள் 250 பேருக்கு வைத்தியர்களின் சிபார்சிற்கு அமைய பத்து இலட்சம் ரூபா (10,00,000/=) பெறுமதியான மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

2)மகளிர் எழுச்சித் திட்டத்தில் 32 மகளிர்கள் புதிய அங்கத்தவர்களாக இணைக்கப்படுகின்றார்கள்.இவர்களுக்கு முதற்கட்டமாக 3000/= ரூபாவும் மாதாந்தம் தலா 1000/=ரூபாவும் அவர்களின் கணக்கில் வைப்பிலிடப்படும்.இதற்கு முதற்கட்டமாக ஒதுக்கப்பட்ட தொகை 96000/=

3) தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான (200,000/=) உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

4) தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு பசுமாடுகள் வழங்கப்படவுள்ளன. இதற்காக ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (100,000/=)

5) ஊனமுற்ற பயனாளிகள் மூவருக்கு ஒரு இலட்சத்து ஐயாயிரம் (105,000/=) பெறுமதியான மூன்று சில்லு சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

6) 350 பயனாளிகளுக்கு மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியான (350,000/=) புடைவைகள் வழங்கப்படவுள்ளன.

7) தெரிவுசெய்யப்பட்ட 10 சிறுவர்களுக்கு தலா 1500/= பெறுமதியான பரிசுப் பொருட்கள் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 15 ஆயிரம் ரூபாய்கள் (15,000/=)

8) தெரிவுசெய்யப்பட்ட 100 முதியவர்களுக்கு 1500/= பெறுமதியான மடிப்பு மெத்தையும், தலையணையும் வழங்கப்படவுள்ளன. இதன் மொத்தப் பெறுமதி ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்கள். (Folding mattresses and pillows) 150,000/=

● தியாகி அறக்கொடை நிறுவனத்தினூடாக ஆண்டு தோறும் பல மில்லியன் ரூபாய்கள் பின்வரும் மாதாந்த சமூக நலச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்றன.

**1. கல்வி ஊக்குவிப்பு செயற்றிட்டம் :-**

❖ சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு சில பிரதேச செயலகத்தினால் கொண்டாடப்படும் சிறுவர் தின விழாவிற்கு அன்பளிப்புப் பொருட்கள் எம்மால் வழங்கப்பட்டு வருகின்றன.

❖ பாடசாலை மாணவர்களுக்கான உதவி மிகவும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மாதாந்தம் தலா 500/= வழங்கப்படுகின்றது.

❖ **பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி**

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வித்தேவைக்காக மாதாந்தம் தலா 1000/= வழங்கப்படுகின்றது.

**2. பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிச் செயற்றிட்டம்**

❖ கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட மிகவும் வறிய நிலையில் இருக்கும் குடும்பங்கள் பொருளாதார முயற்சியில் வருமானத்தையீட்டத் தொடங்கும் வரை அவர்களின் குடும்ப நிலைக்கேற்ப மாதாந்தம் தலா 500/= தொடக்கம் 2000/= வரை வழங்கப்படுகின்றது.

❖ பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மாதர் சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த வசதி செய்து கொடுக்கப்படுகின்றது.

**3) மருத்துவ உதவிச் செயற்றிட்டம்**

❖ புற்று நோயாளருக்கான உதவி

புற்று நோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய நிலையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவ செலவிற்காக மாதாந்தம் தலா 1000/= வழங்கப்படுகின்றது.

❖ முதியவர்களுக்கான மருத்துவ உதவி

பிரதேச செயலகங்களின் ஊடாக மாவட்ட அலுவலகர் சமூகசேவைத் திணைக்களத்தினால் வைத்திய உதவி போதியளவு பெறமுடியாத வறுமைக்குட்பட்ட முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச மருத்துவ சேவை எம்மால் வழங்கப்படுகின்றது. அத்துடன் இவர்களுக்கு இலைக்கஞ்சியும் போக்குவரத்து வாகன வசதிகளும் வழங்கப்படுகின்றன.

**4) ஆதரவற்ற முதியவர்களுக்கான உதவிச் செயற்றிட்டம்**

❖ ஆதரவற்று வறுமைக் கோட்டின் கீழ் வாழும் முதியோர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு தலா 500/- வழங்கப்படுகின்றது.

**5) சிறுவர்கள் தொடர்பான செயற்றிட்டம்**

எம்மால் நடத்தப்பட்டு வரும் சிறுவர் இல்லத்தில் பெற்றோரை இழந்து பாடசாலை செல்லும் பெண் பிள்ளைகள் நன்றாக பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

**6) மகளிர் மீள் எழுச்சித்திட்டம்**

பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பெண்களுக்கு மாதாந்தம் 1000/- ரூபா உதவித்தொகையாக வழங்கப்படுகின்றது அவர்கள் பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

**7) தாய்-சேய் நலத்திட்டம்**

வறுமைக் கோட்டிற்குட்பட்ட ஒரு வருடத்திற்குட்பட்ட குழந்தையையுடைய தாய்மாருக்கு மாதாந்தம் 1000/- பெறுமதியான சத்துணவுப் பொதி வழங்கப்படுகின்றது.

**8) சூழல் பாதுகாப்புத்திட்டம்**

❖ இத்திட்டத்தின் ஊடாக செம்மணி இந்து மயானம் தெரிவு செய்யப்பட்டு இங்கு 200 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் மாதம் தோறும் இம் மயானத்தில் உள்ள புற்செடிகள் எம்மால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. எமது நிறுவனம் மேலும் சில உதவித்திட்டங்களை முல்லைத்தீவு, அம்பாறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள சில இடங்களிலும் செயற்படுத்தி வருகிறது. எமது இந்த நிறுவனம் இன, மத, மொழி வேறுபாடின்றி மனித நேயத்தோடு செயற்பட்டு வருவது இங்கே குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட உதவித்திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதி வளங்கள்

❖ எமது ஸ்தாபகர் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நன்கொடை.

❖ ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தில் இருந்து கிடைக்கும் வருமானம்

எமது உதவித்திட்டங்களுக்கான நிதியை பெறும் வழியாக ஆரம்பிக்கப்பட்ட வியாபார நிலையத்தின் மூலம் கிட்டத்தட்ட 100 பேர் வரையிலான இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளமை இங்கே குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

*எஸ்.மாணிக்கராஜா பிரதி கல்வி பணிப்பாளர் யாழ்ப்பாணம்.*

*"அறப்பணியே எமது முதற்பணி"*

# 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு சாரதி அனுமதிப்பத்திரம் பெற அலையும் அரசியல்வாதிகள்

வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக வைத்திய சான்றிதழ் பெறுவதற்கு நுகேகொட தேசிய போக்குவரத்து நிறுவனத்துக்கு வருகை தருபவர்களின் தொகை அதிகரித்துள்ளதாக அந்நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். பல வருடங்களாக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய அரசியல்வாதிகள், ஆசிரியர்கள் ஆகியோரும் இவர்களில் அடங்குகின்றனர்.

நேற்று முன்தினமும் நேறறும் மட்டும் 2000 பேருக்கும் அதிகமானவர்கள் நுகேகொட தேசிய போக்குவரத்து நிறுவனத்துக்கு வருகை தந்துள்ளதாகவும் குறித்த பேச்சாளர் தெரிவித்துள்ளார்.(இ-10)


# 65 ஆவது அகவையில்....

## திரு.வாமதேவா தியாகேந்திரன்



தனக்குரியதை பிறரின் நலனிற்காக தானாக இழத்தல் தியாகம். தியாகத்திற்காக கருத்து வடிவமாக மட்டுமல்லாது செயல்வடிவமாகவும் மிளிர்வது தியாகி அறக்கொடை நிறுவனம். சேவை செய்வதே ஆனந்தம், அதிலும் தன்னலங்கருதாது தேவையறிந்து சேவை செய்த பேரானந்தம் என்பதை உணர்ந்து ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றினை திறந்து அதன் ஊடாக 100 இற்கு மேற் பட்ட இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினையும் அவற்றின் ஊடாக வரும் இலாபத்தினை ஏழைகளுக்கு வழங்கிவரும் எமது ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் 65 ஆவது பிறந்த நாளாகிய இந்நாளில் அவர் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

(இ-6541)

**ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்,**
**527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:19 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6559 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 32 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6565 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 2சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை தொழில்: பொறியியலாளர்/அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/6560 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 35<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/6567 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 32செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:O/L/சாரதி<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6561 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6570 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 105சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 177cm<br>தகைமை/தொழில்:CIMA/தனியார் தொழில்<br>தொ.இ: B/6562 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 32<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:HNDA<br>தொ.இ: G/6572 |


**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

# 'சாய ஊசி' மருந்துக்கு தற்காலிக தடை விதிப்பு

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த 28ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இருதய அறுவைச் சிகிச்சையின்போது ஏற்றப்பட்ட ஊசி காரணமாக நால்வர் உயிரிழந்த சம்பவத்தையடுத்து அடையாளம் காணப்பட்ட ஊசி மருந்தை ஏற்றுவதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற, அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்த சாய வகை ஊசி மருந்து தொடர்பில், தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபை ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சாய வகை ஊசிமருந்து, தேசிய வட கொழும்பு, வைத்திய சாலை, யாழ்ப்பாணம், கராப்பிட்டிய, பதுளை, களுத்துறை, குருநாகல் ஆகிய பிரதேச வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-10)





புங்குடுதீவு உலக மையத்தினரால் இ. சந்திரதாசனின் நிதிப் பங்களிப்போடு புங்குடுதீவு கமலாம பிதை வித்தியாலய வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண டியும் தேசிய ரீதியில் நடைபெற்ற விஞ்ஞான புத்தாக்கப் போட்டியில் தேசிய ரீதியில் 2ஆம் இடம் பெற்ற மாணவனுக்கும் அவரை மேம்படுத்திய விஞ்ஞான ஆசிரியருக்கும் ஊக்குவிப்பு பரிசில் பாடசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமையன்று வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 50 | 100 | 60 |
| தக்காளி | 50 | 80 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 60 |
| கோவா | 40 | 80 | 60 | 60 | 40 |
| கரட் | 80 | 120 | 80 | 160 | 100 |
| பூசணி | 40 | 40 | 30 | 60 | 40 |
| புடோல் | 100 | 80 | 50 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 80 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 140 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 250 | 140 | 200 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 120 | 60 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 70 | 100 | 60 |
| பயற்றங்காய் | 140 | 100 | 100 | 200 | 140 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 50 | 120 | 60 |
| கறிமிளகாய் | 150 | 120 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 80 | 120 | 140 |
| போஞ்சி | 200 | 250 | 180 | 240 | 200 |
| கத்தரிதும்புள்ள | 60 | 60 | — | 80 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 60 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 350 | 400 | 400 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 35 | 25-35 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 160 | — | — | 200 | — |
| முள்ளங்கி | 80 | — | — | 80 | 50 |
| பொன்னாங்காணி | 35 | — | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | — | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | — | 80 | — | — |

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 02



நளினி

**"இதுவரையிலும் நான் கேட்டிரத பெரிய வெடிச்சத்தம். திரும்பிப் பார்த்தேன். ஒரே புகை மண்டலம். கூட்டத்துக்குள் இருந்து சிவராசன் எங்களை நோக்கி வந்தார். ஆட்டோவில் ஏறினோம். நிறைய குழப்படிகள் என்று சொல்லிக் கொண்டார். புதிதாக ஒரு வீட்டுக்கு எங்களை அழைத்துச் சென்றார் சிவராசன்."**

...என் கழுத்தில் முருகன் தாலி கட்டினார். அவர் விருப்பப்படி என் காலில் மெட்டியைப் போட்டு விட்டார். தாலியையும் மெட்டியையும் என் வழக்கில் ஏன் மறைத்தார்கள்? எங்கள் உறவையும் ஏன் கொச்சைப் படுத்தினார்கள் என்பதுதான் எங்கள் காதலுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய துரதிர்ஷ்ட வலியாகும்.

### தனுவைச் சந்தித்தேன்!

திருமணத்துக்குப் பிறகு, அவரது வெளிநாட்டுப் பயணத்தில் நான் அதிக அக்கறை செலுத்த ஆரம்பித்தேன். பயண முகவர் என்ற அளவில் முதன் முதலில் சிவராசன் என்பவரைப் பற்றி சொன்னார். 'ஈழ விடுதலைக்கு இந்தியத் தலைவர்களின் ஆதரவை சிவராசன் திரட்டி வருபவர். ஒவ்வொருவராக சந்தித்து நட்பு ஏற்படுத்தி வருபவர்' என்று என் கணவர் சொன்னார்.

1991 மே மாதம் மூன்றாம் திகதி அன்று தான் சிவராசன் எனக்கு முதன்முதலாக அறிமுகமானார். சுபா, தணு ஆகிய இருவரையும் அழைத்து வந்து அறிமுகம் செய்தார் சிவராசன். வில்லிவாக்கத்தில் உள்ள எனது வீட்டில் தங்கி இருந்தார்கள்.

07.05.1991 அன்று நந்தனத்தில் நடந்த வி.பி.சிங் கலந்து கொண்ட கூட்டத்துக்கு என்னை அழைத்தார்கள். சென்றேன். கூட்டத்தில் ஹரிபாபு, பேரறிவாளன் ஆகிய இருவரையும் பார்த்தேன். வி.பி.சிங்குக்கு மாலை அணிவிக்க தணு முயற்சி செயதார். முடியவில்லை. மேடையில் இருந்து இறங்கிப் போகும் போது மாலையைக் கையில் வாங்கிக்கொண்டார் வி.பி.சிங். சுமார் ஏழு மணி நேரம் அங்கு இருந்தோம். பிறகு நடந்த விசாரணையில் அந்தக் கூட்டத்தில் எங்களை பார்த்ததாக ஒருவர் கூட சாட்சியம் அளிக்கவில்லை.


12.05.1991 அன்று சுபாவும் தணுவும் என் வீட்டுக்கு வந்தார்கள். அன்று எனக்கு விடுமுறை நாள் என்பதால் அவர்களை மீண்டும் சினிமாவுக்கும் கோயிலுக்கும் கடைக்குமாக அழைத்துப்போய் வந்தேன். மே 18ஆம் திகதியும் வந்தார்கள். அன்று முழுவதும் மகாபலிபுரம் சென்று வந்தோம். 19ஆம் திகதியும் வெளியில் சுற்றினோம். விடிந்ததும் அவர்கள் கிளம்பினார்கள். நான் வேலைக்குச் சென்று விட்டேன்.

### அந்த நாளும் வந்தது!

21ஆம் திகதி சுபா, தணுவுடன் பாரிஸ் கார்னர் பேருந்து நிலையம் போய் இறங்கினோம். அங்கு சிவராசனும் ஹரிபாபுவும் காத்திருந்தார்கள். சுமார் ஏழு மணி அளவில் ஸ்ரீபெரும்புதூரில் இறங்கினோம். சாப்பிட்டோம். கூட்டமே இல்லை. பொலிஸார் தான் அதிகம் இருந்தார்கள். சிவராசனும், தணுவும் ஏதோ கோபமாகப் பேசிக் கொண்டார்கள். அங்கிருந்த முக்கிய நபர்களை சிவராசனுக்குத் தெரிந்திருந்தது. அவர்களுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார் சிவராசன். வி.ஐ.பிகள் உட்காரும் இடத்துக்குள் தணுவை மட்டும் அழைத்துக்கொண்டு போனார். பெண்கள் பகுதியில் நாங்கள் உட்கார்ந்து கொண்டோம். சிறிது நேரத்தில் வி.ஐ.பிகள் வரிசையில் தணுவை முதலாவதாகக் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, வேறு ஒரு பகுதியில் தூரமாகப் போய் நின்றுகொண்டு, அங்கிருந்த தலைவர்களிடமும் பேசிக் கொண்டிருந்தார் சிவராசன்.

சுமார் 10.15 இருக்கும் ராஜீவ் காந்தி வந்து விட்டார். அவரை அருகில் சென்று பார்க்க எனக்கு ஆர்வமாக இருந்தது. சுபாவை அழைத்தேன். வேண்டாம் என்று என் கையைப் பிடித்து இழுத்த சுபா, வெளியே இழுத்துச் சென்றார். கூட்டத்தைவிட்டு வெளியே நகர்ந்து சற்று தள்ளி தூரமாகப் போய் நின்றுகொண்டார். 'என்னாச்சு சுபா... ஏன்?' என்று கேட்டேன். 'ஒன்றுமில்லை பேசாமல் இருங்கள்' என்றாள். என்னையும் வெளியே இழுத்துச் சென்றாள்.





வீதியை நோக்கி நடந்திருப்போம். இதுவரையிலும் நான் கேட்டிராத பெரிய வெடிச்சத்தம். திரும்பிப் பார்த்தேன். ஒரே புகைமண்டலம். கூட்டத்துக்குள் இருந்து சிவராசன் எங்களை நோக்கி வந்தார். ஆட்டோவில் ஏறினோம். 'நிறைய குழப்படிகள்' என்று சொல்லிக் கொண்டார். புதிதாக ஒரு வீட்டுக்கு எங்களை அழைத்துச் சென்றார் சிவராசன்.

### கண் முன்னால் நடந்து போனார் தணு!

நாங்கள் மூன்று பேரும் ஆட்டோவில் இருந்து இறங்கி வீட்டை நோக்கி நடக்கிறோம். பட்டென்று எங்கள் முன்பாக கண்ணெதிரே தணு நடந்து போய்க்கொண்டிருந்தார். இது கற்பனை அல்ல. நாங்கள் எல்லோருமே அந்தக் காட்சியைக் கண் கூடாகப் பார்த்து நிற்கிறோம். எங்களுக்குமுன் தணு அங்கு எப்படி வந்தாள் என நான் அதிர்ச்சியானேன்.

(வலிகள் தொடரும்...)

# 'நாடா புயலை' எதிர்கொள்ளும் மக்களுக்கான சுகாதார அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகள்

## கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத்துறையினர் அறிவிப்பு

(பரந்தன்)

நாடா புயலை எதிர் கொள்வதற்கான சுகாதார அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகள் கிளிநொச்சி மாவட்ட சுகாதார துறையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வானியல் எதிர்வுகூறல்களின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தினூடாக 83 தொடக்கம் 93 கிலோமீற்றர் வேகத்தில் கடும் சுழல்காற்று வீசக்கூடும்.

அதேவேளை 46 மில்லிமீற்றரில் இருந்து 57 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சியும் அடுத்துவரும் 24 மணிநேரத்தினுள் எதிர்பார்க்கப்படுகிறது.

சடுதியான கனமழை காரணமாகவும் கடும் சுழல் காற்றுக் காரணமாகவும் நேரக்கூடிய போக்குவரத்துத் தடை, மின்சார மற்றும் தொலைத்தொடர்புச் சேவைத் தடைகளை மனதிற் கொணடு பின்வரும் முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது.

இதற்கமைய 38 வாரங்கள் (9மாதத்திற்கு) அல்லது அதற்கு மேற்பட்ட கர்ப்ப காலம் உள்ள கர்ப்பவதிகள் மற்றும் பிறந்து ஒருமாதத்திற்கு உட்பட்ட வயதுடைய பச்சிளம் பாலகர்கள் ஆகியோர் அருகில் உள்ள வைததிய சாலைகளில் தங்கியிருப்பது பாதுகாப்பானது.

மேலும் எவராவது கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார் முள்ளந்தண்டுவடம் பாதிப்புற்றோர் தத்தமது பகுதிகளில் வெள்ள அபாயம் அல்லது போக்குவரத்துத் தடை நேரிடும் என எண்ணினால், அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சென்று தற்காலிகமாகத் தங்கமுடியும்.

கொதித்தாறிய நீரைப் பருகுவதையும் உணவு அருந்துமுன் கைகளைக் கழுவிக்கொள்வதையும் தவறாது கடைப்பிடிக்கவும்.

தற்காலிகமாக நீங்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்க நேரிட்டால் உங்கள் பகுதி சுகாதார வெளிக்களப் பணியாளர்களுக்கு அல்லது 077 021 2765 என்ற இலக்கத்திற்கு உடனடியாக அத்தகவலைத் தெரிவியுங்கள்.

அவசரகால நிலைமைகளில் உதவிகோரி உங்களது பகுதி சுகாதார மருத்துவமாது, பொதுச் சுகாதாரப பரிசோதகர் அவர்களுக்கோ அல்லது பின்வரும் இலக்கங்களுக்கோ எந்த நேரத்திலும் அழைப்பினை ஏற்படுத்தலாம்.

கிளிநொச்சி மாவட்டம

மாவட்ட சுகாதார அனர்த்த முகாமைத்துவ நிலையம்- 024 324 8197 அல்லது 021 228 5931, கிளிநொசசி மாவட்ட பொது வைத்திய சாலை-021 228 5328.

கண்டாவளைப் பிரதேசம்

பிரதேச வைத்தியசாலை தருமபுரம்-021 206 0469

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-021 206 0415

பளைப் பிரதேசம்

பிரதேச வைத்தியசாலை பளை-021 205 0025, பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-021 205 0024

பூநகரிப் பிரதேசம

முழங்காவில் ஆதார வைத்தியசாலை-024 324 4010, பூநகரி பிரதேச வைத்திய சாலை-021 206 0854, பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-021 206 0822

வேரவில் பிரதேச வைத்தியசாலை-024 324 7238, ஜெயபுரம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு அலகு-071 757 4197.

கரைச்சிப் பிரதேசம்

உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலை-077 021 2765, அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலை-077 433 2446, கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை 0212283823(2-32-15)

# தற்காலிக வகுப்பறை தொகுதி புயல்காற்றினால் பாறி வீழ்ந்தது

## கிளி/முருகானந்தா கல்லூரியில் சம்பவம்



(பனிக்கன்குளம்)

"நாடா" புயல்காற்று எனக் கூறப்படும் புயல் காற்று ஒன்று நேற்று வடக்கை அச்சுறுத்திய நிலையில் நேற்று காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் உள்ள தறகாலிக வகுப்பறை தொகுதி ஒன்று முற்றாக பாறி வீழ்ந்துள்ளது.

இந்த சம்பவம் நடந்த வேளை பாடசாலையில் மாணவர்கள் இருந்த போதிலும் எவருக்கும் எந்தவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

தரம் ஆறு தொடக்கம் உயர்தரம, கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், ஆகிய பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகின்ற இப்பாடசாலையில் கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட பிரதேச மாணவர்கள் அதிகமாகக் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(2-281-312-15)

# சந்தேகத்திற்கிடமாக நடமாடியவர் இரண்டு ஆட்பிணையில் சென்றார்

(குரணவாய்)

இரவு வேளையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் விடுவித்ததுடன் வழக்கை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நெல்லியடிப் பொலிஸார் ரோந்து சென்று கொண்டிருந்தபோது அரசடிப் பகுதியில் இரும்புக்கேடருடன் நின்றிருந்த நபர் ஒருவரைக் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே பிணையில் விடுவிக்கப்பட்டார்.(இ-60)

# முல்லையில் கடும்காற்று; இயல்புவாழ்க்கை பாதிப்பு

## கடற்றொழிலாளர்கள் கடலுக்கு செல்லவில்லை





முல்லைத்தீவு பகுதியில் நேற்று கடும் காற்று வீசியதால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்புக்குள்ளானது. முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் கடும் காற்று வீசிவருவதோடு புயல் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகினர்.

நேற்றையதினம் முதல் கடலில் மையம் கொண்டுள்ள தாழமுக்கம் காரணமாக காற்று பலமாக வீசுவதோடு கடல் கொந்தளிப்பாக காணப்பட்டது.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் தொழிலாளர்கள் எவரும் கடலுக்கு செல்லமுடியாத நிலை காணப்படுவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர் .

முல்லைத்தீவு நகரப் பகுதியில் நேற்றைய தினம் மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## துணுக்காய், முல்லைத்தீவு கல்விவலய

# மாணவர்களின் கல்வி நடவடிக்கையை ஊக்குவிக்க கற்றல் உபகரணப்பொதிகள்

## முல்லை. மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கமநல மற்றும் கல்வி அபிவிருத்தி நிலையத்தின் 15 இலட்சம் ரூபா நிதி அனுசரணையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட 10 கமநல சேவை நிலையப்பிரிவுகளுக்கு ஊடாக துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்ற மாணவர்களில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 360 மாணவர்களுக்கு எதிர்வரும் 2017 ஆம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு நேற்று வியாழக்கிழமை ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திலும் மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்திலும் நண்பகல் 12 மணி தொடக்கம் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு ஒட்டுசுட்டான்பிரதேசத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணப்பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே. ஆயகுலன், மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணப்பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

இக்கற்றல் உபகரணப் பொதிகள் 10 கமநல சேவை நிலையப்பிரிவுகளான துணுக்காய் 150, ஒலுமடு 100, முள்ளியவளை 155, ஒட்டுசுட்டான் 204 ,அலம்பில் 60, பாண்டியன்குளம் 150, குமுழமுனை 166, கொக்குத்தொடுவாய் 75, உடையார்கட்டு 100 , புதுக்குடியிருப்பு 100 என மொத்தமாக ஆயிரத்து 160 பொதிகளும் மேலதிகமாக 200 பொதிகளுமாக மொத்தம் ஆயிரத்து 360 கற்றல் உபகரண பொதிகள் தலா ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியில் 15 இலட்சம் ரூபா நிதியில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார். (2-15)

# மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத்தின் மாதாந்த நிர்வாக சபைக் கூட்டம்

வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத்தின் மாதாந்த நிர்வாக சபை கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வலி.வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் கலந்துரையாடவிருப்பதால் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளான ஜே/ 233,234,235, 247, 249,250,251 ஆகிய கிராம சேவகர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்தி சங்க தலைவர்கள், செயலாளர்கள், அனைவரும் கலந்து கொள்ளுமாறு வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்க தலைவர் அ.குணபாலசிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-9)

# கலை இலக்கிய வட்டத்தின் 30வது ஆண்டு நிறைவு விழா


(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் 30 ஆவது ஆண்டுநிறைவு விழா நாளை மறுதினம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் இடம்பெறும். மடு வயக்கல்விப் பணிப்பாளரும் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் தலைவருமான யோண் குயின்ரஸ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் இ. ஆனோல்ட், கௌரவ விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி எட்.எக்ஸ். அன்ரன், சிறப்பு விருந்தினராக அருட்பணி செ. அன்புராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# கவனிப்பாரற்ற நிலையில் இராஜகிராமம்





யாழ். கரவெட்டி இராஜகிராமம் தொடர்பில் பொது நிறுவனங்களோ, பிரதேச சபையோ கவனம் செலுத்துவதில்லை என அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தற்போது மழை பெய்துள்ள நிலையில் அப்பகுதியில் உள்ள வீதிகள் பாவிக்க முடியாதளவிற்கு சேறும் சகதியுமாகக் காணப்படுவதாகவும் விளையாட்டு மைதானம் கூட வெள்ளநீர் நிறைந்து காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் குடிநீருக்காக பயன்படுத்தப்படுகின்ற கிணறு துப்புரவு செய்யப்படாது பாசிகள் சூழ்ந்த நிலையில் காணப்படுகின்றது.

கழிவகற்றலில் பிரதேச சபையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் அப்பகுதியில் கழிவுகள் தேங்கிக் காணப்படுகின்றன.

இதன் காரணமாக டெங்கு நோய்த் தாக்கம் உட்பட பல தொற்றுநோய்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே இது விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# கிழக்கு அலெப்போ நகரிலிருந்து 50 ஆயிரம் மக்கள் வெளியேற்றம்



(அலெப்போ)

சிரியாவில் இராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியதால், கிழக்கு அலெப்போ நகரில் இருந்து 50 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினர் மற்றும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சிரிய அரசாங்கம் மற்றும் ரஷ்ய படையினர் இணைந்து வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றனர். சிரிய அரசுக்கு எதிராக போராடும் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள அலெப்போ நகர் மீது தற்போது உக்கிரமான தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்தத் தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் மட்டுமன்றி பொது மக்களும் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து ஐ.நா. வேண்டுகோளை ஏற்று மக்கள் பாதுகாப்பாக வெளியேற ஏதுவாக தாக்குதலை நிறுத்த ரஷ்யாவும் சிரியாவும் சம்மதம் தெரிவித்தன. ஐ.எஸ். தீவிரவாதிகள் மக்களை கேடயமாக கொண்டு தாக்குதலில் ஈடுபடுவதால் அவர்களை வெளியேற்றும் நடவடிக்கையை சிரிய அரசு துரிதப்படுத்தியது.

இந்நிலையில் சிரியாவில் இராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு அலெப்போ நகரின் மூன்று மாவட்டங்களில் இருந்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதில் 20 ஆயிரம் மக்கள் அரசு கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் சென்றுள்ளனர். ஆனால் 30 ஆயிரம் பேர் குர்தீஷ் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்டங்களுக்குள் சென்றுள்ளனர். இன்னும் பலர் அலெப்போ நகரின் தெற்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

முன்னதாக அலெப்போ நகரில் நேற்று முன்தினம் விமானப்படை நடத்திய குண்டு வீச்சு தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

# உடல் உறுப்புத் தானத்தில் தமிழகத்திற்கு முதலிடம்

உடல் உறுப்புத் தானத்தில் தமிழகம் முதல் இடம் பிடித்துள்ளது. இதற்கான விருதை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் மற்றும் சுகாதாரத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

உடல் உறுப்புத் தானம் என்பது மருத்துவத்துறையில் தற்போது முக்கிய அம்சமாக விளங்கி வருகிறது.

இதனால் இதுபற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கிடையே உறுப்புத் தானத்தில் சிறந்து விளங்கும் மாநிலங்களுக்கு தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு சார்பில் ஆண்டு தோறும் விருது வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா (7ஆவது விழா) உடல் உறுப்புத் தான நாள் விழாவையொட்டி டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விழாவில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டா கலந்து கொண்டு விருது வழங்கினார். (இ-3-10)

# தமிழ் சினிமா வரலாறு

## 'எனக்கு விரைவில் திருமணம்! பிறகு நடிக்க மாட்டேன்' பத்மினி திடீர் அறிவிப்பு

313

ஏ.எல்.எஸ். பேனரில் ஏ.பீம்சிங் டைரக்ட் செய்த இப்படம் நீண்ட காலமாகத் தயாரிப்பில் இருந்தது.

திருமணம் ஆனபின் சினிமாவில் நடிப்பதில்லை என்று லலிதா முடிவு செய்துவிட்டதால் அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை திருமணத்துக்கு முன்பே எடுத்து முடித்தனர்.

(லலிதாவுக்கு திருமணம் நடந்து 4 ஆண்டுகளுக்குப்பின் 14.09.1962 செந்தாமரை ரிலீஸ் ஆகியது).

திருமணத்தக்குப்பின் லலிதா தன் கணவருடன் ஆலப்புழையில் குடியேனார்.

பத்மினி தன் தாயாருடன் சென்னையில் வசித்ததால் லலிதா இடையிடையே சென்னைக்கு வந்து தாயாரையும் தங்கையையும் பார்த்து விட்டுச் செல்வது வழக்கம்.

எனக்கு விரைவில் திருமணம் நடைபெறப்போகிறது. அதன் பிறகு சினிமாவில் நடிக்க மாட்டேன் என்று நடிகை பத்மினி 1961 ஏப்ரலில் அறிவித்தார்.

திரை உலக ராணிகள்

எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன், ஜெமினிகணேசன் ஆகியோர் தமிழ்த்திரை உலகின் மூவேந்தர்களாக பவனி வந்த போது பானுமதி, பத்மினி, சாவித்திரி ஆகியோர் மூன்று மகாராணிகளாகத் திகழ்ந்தனர்.

பத்மினி நடனக்கலையில் தேர்ந்தவராக இருந்ததால் நடனங்கள் இடம் பெற்ற படங்களில் அவர் கொடி உயரமாகப் பறந்தது.

பத்மினியை விட பானுமதி சுமார் 10 வயது மூத்தவர். எனவே நாளடைவில் பானுமதி குணச்சித்திர வேடங்களில் நடிக்க ஆரம்பித்ததும் நம்பர் 01 இடத்துக்கு பத்மினி உயர்ந்தார்.

பத்மினி திருமணத்துக்கு முன்னதாக சிவாஜி கணேசனுடன் நடித்த படங்களில் பாக்கியவதி(1957), புதையல்(1957), உத்தம புத்திரன் (1958), தங்கப்பதுமை (1959), தெய்வப்பிறவி(1960), புனர்ஜென்மம் (1961) ஆகியவை முக்கியமானவை.

புதையல் படத்தில் சிவாஜி, பத்மினி காதல் காட்சிகள் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தன.

தங்கப்பதுமை

கண்ணகி கதையைத் தழுவி எடுக்கப்பட்ட படம் தங்கப்பதுமை. ஜூபிடர் சோமு தயாரிப்பில் அரு. ராமநாதன் கதை, வசனத்தில் உருவான இந்தப்படத்தை ஏ.எஸ்.ஏ.சாமி டைரக்ட் செய்தார்.



"தெய்வப்பிறவி"யில் உணர்ச்சிமயமான ஒரு கட்டம். (சிவாஜி, பத்மினி, எஸ்.எஸ். ராஜேந்திரன்.)

இதில் பத்மினியின் நடிப்பு அற்புதமாக அமைந்தது. ஆரம்பம் ஆவது பெண்ணுக்குள்ளே, ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே என்ற பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடலை சிதம்பரம் ஜெயராமன் குரலில் சிவாஜி பாடுவது படத்தின் சிறப்பு அம்சம். சிவாஜிகணேசன் கண் குருடாக்கப்பட்டதை அறிந்ததும் பத்மினி "ஆ" என்று அலறித் துடித்த காட்சி, உங்கள் கண்கள் எங்கே அத்தான்? என்று அழுகையுடன் கேட்டபோது காட்டிய முகபாவம் பத்மினியை நடிப்பின் சிகரத்துக்குக் கொண்டு போயின.

(தொடரும்)

நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால் உன்னுடைய பலவீனங்களை தெரிந்து கொள்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## விபூசணன் இராமருடன் சேரலாம் இலட்சுமணன் இராவணனுடன் சேரலாமோ!

அறம் பற்றி பேசுகின்ற மிக உன்னதமான இதிகாசம் இராமாயணம். இராமனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்ட இராமாயணத்தில் இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்தமே உச்சமான பகுதி. பொதுவில் இதிகாசங்கள் கதைகள் என்றால் இறுதியில் வருவதுதான் முக்கியமான பகுதியாக இருக்கும்.

கம்பராமாயணத்தில் இராம– இராவண யுத்தம் முக்கியமான பகுதியாக இருந்தால் அதற்குள் யுத்த களத் தகவல்கள் அதி முக்கியமானவை.

இதில் இராவணனின் சகோதரனாகிய விபூசணன் இராமர் பக்கம் செல்கிறான். தன் அண்ணன் இராவணனின் செயலில் வெறுப்பு ஏற்பட்டதால் அப்படி ஒரு முடிவை விபூசணன் எடுத்தான் என்று கூறுவர். எனினும் இராமர் பக்கம் விபூசணன் சென்றதால்தான் இலங்கையில் தொடர்ந்தும் இராவண பரம்பரை ஆளும் வாய்ப்பு கிடைத்தது.

தன் அண்ணன் இராவணனை விடுத்து இராமர் பக்கம் செல்வது நீதி ஆகாது என்று விபூசணன் கருதியிருந்தால், கிஷ்கிந்தையில் இருந்து இராமரோடு வந்த அநுமார்களே இலங்கையை ஆண்டிருப்பர். இதை நாம் சொல்லும் போது அட! கிஷ்கிந்தைக் குரங்குகள் ஆண்டிருந்தால் கூட இன்றைய நிலைமை எமக்கு வந்திருக்காதோ என்று எண்ணவும் தோன்றும்.

எதுவாயினும் இப்போது நாம் இங்கு கூற வருவதெல்லாம் நிலைமைக்கு ஏற்ற தீர்மானம் எடுப்பதும் தன் இனத்தைக் காப்பாற்றும் எண்ணத்தை சிந்தனையில் வைத்திருப்பதுமான முடிவை விபூசணன் கொண்டிருந்தான் என்பதுதான்.

அதனால்தான் அவன் இராமருடன் சேர்ந்து தன் இனத்து ஆட்சியை காப்பாற்றினான். இதனால்தான் விபூசணன் மீது குற்றம் காண்போர் குறைவு எனலாம்.

தன் அண்ணனின் எதிரியாக இருக்கக் கூடிய இராமனுடன் விபூசணன் சேர்ந்து கொண்டானே என்று இழிவு படுத்திக் கூறமுடியாத அளவில் விபூசணனின் சூழ்நிலையும் இராமருடன் சேர்ந்து இலங்காபுரியின் ஆட்சியை தக்க வைத்ததுமான செயல்கள் அமைந்தன. ஆக, இராமருடன் விபூசணன் சேர்ந்தது நீதியானது. அதற்குள் ஒரு நியாயம் இருக்கிறது என்று கூறிக்கொள்ள முடிகிறது.

மாறாக, இராமருடன் சேர்ந்து வந்த இலட்சுமணன் யுத்த களத்தில் தன் அண்ணனாகிய இராமரை விடுத்து இராவணனுடன் சேர்ந்திருந்தால் நிலைமை என்னவாகும் என்பதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

இலட்சுமணன் இராவணனின் பக்கம் சேர்ந்திருந்தால் அவனோடு சேர்ந்து சில பரிவாரங்களும் இராவணனின் பக்கம் தாவியிருக்கும்.

இதனால் இராமர் தோல்வி கண்டிருப்பார். இராமர் தோல்வி கண்டால் அறம் தோற்கும். சீதை சிறையில் வாடியிருப்பாள்– உயிர் துறந்திருப்பாள்– அயோத்தி மக்கள் தங்கள் தலைவனை இழந்து துன்பத்தில் துடியாய் துடிப்பர்.

இது ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் இராவணனின் கர்வம் தலைக்கேறும். இலட்சுமணனின் மீதும் அவனோடு கூட வந்த குரங்குகள் மீதும் இராவணனுக்கு சந்தேகம் ஏறும்.

இலட்சுமணனைக் கைது செய்; அவனது பரிவாரங்களை சிறையில் அடை என்று உத்தரவு பிறப்பிப்பான். முற்றில் இலட்சுமணனும் அவன் பரிவாரமும் சிறையில் அடைபடுவர்.

முடிவு இலட்சுமணன் இராவணனோடு சேர்ந்ததால் தன் இனத்திற்கு நாசம் செய்தான்; சேதம் செய்தான்; தன் அண்ணனுக்கு துரோகம் செய்தான் என்பதாக நிலைமை முடிந்துபோகும்.

அது சரி, இதெல்லாம் எதற்காக என்று நீங்கள் கேட்கும் போது, சுமந்திரன் கைது என்ற செய்தி காற்றோடு கலந்து நம் செவிகளில் உரோஞ்சிச் செல்கிறது. ஆம், விபூசணன் இராமர் பக்கம் போகலாம். ஆனால், இலட்சுமணன் தன் அண்ணன் இராமனை விட்டு ஒரு போதும் இராவணனின் பக்கம் போகக்கூடாது. இதுவே இராமாயணம் நமக்குப் போதிக்கும் மகா தத்துவமாகும்.

## மேலதிக ஆசிரியர்களை சமநிலைப்படுத்துதல்

2016 .07.08 ஆம் திகதிய 16/1319/742/030 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பாடசாலைகளில் ஆசிரியர்களைச் சமநிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் எந்தவொரு பாடசாலையிலும் மேலதிக ஆசிரியர்களை வைத்திருக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கல்விச் செயற்பாட்டின் வெற்றிக்கு பிரதான காரணியாக இருப்பது வகுப்பறையில் கற்பித்தற் செயற்பாட்டின் பூரணத்துவமேயாக இருப்பதனால் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஆசிரியப் பணிக்குழுவை வழங்க வேண்டியது அவசியமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வடக்கு மாகாணத் தேசிய பாடசாலைகளில் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களை உரிய பாடங்களுக்கு பற்றாக்குறை காணப்படும் தேசிய, மாகாண பாடசாலைகளுக்குநியமிக்கவேண்டுமென கல்வி அமைச்சு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆசிரியர்களது சமநிலைப் படுத்தலை இவ்வருட இறுதிக்குள் மேற்கொள்ளுமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்தல்களை வழங்கியுள்ளார் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ

## கார்த்திகேய வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று

யாழ். வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதான மண்டபத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஆசியுரையினை உடுக்கியவளை விநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ந. பிரசாந்த சர்மா வழங்குவார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் செ. சந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி ஆ.காந்தநேசன், வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி திருமதி ரதினி காந்தநேசன், கௌரவ விருந்தினராக வட்டு. தெற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சிவதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ–3)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
J.S.A.C
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
ஆணுக்கு நிகராய் இங்கு பெண்களும் உழைக்கையிலே.கொடுப்பனவுகளில் மட்டும் பாரபட்சங்கள் ஏன்?. சமகூலி பேணுவோம். சமத்துவத்தினை நிலைநாட்டுவோம்

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பூஜையின்போது மணியடிப்பது ஏன் தெரியுமா?

பூஜையின் போது மணியோசை முக்கிய பங்கு வகுக்கிறது. பூஜை முன்னால் மணி அடித்தால், அந்த மணி சப்தம் அசுரர், அரக்கர்கள் போன்ற கொடியவர்களை விரட்டியடித்து தேவர்களையும், தேவ கணத்தினரையும் அழைக்கவே பூஜையின் போது மணியடிக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

பூஜையின்போது மணியை உபயோகப்படுத்துவதற்கு முன்பாக 'ஆகமார்த்தம் து தேவாநாம் கமனார்த்தம் து ரக்ஷஸாம், கண்டாரவம் கரோம்யாதௌ தேவதாஹ்வான லாஞ்சநம்' என்ற மந்திரத்தைச் சொல்வார்கள். தீய சக்திகள் விலகி இறைசாந்நித்யம் இந்த இடத்தில் பெருகட்டும் என்பது இதன் பொருளாகும்.

இது மட்டுமல்லாது, தீபாராதனையின்போது மணி ஓசை எழுவதால் நாம் அநாவசிய பேச்சுகளை நிறுத்தி இறைவனின்பால் நமது சிந்தனையைச் செலுத்துகிறோம்.

மணியோசை கேட்டதும் நம்மையும் அறியாமல் நமது கரங்கள் இறைவனைத் தொழுகின்றன. சிந்தனையை ஒருமுகப்படுத்துவதற்காகவே மணியடிக்கப்படுகிறது.

நைவேத்யம் செய்யும்போது கண்டிப்பாக மணி ஓசையை எழுப்ப வேண்டும். ஏனெனில் மணி ஓசையைக் கேட்டதும் இறைவன் ஓடோடி வந்து நமது காணிக்கையை ஏற்றுக்கொள்கிறான்.

மேலும், சிரத்தையுடன் கூடிய பக்தியைத்தான் இறைவன் நம்மிடம் இருந்து எதிர்பார்க்கிறான். நைவேத்யம், தீபாராதனை நேரங்கள் தவிர வெறுமனே மணியை அடிப்பது தவறு என்று சாஸ்திரங்கள் விளக்கியுள்ளன.

## வெற்றியீட்டியோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியப் போட்டிகளை கருவி நிறுவனம் நடத்தியிருந்தது.

**கட்டுரை**

பாடசாலை, முதலாமிடம் செல்வி தரண்யா சுதாகர் கோண்டாவில், இரண்டாமிடம்-செல்வன் குமாரசாமி கவிதரன் பண்டதரிப்பு, மூன்றாமிடம்-செல்வி விதுஷா குமாரசாமி பண்டத்தரிப்பு.

**பொது**

முதலாமிடம்- செல்வி இரத்தினம் மோகனகலா நெல்லியடி,இரண்டாமிடம்- சு.சிவராசா கொக்குவில், மூன்றாமிடம்-செல்வி அ.மேரி றெஜோதா, செம்பியன்பற்று.

**கவிதைப்போட்டி**

பாடசாலை- முதலாமிடம் செல்வி வானதி செங்கதிர்ச் செல்வன், யாழ்ப்பாணம், இரண்டாம் இடம் செல்வி பு.யூலியாள், மானிப்பாய், மூன்றாமிடம்-செல்வி குபேரமூர்த்தி மாதங்கி இணுவில்.

**பொது**

முதலாமிடம்- நிறைந்தினி கெங்காதரன் சுன்னாகம், இரண்டாமிடம்- சு. சிவராசா கொக்குவில், மூன்றாமிடம்- செ.காந்திமதி, கோண்டாவில்.

**சிறுகதை- பொது**

முதலாமிடம்- அ.கரன் சங்கானை, இரண்டாமிடம் சு. சிவராசா கொக்குவில், மூன்றாமிடம் மதனரூபி பாரதிதாசன் அல்வாய்.

**சித்திரப்போட்டி**
**பாடசாலை**

முதலாமிடம் செல்வன் மூர்த்தி விதுர்ஷன் பண்டத்தரிப்பு, இரண்டாமிடம் தெட்சணாமூர்த்தி துஸியன் முள்ளியவளை, மூன்றாமிடம் பிரபானுஜா சிவகுமாரன், சுன்னாகம்.

**பொது**

முதலாமிடம் கு.ராதா இணுவில், இரண்டாமிடம்- கு.கஜப்பிரியன் இணுவில், மூன்றாமிடம் இ.ராகினி, இணுவில்

**சித்திரம்– விசேட தேவையுடையோர்**

பாடசாலை முதலாமிடம் விமலதாஸ் ஜனுயன் கோப்பாய், இரண்டாமிடம் செல்வி கவினா பிரேமராஸ் கோப்பாய், மூன்றாமிடம் செல்வி நவரத்தினம் யோசுவா கோப்பாய். (இ



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பக்தி

பக்தி (தெய்வீக அன்பு) என்ற சொல்லுக்கு நான்கு எழுத்துக்கள் உள்ளன. ப (ஙிலீணீ) க,த மற்றும் ஈ.ப (ஙிலீணீ) என்றால் நிறைவும் ஊட்டமும் (போஷாக்கும்)

க என்றால் அறிந்து கொள்வதற்குச் சாதனமாயிருப்பது

த என்றால் விடிவு, காப்பாற்றுதல் விடுவித்தல் (தாரணா)

ஈ என்றால் ஆற்றல், சக்தி

பக்தி சரியான அறிவு, அதுவே குணமடைய சாதனம் ஆகிறது.

பக்தி உள்ளபோது சந்தேகங்கள் வருவது இல்லை. பக்தி உன்னைக் காக்கிறது. பக்தி உனக்கு உயர்ந்த சக்தியைத் தருகிறது.

பக்தி இவ்வெல்லாக் குணங்களின் விந்துக்களைத் தன்னிடம் கொண்டுள்ளது. பக்தியை அறியாததால் ஒருவன் எல்லாவிதமான மனவெழுச்சிகளாலும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்களுக்கு ஆளாகிறான்.

ஆற்றிற்கு இருபக்கமும் உள்ள கரைகள் ஒரு குறிப்பிட்ட திசையில் நீரைப் பாய விடுகின்றன. வெள்ளம் வரும் போது நீர் எல்லாப் பக்கங்களிலும் சிதறுகிறது. அதைப் போல உனது உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் உள்ள போது உன் மனம் அலை பாய்கிறது, குழம்புகிறது. உன்னுடைய ஆழ்ந்த உணர்ச்சிகள் எல்லாம் ஒரே திக்கில் செல்லும் போது மிகவும் சக்தியுடையதாகிறது. சக்தியே பக்தி ஆகும்.

பக்தியும் சரணாகதியும் ஞானிகளின் அடையாளம்.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### இறைவன் மட்டுமே உதவுவான்

❖ இறைவனைத் தவிர வானங்களிலும் பூமியிலும் உள்ள எவரும் மறைவான உண்மைகளை அறியமாட்டார்.

❖ எந்த மனிதனும் அவன் நாளை என்ன சம்பாதிக்கப் போகிறான் என்பதை அறிவதில்லை. நாம் எந்த பூமியில் மரணமடைவோம் என்பதும் எந்த மனிதருக்கும் தெரியாது. திண்ணமாக, இறைவன்தான் யாவற்றையும் நன்கு அறிபவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான்.

❖ இறைவன் உங்களுக்கு உதவி செய்வானாகில் உலகின் எந்தச் சக்தியும் உங்களை வென்றிட முடியாது. மேலும், உங்களுக்கு அவன் உதவி செய்யாவிட்டாலோ, அதன் பிறகு உங்களுக்கு உதவி செய்யக்கூடியவர் யார்? எனவே, வாய்மையான இறை நம்பிக்கையாளர்கள் அனைவரும் இறைவனை முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டும்.

❖ இறைவன் நன்கறிபவனாகவும் நுண்ணறிவு மிக்கவனாகவும் இருக்கிறான். படைக்கும் ஆற்றலும், கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்குரியவையே.

# இலங்கை கிரிக்கெட் நிறுவன விருதுகளை தட்டிச் சென்றனர்

## சங்கா–மத்தியூஸ்– மலிங்க



2015 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதை இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர் அஞ்சலோ மத்யூஸ் சுவீகரித்துள்ளார்.

அத்துடன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆகியவற்றில் திறமையை வெளிப்படுத்திய சிறந்த வீரருக்கான விருதையும் தன்வசப்படுத்தியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வருடாந்த விருது வழங்கும் விழாவில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் சரவதேச ரீதியில் திறமையை வெளிப்படுத்திய கிரிக்கெட் வீர,வீராங்கனைகள் மற்றும நடுவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பத்தரமுல்லையில் நடைபெற்றுள்ளது.

இதேவேளை ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருது குமார் சங்கக்காரவுக்கு கிடைத்துள்ளது.

மேலும் ஒருநாள் கிரிக்கெட் மற்றும் 20 இற்கு 20 கிரிக்கெட் போட்டியில் சிறந்த பநதுவீசாளருக்கான விருதை வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க பெற்றுக் கொண்டார்.

# சிம்பாவேயுடன் முற்றிலும் வேறுபட்டது தென்னாபிரிக்க அணி- கிரகாம் போர்ட்



தெனனாபிரிக்கா செல்லும் இலங்கை அணிக்கு மிகப் பெரிய சவால் காத்திருப்பதாக இலங்கை அணியின் பயிற்சியாளர் கிரகாம் போர்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அணி சமீபத்தில் சிம்பாவேயில் நடந்த முத்தரப்பு தொடரை வெற்றிகரமாக கைப்பற்றியது.தாயகம் திரும்பிய இவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன் பின்னர் இலங்கை அணியின் பயிற்சியாளர் கிரகாம் போர்ட் கூறுகையில், இலங்கை அணியின் வெற்றி சிறப்பானது என்றும் அனுபவம் வாய்ந்த வீரர்கள் மத்யூஸ், சந்திமால் இல்லாமல் இலங்கை அணி வீரர்கள் தங்கள் ஆட்டத்தை திறம்பட வெளிப்படுத்தினர் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது வெற்றிக்களிப்பில் இருக்கும் இலங்கை அணிக்கு இந்தமாதம் மிகப் பெரிய சவால் காத்திருப்பதாக கூறியுள்ளார்.

இலங்கை அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஒரு நாள் போட்டிகள், 3 டெஸ்ட் போட்டிகள், 3 இருபது-20 போட்டிகள் விளையாட உள்ளது.

அவுஸ்திரேலியா அணியுடன் வெற்றி பெற்றது சொந்த மண்ணில் என்றும் தென்னாபிரிக்கா தொடர் முற்றிலும் வேறுபட்டது என்றும் அதற்கு ஆயத்தமாக இலங்கை வீரர்கள் தீவிர பயிற்சி மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இருப்பினும் அவுஸ்திரேலியா மற்றும் சம்பாவே தொடரை இலங்கை அணி கைப்பற்றியுள்ளதால், அது அவர்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கை அளிக்கும் எனவும் கூறியுள்ளார்.

மேலும் தென்னாபிரிக்கா தொடருக்கு மத்யூஸ், சந்திமால் உடல் தகுதி பெற்று விட்டதாகவும் விரைவில் அணியுடன் இணைவார்கள் எனவும் கூறியுள்ளார்.

# முக்கிய இரண்டு வீரர்களுக்கு காயம் இங்கிலாந்து அணிக்கு தொடரும் சோகம்






இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இந்த நிலையில் இங்கிலாந்துக்கு மேலும் ஒரு பின்னடைவாக இரு வீரர்கள் காயத்தில் சிக்கியுள்ளனர். இந்த தொடரில் அறிமுக வீரராக அடியெடுத்து வைத்த 19 வயதான ஹசீப் ஹமீத், இந்திய சுழற்பந்து வீச்சை சமாளித்து நிலைத்து நின்று ஆடுவதில் அனைவரது கவனத்தையும் வெகுவாக கவர்ந்தார்.

3ஆவது டெஸ்டின் போது அவருக்கு இடது கை சுண்டு விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இதனால் தொடரை விட்டு விலகியுள்ள அவர் உடனடியாக தாயகம் திரும்புகிறார். அங்கு அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட உள்ளது. இதேபோல் முதுகு வலியால் அவதிப்படும் சுழற்பந்து வீச்சாளர் ஜாபர் அன்சாரியாலும் எஞ்சிய போட்டிகளில் ஆட முடியாது.

இவர்களுக்கு பதிலாக புதுமுக துடுப்பாட்ட வீரர் கீடான் ஜென்னிங்ஸ், சுழற்பந்து வீச்சாளர் லியாம் டாவ்சன் ஆகியோர் இங்கிலாந்து அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதில் 24 வயதான இடக்கை ஆட்டக்காரர் ஜென்னிங்ஸ், தென்னாபிரிக்காவில் பிறந்தவர். 72 முதல்தர கிரிக்கெட்டில் விளையாடி 12 சதம் உட்பட 4,272 ஓட்டங்கள எடுதுள்ளார்.இடக்கை சுழற்பந்து வீச்சாளர் டாவ்சன் இங்கிலாந்து அணிக்காக ஏற்கனவே ஒரு நாள் போட்டி மற்றும் 20 ஓவர் போட்டியில் ஆடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹேரத் தொடர்ந்து விளையாட வேண்டும் அதிரடி வீரர் சனத் ஜெயசூர்ய விருப்பம்



இலங்கை அணியில் முத்தையா முரளிதரனுக்கு பிறகு சுழற்பந்து வீச்சாளர்கள் யாரும் 20 விக்கெட்டுகள் வீழ்த்தவில்லையே என ஜெயசூர்ய கூறியுள்ளார்.

இலங்கை அணியின் அதிரடி ஆட்டக்காரரும் முன்னாள வீரருமான ஜெயசூர்ய, இடது கை சுழற்பந்து வீச்சாளரான ரங்கன ஹேரத் இன்னும் இரண்டுஆண்டுகள்விளையாட வேண்டும் என கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், இலங்கை அணியில் ஜெயவர்த்தன, சங்கக்கார, திலகரத்ன டில்சான் போன்றோர் அணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு, அவர்கள் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இன்னும் போதுமான வீரர்கள் கிடைக்கவில்லை என்றும் அதற்கு காரணம் அவர்கள் 15 முதல் 16 வருடங்கள் இலங்கை அணியில் இருந்தனர் என கூறியுள்ளார்.

மேலும் தற்போது இலங்கை அணியில் மூத்த வீரராக ரங்கன ஹேரத் (38) உள்ளார். இவர் இன்னும் இரண்டு ஆண்டுகள் இலங்கை அணியில் நீடிக்க வேண்டும் என்றும் இடது கை சுழற்பந்து வீச்சாளர்கள் கிடைப்பது மிகவும் அரிது. ரங்கன ஹேரத்தின் செயறபாடு சிறப்பாக உள்ளது எனவும் கூறியுள்ளார்.

முரளிதரன் ஓய்வு பெற்ற பின்பு எந்த ஒரு சுழற்பந்து வீச்சாளர்களும் 20 விக்கெட்டுகள் வீழ்த்தவில்லை எனவும் கூறியுள்ளார்.

# பிரகாசிக்கும் பார்த்தீவ் பட்டேல்; அணித்தலைவர் கோலி புகழாரம்

## சகாவின் நிலை கவலைக்கிடம்



இங்கிலாந்துக்கு எதிராக மொகாலியில் நடந்த 3ஆவது டெஸ்ட் போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றது.

103 ஓட்ட இலக்குடன் விளையாடிய இந்தியா 2 விக்கெட் இழப்புக்கு 104 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மொகாலி டெஸ்டில் பெற்ற வெற்றி குறித்து இந்திய அணித்தலைவர் விராட் கோலி கூறும்போது,

கடந்த ஒரு ஆண்டாகவே சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற ஆடுகளம் குறித்து கேள்வி கேட்கப்படுகிறது. ஆடுகளம் குறித்து நாங்கள் அதிகமாக எதுவும் சொல்லத் தேவையில்லை. நாங்கள் சிறந்த கிரிக்கெட்டை வெளிப்படுத்தி வருகிறோம். இதனால் வெற்றிகளை பெற்று வருகிறோம்.

பார்த்தீவ் பட்டேல் இந்த டெஸ்டில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இரண்டு இன்னிங்சிலும் அவர் அபாரமாக ஆடினார். முதல்தர போட்டியில் நன்றாக விளையாடிய அனுபவம் அவருக்கு கை கொடுத்தது.

வேகப்பந்து வீச்சை அவர் நம்பிக்கையுடன்எதிர் கொண்டு விளையாடினார். துடுப்பாட்ட வீரர் மற்றும் விக்கெட் கீப்பர் ஆகிய இரண்டிலும் அபாரமாக செயறபட்டார்.

எதிர்கால இந்திய அணியில் இடம் பெறுவதற்கான நேர்மையை பெற்றுள்ளார். இதனால் தொடக்க வீரர்களை தேர்வு செய்வதில் போட்டி நிலவும். பார்த்தீவ் பட்டேல் தொடக்க வீரராக நீடிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

டெஸ்ட் அணியின் முதன்மை விக்கெட் கீப்பரான விருத்திமான் சகா காயம் அடைந்ததால் பார்த்தீவ் பட்டேல் இடம் பெற்றார். குஜராத்தை சேர்ந்த 31 வயதான அவர் 8 ஆண்டு இடைவெளிக்கு பிறகு டெஸ்டில் ஆடினார். மொகாலி டெஸ்டில் அவர் மொத்தம் 109 ஓட்டங்கள் எடுத்தார்.

# உலக செஸ்போட்டி கார்ல்சன் சம்பியன்

உலக செஸ் சம்பியன் போட்டி அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் கடந்த 11ஆம் திகதி தொடங்கியது. 12 சுற்றுகளை கொண்ட இந்தப்போட்டியில் நடப்பு சம்பியனான மாக்னஸ் கார்ல்சன் (நோர்வே)- செர்ஜி கர்ஜாகின் (ரஷ்யா) மோதினார்கள்.

உலக செஸ் சம்பியன் போட்டியின் முதல் 7 ஆட்டங்களும் சமநிலையில் முடிந்தன. 8ஆவது சுற்றில் செர்ஜி கர்ஜாகின் வெற்றி பெற்றார். 9ஆவது சுற்று சமநிலை ஆனது. 10ஆவது சுற்றில் கார்ல்சன் வெற்றி பெற்றார். 11 ஆவது சுற்று 'சமநிலை' ஆனால் 5-5 என்ற சமநிலை ஏற்பட்டது.

இதேபோல 12ஆவது மற்றும் கடைசி சுற்று ஆட்டமும் சமநிலை ஆனது. இதனால் 6-6 என்ற சமநிலை ஏற்பட்டது. 10 சுற்றுகள் சமநிலை ஆனது. இருவரும் தலா ஒரு சுற்றில் வென்று இருந்தனர்.

ஆட்டம் சமநிலையில் முடிந்ததால் வெற்றி- தோல்வியை நிர்ணயிக்க டைபிரேக்கர் கடைப் பிடிக்கப்பட்டது.

டைபிரேக்கர் போட்டி நேற்று முந்தினம் நடந்தது. ரேபிட் முறையில் 4 ஆட்டங்கள் நடத்தப்பட்டது. இதன் முதல் 2 ஆட்டமும் 'சம நிலை' ஆனது. 3ஆவது மற்றும் 4-வது ஆட்டத்தில் கார்ல்சன் வெற்றி பெற்றார்.

இதன்மூலம் கார்ல்சன் 3-1 என்ற கணக்கில் வென்று உலக செஸ் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். அவர் 3ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். சம்பியன் பட்டத்தை கைப்பற்றி இருந்தார்.

## இனவாதத்தை தூண்டி தடுக்க முற்பட வேண்டாம்

# அதிகாரங்களைப் பகிர்ந்தால் 9 மாகாணங்களும் நன்மை பெறும்

## கிழக்கு முதலமைச்சர் நசீர் இடித்துரைப்பு

(மட்டக்களப்பு)

மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் சிறுபான்மை மக்களுக் கான வடக்கும் கிழக்கும் மாத்திரம் நன்மை பெறப்போவதில்லை. பெரும் பான்மையினர் வசிக்கும் ஏனைய ஏழு மாகாணங்களும் இதன் மூலம் பாரிய நன்மையை பெறப்போகின்றன என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அரசியல் கொள்கைகள் வகுப்பு தொடர்பான செயலாளர் டமியனோ அஞ்சலோ ஸ்குஅய்டாமெட்டி ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது திடீரென தலைதூக்கியுள்ள இனவாத செயற்பாடுகளின் பின்னால் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் ஒன்று காணப்படுகின்றது.

தற்போது உருவாக்கப்பட்டிருக்கும் புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்தினூடாக மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கான சாதகமான காரணிகள் உருவாகியுள்ளன.

இந்நிலையில் மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கான உபகுழு அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதற்கு எதிராக பெரும்பான்மை மக்களிடையே தவறான புரிதலை ஏற்படுத்தவும் புதிய அரசியலமைப்புத் திருத்தத்தை உருவாக்கும் போது சில வேளை பொதுசன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம். அவ்வாறு ஏற்பட்டால் பெரும்பான்மையினரின் வாக்கே அதனை தீர்மானிக்க கூடியதாக இருக்கும்.

சிறுபான்மையினர் தொடர்பான தவறான புரிதலை பெரும்பான்மையினர் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் இனவாதிகளுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என்ற நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இந்த இனவாத செயற்பாடுகள் திடீரென வெளிக்கிளம்பியுள்ளன. ஆனால் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் சிறுபான்மை மக்களுக்கான வடக்கும் கிழக்கும் மாத்திரம் நன்மை பெறப்போவதில்லை. பெரும்பான் மையினர் வசிக்கும் ஏனைய ஏழு மாகாணங்களும் இதன் மூலம் பாரிய நன்மையை பெறப்போகின்றன.

ஆகவே மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படும் பட்சத்தில் பெரும்பான்மையினர் இன்று தமது எல்லாத் தேவைகளுக்கும் கொழும்புக்கு அலைய வேண்டிய தேவையில்லை. தமது பெரும்பாலான தேவைகளை தமது சொந்த மாகாணங்களிலேயே நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய சாதகமான சூழல் உருவாகும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையினர் இந்த நிகழ்ச்சி நிரல்களுக்குள் சிக்காமல் தெளிவாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்போது சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாட்டில் சுவிட்சர்லாந்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை பாரிய கைத்தொழில் முதலீடுகளை கிழக்கு மாகாணத்திற்கு கொண்டு வருவது தொடர்பிலும் சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அரசியல் கொள்கை வகுப்பு தொடர்பான செயலாளர் டமியானோ அஞ்சலோ குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-5)

# நோதேன் பவர் நிறுவன செய...

அமைக்கப்பட்ட நோதேன் பவர் மின் உற்பத்தி நிலையத்தினால் வெளியேற்றப்படுகின்ற கழிவு எண்ணெய் காரணமாக 2012 ஆம் ஆண்டு சுன்னாகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள குடிநீர் கிணறுகள் பாதிக்கப்பட்டன.

இதன் காரணமாக அப்பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் குடிநீருக்கு பெரும் சிரமத்தை தற்போதும் எதிர்கொண்டுவருவதோடு, இந்த கழிவு கலந்த குடிநீரைப் பருகுவதனால் உயிராபத்துக்களும், பக்கவிளைவுகளும் ஏற்படக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டது.

இந்த நிலையில் நோதேன் பவர நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு எதிராக சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மத்திய நிலையம் சார்பாக பேராசிரியர் ரவீந்திர காரியவசம் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

மத்திய சூழல் அதிகார சபை, இலங்கை மின்சார சபை, வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், சுன்னாகம் நோதேன் பவர் நிறுவனம், இலங்கை முதலீட்டுச் சபை, வலிகாமம் பிரதேச சபைத் தலைவர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் தலைமையிலான மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான புனநேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன ஆகியோர் தலைமையிலான குழு முன்பாக நேற்று முன்தினம் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் நோதேன் பவர் நிறுவன நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த மனு மீதான அடுத்த விசாரணையை எதிர்வரும் ஜனவரி மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (செ-4)

## யாழில் வர...

16.8 பாகை செல்சியஸ் பதிவு செய்யப்பட்டுள்ளது. நேற்றையதினம் அதி குறைந்த வெப்பநிலையாக 20 பாகை செல்சியஸ் வரை பதிவாகியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இக் காலப்பகுதியில் இவ்வாறான அதி குறைந்த வெப்பநிலை பதிவு செய்யப்படவில்லை.

மேற்படி காலநிலையால் யாழ் மாவட்டத்தில் கடும் குளிர் நிலவியது டன் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்சமயம் காற்று தரையில் 26 கிலோ மீற்றர் வேகத்தில் வீசி வருகின்றது. எனவே படிப்படியாக இக் காலநிலை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9,4)

## 'நடா' புயல் காற்றினால்...

அதே போன்று மருதங்கேணி மற்றும் பருத்தித்துறை பகுதிகளில் இருந்து கடல் தொழிலுக்கு சென்ற 4 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மாதகல் பகுதியில் காணாமல்போன 2 பேர் மீண்டும் கரை திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, வேலணை ஆகிய பகுதிகளில் 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் ஒரு வீடுமுழுமையாக சேதமடைந்துள்ளது. அவற்றுக்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். அவசர உதவிகள் அனைத்து பிரதேச செயலர் ஊடாகவும் மேற்கொள்வதற்கு தயார்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் அவசரகால நிலைமை உண்டாகுமானால் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு படையினர் தயாராக இருப்பதாக எனக்கு அறிவித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9,4)

## ஐந்து இந்திய...

குச் சென்ற இவ் ஐவரும் கடும் கடல் கொந்தளிப்பு காரணமாக இந்தியாவிற்கு கரை திரும்ப முடியாத நிலையில் காணப்பட்டனர்.

இதனையடுத்து படகு போன திசையில் வந்த ஐவரும் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பருத்தித்துறை மயிலிட்டி கடல் தொழிலாளர்கள் சங்கத்திற்கு நேராக கரையொதுங்கினர்.

கரையில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் படகினை நிறுத்திவிட்டு நின்ற மீனவர்களை கடல்தொழிலாளர்கள் சென்று தமது சங்க மண்டபத்திற்கு அழைத்துவந்தனர்.

நாகை மாவட்டத்தைச் சேர்ந்த முத்தப்பன் நடராஜன் (வயது 43), நடராஜன் செல்வம் (வயது 39), நடராஜன் சங்கர் (வயது 36), பழனி பாலு (வயது 36), ராஜகுண்டம் கோவிந்தசாமி (வயது 30) ஆகிய ஐவருமே கரையொதுங்கியவர்கள் ஆவார்.

இதனை அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் மற்றும் நீரியல் வளத்திணைக் களத்தினர் இந்திய தூதரக அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்.

கடல் கொந்தளிப்பு நீங்கிய பின்னர் கடற்படையினர் மூலம் இவர்கள் இந்தியாவிற்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (செ-60)

## வடக்கின் பிரச்சினையை...

தேசிய கலந்துரையாடல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டிருந்தார்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதி விளக்கமளித்தார்.

அங்கு ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாம் தேசத்துரோகிகளாக மாறக் கூடாது. தேசப்பற்றுள்ளவர்களாக மாறி நியாயமான தீர்வுகளை வழங்குவதற்கு கலந்துரையாட வேண்டும்.

குறிப்பாக நான் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தனுக்கு நன்றி கூறுகிறேன். இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வடக்கிலிருந்து எமக்கு கிடைத்த தலைவர்களில் சிறந்த தலைவர் ஒருவரே எம்முடன் உள்ளார் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

இந்த ஒத்துழைப்பு வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்களிடம் இருந்து எப்போதும் கிடைப்பதில்லை என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பிரச்சினைகளைத் தீர்க்கவிடாமல் அதனைக் குழப்புவது நாளை பிறக்கவுள்ள பிள்ளைகளுக்கு நாம் செய்யும் தேசத்துரோகமாகும். எம்மால் ஊடக சந்திப்புகளை நடத்த முடியும்.

கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்த முடியும். எனினும், வடக்கு மக்களோடு கலந்துரையாடி பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு கொழும்பிலிருக்கும் தலைவர்கள் செயற்படுகின்றார்களா என்ற கேள்வியை நான் உங்களிடம் முன்வைக்கின்றேன். அந்த மக்கள் 27 வருடங்களாக வடக்கில் முகாம்களில் வாழ்கின்றனர். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நான் முயற்சித்தால், மாற்றுக் கருத்துடையவர்கள் ஊடக சந்திப்புக்களை நடத்தி, வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து சத்தமிடுகின்றனர்.

இராணுவத்திற்கு சொந்தமான காணிகளைப் பகிர்ந்தளிக்கவுள்ளதாக அவர்கள் கொழும்பில் ஆர்ப்பரிக்கின்றனர்.

இவையெல்லாம் நாட்டின் நலனையே பாதிக்கின்றது என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி தனது கருத்தை வெளியிட்டிருந்தார். (செ-11)

## கடும் காற்றுடன் மழை...





வடக்கில் இன்றைய தினம் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இதனால் மீனவர்கள் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை நிலைவரம் தொடர்பாக வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் கருத்து தெரிவிக்கையில்,

தென்மேற்கு வங்க கடலில் ஏற்பட்ட "நடா" புயல் காற்றானது தற்போது வலுவிழந்து தாழமுக்கமாக காங்கேசன்துறையில் இருந்து 120 கிலோ மீற்றர் வடக்கிழக்கில் மையம் கொண்டுள்ளது.

இது இன்று அதிகாலையளவில் வட தமிழ்நாட்டை நோக்கி நகர்ந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாக இன்றைய தினம் வடக்கில் பலத்த காற்றும் கடும் மழையும் பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் புத்தளத்திலிருந்து மன்னார், காங்கேசன்துறை ஊடான திருகோணமலை ஆகிய கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 30 கிலோ மீற்றர் தொடக்கம் 40 கிலோ மீற்றர் வேகம் வரையில் காணப்படும் எனவும் தற்போது வேகம் 60 தொடக்கம் 70 கிலோ மீற்றர் வரையில் அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அவ்வேளையில் கடற்பகுதிகள் சீற்றம் கொண்டதாக காணப்படும் ஆழ்கடல் பகுதியில் காற்றின் வேகம் 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரையில் அதிகரித்து இருக்கும் எனவே கடற்றொழிலாளர்கள் அவதானமாக இருக்கும்படி எச்சரிக்கப்படுகின்றார்கள்.

நேற்றையதினம் மாலை நேரத்தில் இருந்து மழை வீழ்ச்சி அதிகரித்துள்ளது காற்றின் வேகம் குறைவடைந்துள்ள நிலையில் மழை வீழ்ச்சி அதிகரித்து காணப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9,4)

## ஐ.ஓ.சி எரிபொருள்...

முதல் இந்தியன் ஒயில் நிறுவனத்தின் எக்ஸ்ட்ரா பிரிமியம் யூரோ 3 (XTRA PREMIUM Euro 3), எக்ஸ்ட்ரா மைல் (XTRA MILE) டீசல்களின் விலையை லீற்றர் ஒன்றிற்கு ரூபாய 2 இனால் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்றிலிருந்து இந்த விலை அமுலாகவுள்ளதாக ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐ.ஓ.சி. நிறுவனம் கடந்த ஜூலை மாதமளவில் சுப்பர் பெற்றோல் மற்றும் டீசல்களின் விலையை குறைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மசகு எண்ணெய் ஏற்றுமதிக்காக நாளாந்தம் வழங்கப்படும் பீப்பாக்களின் எண்ணிக்கையை 3 இலட்சமாக குறைக்க ஐக்கிய அரபு இராச்சியம், குவைத் மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் தீர்மானித்துள்ளதாக ஒபெக் அமைப்பிலிருந்து தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (செ-11)


யாழ்.நகரின்... தரம் குன்றாத கல்விச் சேவையில் 29 வது ஆண்டில் காலடி பதிக்கும்

புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 2017

தரம் 1 முதல் O/L வரை

தமிழ் மொழி மூலம்

English Medium

(C-6536)



புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

03.12.2016

சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணி


## தென்னாபிரிக்க...

இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ தானிகர் ரொபினா மார்க்ஸிற்கும் எதிர்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

அண்மைக்கால அரசியல் ரீதியான மேம்பாடு, புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நீடித்த அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் குறித்து ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது இரா.சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## அரசியல் கைதி...

ரிழந்தவராவார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினருக்கு தஞ்சம் வழங்கிய குற்றத்தின் பேரில் மேற்குறித்த நபரும் அவருடைய மனைவியான திருமதி சரோஜாதேவி (வயது 63) அவருடைய மகனான பந்துள கஜவீர (வயது 44), மற்றும் அவருடைய மைத்துனனான அஜித் நிசாந்த எதிரிசிங்க (வயது 45) ஆகியோர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்குறித்த நபரும் அவரது மனைவியும் ஒருவித நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதன் காரணமாக மேலதிக மருத்துவ சிகிச்சைகளை பெறுவதற்குமுயன்று பல தடவை பிணை விண்ணப்பம் கோரியிருந்த போதும் அது நிராகரிக்கப்பட்டு தொடச்சியான விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த நபருக்கு முன்பு இரண்டு தடவைகள் மாரடைப்பு ஏற்பட்டிருந்த போதும் போதிய மருத்துவ வசதிகள் கிடைக்கப் பெறாத நிலையில் கடந்த 25 ஆம் திகதி மீளவும் மாரடைப்பு ஏற்பட்டு கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டி ருந்தார். இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் காலை 4 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இதே போன்று இதுவரை சிறைச் சாலையில் உள்ள 9 அரசியல் கைதிகள் போதிய மருத்துவ சிகிசசை கிடைக்காத நிலையில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## மோ.சைக்கிளில்...

யாழ்.குடாநாட்டில் வீசி வரும் வேகமான காற்று காரணமாக மரம் முறிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று காலை சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது. யாழ். குடாநாட்டில் நேற்று அதிகாலை தொடக்கம் புயல் காற்று பரவலாக வீசி வருவதுடன், கடும் மழையுடனான காலநிலையும் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இந்த சீரற்ற காலநிலை காரணமாக பாரிய மரங்கள் திடீரென்று சரிந்து விழும் நிலையும் தொடர்கின்றது.

கடும் காற்று வீசிய வேளையில், யாழ். சாவகச்சேரி சப்பச்சிமாவடி வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞன் மீது பட்ட மரம் முறிந்து வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

நேற்றுக்காலை 9 மணியளவில்குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. பூநகரியில் உள்ள கால்நடை வைத்தியசாலையில் பணியாற்றும் குறித்த இளைஞன் வேலைக்கு சென்றுகொண்டிருக்கும் போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில் சப்பச்சிமாவடி சங்கத்தானையை சேர்ந்த சச்சிதானந்தன் கயந்தன் வயது-27 என்றஇளைஞனே உயிரிழந்துள்ளார். இளைஞனின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக் கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிபொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர். (செ-4,60,89)

## மதுசாரப்...

ஆரம்பமானது.

இதன்போது வாய் மூல வினாவுக்கான நேரத்தின் போது ஜே.வி.பி எம்.பி. பிமல் ரத்நாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ -11)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

**பணிப்பெண் தேவை**

சுன்னாகத்தில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப் பெண் தேவை. தொடர்புகளுக்கு: 077 704 1767, 075 203 5424

**சிறுநீரகம் தேவை**

யாழ் நகரில் வசிக்கும் ஒருவருக்கு A அல்லது O இரத்த வகையிலுள்ள சிறுநீரகம் தேவை.

0775026827

0775723236

(6704)

**புதிய வகுப்புக்கள்**

தரம் 01 முதல் O/L வரை டிசம்பர் 05'இல் ஆரம்பம். அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

The Express Institute

(C-6524)

**பிரத்தியேக வகுப்பு**

தரம் 06 தொடக்கம் O/L வரை கணிதமும் 10 ஆம் 11 ஆம் வகுப்பிற்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் பல வருடங்கள் அனுபவமிக்க ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து தனியாகவோ / குழுவாகவோ கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 645 2622

(6776)

**பதவி வெற்றிடம்**

சிங்கள மொழியில் சரளமாகப் பேசவும் மொழிபெயர்க்கவும் தெரிந்த பெண் உத்தியோகத்தர்கள் தேவை

தொடர்புகளுக்கு :- 0702202208

**நிரு ரீயூசன் சென்ரர்**

கோண்டாவில்

கல்வியாண்டு 2017

தரம் 3 முதல் O/L ஆரம்பம் : 04.12.2016 ஞாயிறு 7 மணி

தரம் 6 ஆங்கில மொழி வகுப்புக்கள்.ஆரம்பம்

ஆசிரியர் திரு.K.கலாவண்ணன்

(C-6539)

"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமதே ஸ்ரீ பகவதே நமஹ"

தரம் 6 முதல் O/L ற்கு | யாழ் நகரின் NO : 1

**எடிசன் அக்கடமி**

INTENT + EFFORT + GRACE = SUCCESS

யாழ்ப்பாணம் | கலட்டி | நல்லூர் | கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு 2017

**தரம் 6**

English Medium / தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்

எமது சலுகைகள்

புலமைப் பரிசில் பரீட்சையில்

- மாவட்டத்தில் முதல் 10இடம் பிடித்தோருக்கு தரம் 6 முதல் O/L வரை இலவசக் கல்வி
- 170 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கு December 2017 வரை இலவசக் கல்வி
- 160 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கு August 2017 வரை இலவசக் கல்வி
- 150 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கு April 2017 வரை இலவசக் கல்வி
- 150 இலும் குறைந்த புள்ளி பெற்றவர்களுக்கு April 2017 வரை 1/2 கட்டணம்

தரம் 6

ஆரம்பம் : 04/12/2016 ஞாயிறு

யாழ் எடிசன் → மு.ப 09.00 மணி

நல்லூர் எடிசன் → மு.ப 10.30 மணி

கொக்குவில் எடிசன் → பி.ப 03.00 மணி

கணிதம் திரு. B.P.பாஸ்கரன்

தரம் 7 முதல் O/L வரை

ஆரம்பம் : 05/12/2016 திங்கள்

யாழ் எடிசன் → மு.ப 08.00 மணி

கலட்டி எடிசன் → மு.ப 09.30 மணி

நல்லூர் எடிசன் → மு.ப 11.30 மணி

கொக்குவில் எடிசன் → பி.ப 12.30 மணி

(C-6528)

தொடர்பு : 077 77 37 926

பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் ! அவர்களையும் சாதனையாளர் ஆக்குங்கள் !!

**பரீட்சைக்கான வகுப்புக்கள்**

கணக்காளர் சேவை

சனி 08.30 am -01.30 pm

ஞாயிறு 8.30 am -1.30 pm

[illegible]

ஞாயிறு 8.30 am -12.30 pm

விவசாய போதனாசிரியர் பரீட்சை வகுப்பு

சனி 10.00 am -1.00 pm

EB Class

- அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான (DO) துரிதமீட்டல் வகுப்பு

எதிர்வரும் 22/12 பரீட்சைக்கான விசேட மீட்டல் வகுப்பு

சனி -03.00pm -06.00pm

ஞாயிறு 04.00pm - 06.00pm

- PMA - I,II,III

சனி - 03.00pm - 06.00pm

ஞாயிறு - 04.00pm - 06.00pm

- அதிபர் சேவைக்கான வகுப்பு

சனி - 4.30pm - 07.00pm

சிங்கள வகுப்புக்கள்

புதிய பிரிவு ஆரம்பம் - 03.12.2016

Batch - I சனி - 02.00 pm - 04.00 pm

Batch - II - 04.00 pm - 06.00 pm

மேற்படி வகுப்புக்கள் எமது கல்வி நிலையத்தில் வடமராட்சி மாணவர்களின் நன்மை கருதி பிரபல ஆசிரியர்களினால் நடத்தப்படுகின்றன.

உயர்கல்லூரி - NSB மேல்மாடி கொடிகாமம் வீதி, நெல்லியடி.

உயர்கல்லூரி No.81, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, (HNB Assurance Building)

தொடர்பு :- T.P. :- 0778760992, 0773443962

(C-6548)

**BARATHY**

கல்வி நிறுவனம் - சித்தன்கேணி

தரம் 6 முதல் 11 வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 04.12.2016 ஞாயிறு 8.00 am

நீங்கள் நன்கு அறிந்த வழமையான பிரபல ஆசிரியர் குழுவினால்

Note -

- மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளதனால் புதிய மாணவர்கள் உங்கள் இட நெருக்கடியை தவிர்க்கும் முகமாக முன் கூட்டி அன்றையதினமே அனுமதியை பெற்றுக் கொள்ளவும்.
- தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களிற்கான அனுமதியும் வழங்கப்படுகின்றன.
- விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புக்கள் நடைபெறும்.

அதிபர், ஆசிரியர்கள்

(C-6542)

**BIT Semester 5,3,1 & Project Classes**

கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து கணினி பட்டம் 2nd Upper உட்பட இதுவரை 50 இற்கும் மேற்பட்டோர் BIT பட்டம் பெற்றுள்ளனர். 10 வருட அனுபவம்

Windows based, Web based and Mobile based Projects

2007 இல் இருந்து Supervisor (60+ Projects)

Php, Vb.net C#, Ionic-2 AngularJS-2

Classes starts on coming Sunday 04-12-2016

Semi-5 at 6.30 am, Semi-3 at 9.30 am, semi-1 at 1.00 pm

By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS): 0779785796

New registrations with 3 passes in A/L at www.bit.lk from December 2016

(6768)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ (?) ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.